அருள்மிகு

அன்னையர் எழுவர்

ஸ்ரீசப்தமாதர்கள்



பூசை.ச.அருணவசந்தன்


பிராம்மி
மகேசுவரி
வராகி
இந்திராணி

உ

அன்னையர் எழுவர் அடியினை போற்றி!! அளவற்ற செல்வம் அருள்வீர் போற்றி!
பகைகளைக் கடியும் பாவையர் போற்றி! பல்வகை வளம் தரும் மாதரார் போற்றி! போற்றி!

அருள்மிகு

அன்னையர் எழுவர்

ஸ்ரீ சப்தமாதர்கள்



ஆசிரியர் சிவமஞ்சரிச் செம்மல், அருட்பணி அரசு, சிவசேவா ரதனம
பூசை.ச.அருணவசந்தன்

சிவசுந்தரி கலைக்கூடம்
29, பீமண்ண முதலி கார்டன் தெரு
ஆழ்வார்பேட்டை, சென்னை-18, அலைபேசி எண் 9941124964

நூலின் விவரம்

நூலின் பெயர் : அருள்மிகு அன்னையர் எழுவர் (ஸ்ரீ சப்தமாதர்கள்)

நூலின் ஆசிரியர் : பூசை.ச.அருணவசந்தன்

பதிப்புஆண்டு : முதற்பதிப்பு-29.11.2014(கார்த்திகை சதய நாள்);

உரிமை : ஆசிரியருக்கு

பதிப்பாளர்/ஆசிரியர்: பூசை.ச.அருணவசந்தன், ப.எண்.29,பீமண்ண முதலி கார்டன் தெரு ஆழ்வார்பேட்டை,சென்னை 600 018 அலைபேசி 9941124964

பக்கங்கள் : 120 + 16 ஆக 96 பக்கங்கள்

நூல் அளவு : கிரௌன் 1.4 -(24 c.m. x 18.2 c.m.)

அச்சிட்டுள்ள பரப்பளவு: 21.5 செ.மீ.X 15.2 செ.மீ.

பயன்படுத்தப்பட்டுள்ள தாள்: பலாப்பூர் 11.6கி.பயன்படுத்தப்பட்டுள்ள எழுத்துக்கள்: 11.8 ஸ்ரீலிபி

மின் அச்சுக்கோவை : சிவசுந்தரி, 14, செங்கழுநீர் பிள்ளையார் கோயில் தெரு [சி.பி.கோயில் தெரு], மயிலாப்பூர், சென்னை-4

மறுதோன்றி அச்சகம் : பிரிண்ட் டெக் இந்தியா,சென்னை-600 005,

நூலின் பொருள் : சிவபெருமானின் அஷ்ட பரிவாரங்களில் ஒன்றாகவும் நாடு, நகரங்களின் காவல் தெய்வங்களாகவும் விளங்கும் ஸ்ரீ சப்தமாதர்கள் பற்றிய செய்திகளின் தொகுப்பு திருக்கோயில்கள் பற்றிய செய்திகளின் தொகுப்பு .

நன்கொடை விலை : ரூபாய் 120/-

நூலகக் குறியீட்டு எண்: -

முன்அட்டையில் நடுவில் - பட்டாபிஷேக கோலத்தில் அன்னை மீனாட்சியும் சுற்றிலும் விநாயகருடன் சப்த மாதர்கள்:இரண்டு. மூன்றாம் அட்டைகளில் கோவை, அருணோதயம், அருணாசலா பவுண்டேஷனைச் சேர்ந்த திரு.ஆர். சதீஷ்குமார் அவர்களின் கைவண்ணத்தில் சப்தமாதர்கள் ; பின் அட்டையில் : சுற்றிலும் சப்தமாதர்களும் நாரசிம்மியும் குழந்தைகளுடன் வீற்றிருக்க நடுவில் முருகனுடன் மீனாட்சியம்மை.

இந்நூலைப் படிப்பதற்கு முன்...

பழம்பெருமை மிக்க சிவாலயங்களில், குறிப்பாகச் சோழர்காலச் சிவாலயங்கள் அனைத்திலும் சப்தமாதர்கள் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளனர். அதுமட்டுமின்றிச் சோழர் களின் ஆட்சியில் அனேக புதிய சப்தமாதர்கள் கோயில் அமைக்கப்பட்டுள்ளன. என்றாலும், சப்தமாதர்களைப் பற்றிய பரவலான செய்திகள் கிடைக்கவில்லை. வராக புராணம், மச்ச புராணம், ஆகம நூல்கள், பூஜா விதிகள் போன்றவற்றில் காணப்படும் செய்திகளும் மிகக் குறைவேயாகும்.எனது நெடிய கோயிற்பயணத்தில் கிடைத்த செய்திகள் சிலவற்றைத் தொகுத்து இப்போது இந்நூலை வெளியிட்டுள்ளேன். இவை நான் கண்டதும், கேட்டதும், படித்ததும், உணர்ந்ததுமாகும். இவற்றைப் படித்துத் தங்களின் மேலான ஆலோசனைகளை வழங்கவேண்டுமென்று பணிந்து கேட்டுக்கொள்ளுகிறேன்.-ஆசிரியர் பூசை.ச.அருணவசந்தன்

34-1





சிவபெருமானின் அஷ்டபரிவாரங்களுள் ஒன்றான
சப்தமாதர்களின் பெருமைகளைப் பற்றிப் பேசும் இந்நூல்
திருவாவடுதுறை ஆதீனத்தில் 23ஆம் குருமகாசந்நிதானமாக
எழுந்தருளியிருந்து செங்கோலோச்சிய

சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின்

இரண்டாவது குருபூசைத் திருநாளான, ஜயஆண்டு கார்த்திகை
சதய நாள் (29.11.2014) சனிக்கிழமை அன்று
திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம்
24ஆவது குருமகா சந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

அவர்களின் திருக்கரங்களால் வெளியிடப்பட்டது.





சிவமயம்

திருச்சிற்றம்பலம்

நாகை மாவட்டம் திருவாவடுதுறை - 609 803 போன் 04364-232021

திருக்கயிலாய பரம்பரை

திருவாவடுதுறை ஆதீனம் 24-வது குரு மகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்

அவர்களின்




அருளாசியுரை

தையல் நல்லாளைத் தவத்தின் தலைவியை
மையலை நோக்கும் மனோன்மணி மங்கையைப்
பையநின் றேத்திப் பணிமின், பணிந்தபின்
வெய்ய பவமின் மேவகி லாவே - திருமந்திரம்

சிவபெருமானின் அட்டபரிவாரங்களில் ஒன்றான ஸ்ரீ சப்தமாதர்களைக் காவல்தெய்வமாக வழிபடும் வழக்கம் நம் தமிழகத்தில் பழங் காலந்தொட்டே இருந்து வருகிறது. சிவாலயங்களில் அம்பிகைக்கு நடைபெறும் பஞ்சாவரண வழி பாட்டிலும், ஹோமவிதானங்களிலும் சப்தமாதர்கள் பரிவாரத் தெய்வங்களாக வழிபடப்பெறுகின்றனர். பிராமி, மஹேஸ்வரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்ற சப்தமாதர்களின் வழிபாட்டின் தோற்றமும், அவர்களின் புராணவரலாறுகளும், வழிபாட்டு முறைகளும், பயன்களும் இன்றைய நிலையும் எனப் பன்முகப் பார்வையில் இந்நூல் தொகுப்பைப்பெற்றுள்ளது.

ஸ்ரீசப்தமாதர்கள் பற்றிய பல அரிய செய்திகளைத் தொகுத்தோரும், இதனைப் படித்துப் பயன்கொள்வோரும், பிறர்க்குக் கொடுத்துப் புகழ் பெறு வோரும் ஆகிய அனைவரும் தீர்க்காயுளும், சிந்தித்த மனோரத சித்தியும், அஷ்ட ஐஸ்வர்ய ஆதிக்கமும், நித்திய மங்கள குருகடாட்சமும், மென்மேலும் பெருகி, இன்பமுற நமது ஆன்மார்த்த மூர்த்தியாகிய ஸ்ரீஞானமாடநடராஜப் பெருமான் திருவடி மலர்களைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

பெறுநர்
பூசை. ச. அருணவசந்தன்,
சிவசுந்தரி கலைக்கூடம்,
29, பீமண்ண முதலி தோட்டத்தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை-18.



நன்றிக்குரிய நமது நல்லாதரவாளர்கள்

வேதநிதி.ப்ரம்மஸ்ரீ ஜி. பரமேஸ்வரதீக்ஷிதர்
சிதம்பரம்

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.விஸ்வ.ஆறுமுகம்,
மேனாள் விஞ்ஞானி, சி.எல்.ஆர்.ஐ.கிண்டி

இருமொழிச்சீராளர்.திருவையாறு வே. ரமணன்
இருப்பு சிதம்பரம்

ப்ரம்மஸ்ரீ P.B. வெங்கட்ராமன்
ஆஷியானா சென்னை-18

திருமதி. பிரேமா வெங்கட்ராமன்
ஈஞ்சம்பாக்கம், சென்னை-41.

மோகன ராஜசிம்ம மகேந்திரன்
பெருமாளகரம், சென்னை

திருமதி.சியாமளா ஸ்ரீநிவாசகோபாலன்
திருவான்மியூர்

திரு. என்.கார்த்திகேயன். திருவல்லிக்கேணி

சிற்பஸ்ரீ சாமி.சுப்பையா ஸ்தபதியார்(குமாரர்)
சிவஸ்ரீ.சுவாமிநாதன் (சிவா)காஞ்சிபுரம்

டாக்டர்.திருமிகு. T.K.தேவராஜன்
திருமழிசை,சென்னை-124

திரு.M.S.முத்துக்குமார முதலியார்
மதுரவாயல்

திரு.வி. ராம்குமார்
ஸ்ரீவத்சம்கோடம்பாக்கம்.

திருமழிசை திரு. T.A.பன்னீர்செல்வம்
இருப்பு இந்திராநகர், சென்னை -20

சித்தாந்த ரத்தினம் டாக்டர்.C.ரவிசங்கர்
சற்குரு பல் மருத்துவமனை, புதுவை

சித்தாந்த ரத்தினம் வி.சி.கோபிநாத்
ஸ்ரீமங்கலம், பாண்டிச்சேரி

திரு.மோகன்(எ)சபாரத்தினசிவாச்சாரியார்,
மண்ணடி சென்னை-600001

சிவத்திரு.தங்க சொர்ணகுமார்(ரானே),
இராமாபுரம், சென்னை

டாக்டர் எம்.ஏ.ஆச்சால்,
குமாரர்,திரு.அமர்நாத்,வேலூர்

சிவத்திரு.B.S.R.முத்துக்குமார சிவாச்சாரியார்,
ஸ்ரீபாலவிநாயகர் ஆலயம், வாரன் ரோடு, மயிலை.

குருஜி.கே.கே. கோபாலன் சர்மா
பரமேசுவரி நகர், அடையாறு,சென்னை-20

செல்வத்திருமதி. S. பத்மா
தனலட்சுமி வங்கி, சென்னை

திருமுறைச் செல்வன் திரு.ஆர்.ராஜ்
மந்தைவெளி,சென்னை -28

சிவஸ்ரீ .ஆர். கண்ணன்
ராஜலட்சுமி அப்பார்ட்மெண்ட்ஸ் மேற்குமாம்பலம்

திரு.க.பாஸ்கர்,
நூலகர், ஸ்கூல் ஆப் எக்னாமிக்ஸ், சென்னை

பேரா.பழ.முருகேசன்,
S.A பொறியியல்கல்லூரி, சென்னை

திரு. சம்பத், ஆசிரியர், திருமழிசை

சித்தாந்த ரத்தினம் இரா.இராமச்சந்திரன்,
நூம்பல்

திரு.கிருஷ்ணமூர்த்திஆடிட்டர்
கடலூர்

வாழி நலம் சூழ!



இந்த இனிய வேளையில்.....

பாரததேசத்தின் பழம்பெருமை மிக்க தாய்த்தெய்வ வழிபாட்டில் அதி யுன்னத இடத்தைப் பெற்றிருப்பவர்கள் சப்தமாதர்கள். சிவபெருமானின் பரி வாரங்களில் ஒன்றாக இவர்கள் இருக் கின்றனர். இவர்களை மக்கள் காவல் தெய்வங்களாகவும், வளமான வாழ்வு தரும் தெய்வங்களாகவும், செல்வம் அருளும் தேவியராகவும் போற்றிக் கொண்டாடுகின்றனர். இவர்களின் பெருமைகளை விளக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. இந்நூலை எமது எழுத்துப் பணிகளுக்கு நல்லாதரவை நல்கி அருளும், பொருளும் வழங்கி என்னை ஆதரித்து அரன்பணியைத் தொய்வின்றித் தொடரத் துணைநின்ற திருக்கயிலாய பரம்பரைத் திருவாடு துறை ஆதீன 23ஆம் குருமகா சந்நிதா னமாக வீற்றிருந்த **சீர்வளர்சீர் சிவப் பிரகாச தேசிக பரமாச்சார்ய சுவாமிகளின்** இரண் டாவது குருபூஜை விழாவில் வெளியிடு வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அவரைத் தொடர்ந்து, அதே நல் லாதரவைத் தொடர்ந்து அளித்துஅருள் பாலித்து வரும் 24வது குருமகா சந்நிதானம் **ஸ்ரீலஸ்ரீ அம்பல வாண தேசிக பரமாச்சார்ய சுவாமிகள்** திருவடிகளைப் போற்றி வணங்குகிறேன்.

இந்த இனிய வேளையில், இந்நூல் மலரத் துணை நின்ற அனைவரையும் நன்றி பாராட்டி வணங்கிப் போற்று கின்றேன். எமது பணிகளுக்கு நல்லாத ரவை நல்கி வரும் எனது அன்பிற்கினிய சகோதரி **திருமதி. அனந்தலட்சுமி,** அவரது கணவர் **வரத வீரராகவன்** அவர்களுக் கும், எப்போதும் துணையிருந்து ஆலோசனைகள் வழங்கி படிகளைத் திருத்தி உதவிவரும் **சித்தாந்த ரத்தி னம்.டாக்டர். விஸ்வ ஆறுமுகம்** (மேனாள் விஞ்ஞானி,) அவர்களுக்கும் எனது பணிகளுக்கு ஆதரவாக இல்லப் பொறுப்புக்களை ஏற்று நடத்தி வரும்



எனது மனைவி திருமதி. வசந்தா அவர்களுக்கும் எனது இதயம் கனிந்த நன்றி மலர்களைத் சூட்டி மகிழ்கிறேன்.

சப்தமாதர்கள் பற்றிய செய்திளை உதவி இந்து சமய அறநிலையத்துறை மேனாள் உதவிஆணையர் திரு.இரா. இரகுநாதன், தமிழ்நாடு தொல்லியல் துறை மேனாள் அதிகாரிகள் திரு.பூங்குன்றன், திரு.உத்திராடம், தல யாத்திரையில் உடன் வந்து உதவி ஸ்பீகல் பிரிண்டர்ஸ் திரு.குமார் (பாலசுப்பிரமணியம்) கோட்டோவியங்கள் வரைந்தளித்த மயிலை திரு.காசி. ஸ்தபதியார் ஆகியோருக்கு இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கோவை அருணாச்சலா பௌண்டேஷன் - அருணோதயம் திரு. வடிவேல் கண்ணன் அவர்களிடம் இந்நூலைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்த போது சப்த மாதர்கள் வண்ணப்படம் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று கூறினேன். சில நாட்களில் தமது **அன்பர் கோவை ஆர். சுரேஷ்குமார்** அவர்கள் தீட்டிய அற்புதமான சப்தமாதர்களின் வண்ணப் படங்களை எனக்கு அனுப்பி உதவினார்கள். அவருக்கும் அவரது அன்பர் **திரு.ஸ்ரீதர் (சாந்தி ஏஜென்சீஸ்) ஓவியர் ஆர்.சுரேஷ்குமார்** ஆகியோருக்கும் எனது இனிய நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

பதிப்புப் பணியில் துணை நிற்கும் திரு.என்.முருகன், நிழற்படப் பிரதியாளர் சத்யாபிராசஸ் திரு. ராதாகிருஷ்ணன் மறு தோன்றிஅச்சக உரிமையாளர் கட்டமைப்பாளர் சண்முகா பைண்டிங் திரு.ரமேஷ் ஆகியோருக்கு எமது இதயம் கனிந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.


அன்பர்கள்அனைவருக்கும் அதிசய வடிவுடை கற்பகவல்லி உடனாய ஆனந்த பைரவ கபாலீசுவரப் பெருமான் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை அளித்து இன்பமுடன் வாழ வைக்க வேண்டுமென்று அவர்தம் பொற்பாதங்களைப் போற்றி வணங்கி வேண்டிக் கொள்ளுகிறேன்.

என்றும் சிவப்பணியில்,
மீளா அடிமை
பூசை.ச. ஆட்சிலிங்கம் (எ)
பூசை. ச.அருணவசந்தன்.

சிவசுந்தரி கலைக்கூடம்
29, பீமன்ன முதலி கார்டன் தெரு,
ஆழ்வார்பேட்டை, சென்னை-18
29.11.2014



அன்னையர் எழுவர் அடியிணை போற்றி!! அளவற்ற செல்வம் அருள்வீர் போற்றி!
பகைகளைக் கடியும் பாவையர் போற்றி! பல்வகை வளம் தரும் மாதரார் போற்றி! போற்றி!



அருள்மிகு அன்னையர் எழுவர்

(ஸ்ரீ சப்தமாதர்கள்)

பாரத தேசத்தின் தொன்மை மிக்க பெண் தெய்வக்கூட்டங்களில் சப்தமாதர் கள் கூட்டமும் ஒன்றாகும். இவர்களை மாத்ருகணம் என்பர். சிவபெருமான் அந்தகாசுரனை வதம் செய்த காலத்தில் அவனது படைகளை அழிக்க இவர்களைத் தோற்றுவித்தார் என்று வராக புராணம் கூறுகிறது. சிவபெருமானின் அஷ்ட பரி வாரங்களில் ஒன்றாக இப்பெண்களின் கூட்டம் திகழ்கிறது. அம்பிகை பராசக்தி யின் கணங்களாகவும் இவர்கள் போற்றப் படுகின்றனர். சாக்த தந்திரங்களில் போற்றப் படும் ஸ்ரீ சக்கரத்தில் அதன் எட்டுத் திசை களில் இருந்தும் காக்கும் தெய்வங்களாக இவர்கள் குறிக்கப்பட்டுள்ளனர்.

பைரவ வழிபாட்டில் இவர்கள் பைரவ ரின் சேனாதிபதிகளான அஷ்டபைரவர் களின் தேவியர்களாகக் குறிக்கப்பட்டுள் ளனர். நாட்டுப்புற வழக்கிலும் பிள்ளைத் தமிழ் நூல்களிலும் குழந்தைகளைக் காக் கும் தெய்வங்களாக இவர்கள் போற்றப்படு கின்றனர். சோழர்கள், பல்லவர்கள், பாண் டியர்கள், சேரர்கள் ஆகிய முடியுடை மன்னர்கள் இவர்களைக் கிராமங்களைக் காக்கும் தெய்வங்களாகப் போற்றி ஊருக்கு வடக்கில் இவர்களுக்குத் தனி ஆலயம் அமைத்து வழிபட்டுள்ளனர்.

இவ்விதம் பல்வேறு நிலைகளில் காவல் தெய்வங்களாகப் போற்றப்படும் சப்தமாதர்களைப் பற்றி இயன்றவரை தொகுக்கப்பட்ட செய்திகளைத் தாங்கிய வாறு,"**அருள்மிகு அன்னையர் எழுவர்**" என்ற பெயரில் இந்நூல் மலர்ந்து தங்கள் திருக் கரங்களில் தவழ்கிறது. இவற்றிலுள்ள செய்தி களைப் படித்து அன்னையின் அருள் பெற அனைவரையும் அன்புடன் அழைக் கிறோம்.

இந்த இனிய வேளையில், சப்த மாதர்கள் போற்றி வழிபடும் புன்னை வனத்து மயிலான கற்பகவல்லியும் அவ ளைத் தழுவி நிற்கும் கபாலீசப் பெரு மா னும் அன்பர்கள் யாவருக்கும் சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வை நல்கி எந் நாளும் இன்பமுடன் வாழ்விக்க வேண்டு மென்று அவர்தம் பொன்னார் திருவடிக ளைப் போற்றிப் பணிந்து வேண்டுகிறோம். வாழிநலம் சூழ.

- சிவசுந்தரி

பெண்கள் எழுவர் வழிபாடு - அறிமுகம்



ஏழு என்ற சொல், ஏழு என்ற எண்ணிக்கையைக் குறிப்பதுடன், எண்ணி முடியாத அளவுள்ள தொகையைக் குறிக்கும் குறியீடாகவும் கொள்ளப்படுகிறது. கணிதத்தில் எண்ணிக்கையில் வரையறுத்துச் சொல்ல முடியாதபோது பயன்படுத்தும் இன்பினிட்டி என்ற குறியீட்டுக்கு ஒப்பாகத் தமிழில் ஏழு என்பது பயன்படுத்தப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, உயிர் எண்ணில்லாத பிறவிகளை எடுத்து உழல்கிறது. அதைக் குறிப்பால் உணர்த்த நடைமுறையில் ஏழ்பிறப்பு என்கிறோம். ஆண்டாள் திருப்பாவையில் **ஏழேழ் பிறப்பு** என்கிறாள்.

சங்க இலக்கியத்தில் ஏழு கற்புடைப் பெண்களை மக்கள் போற்றி வழிபட்ட குறிப்பு உள்ளது. சிலப்பதிகாரத்தின் நாயகியான கண்ணகி ஆதிமந்தி முதலிய கற்புடைப் பெண்கள் ஏழு பேரைக் கூறி, அவர்கள் வாழ்ந்த மண்ணில் இருந்து தான் வருவதாகக் கூறுகின்றாள்.

உலகில் தோன்றி பூப்பெய்தி வாழ்ந்து திருமணம் காணாது மறைந்து முடிந்த கன்னிப் பெண்கள் எண்ணில்லாதவர்கள். அகால மரணமடைந்த அவர்கள் கால ஓட்டத்தால் தெய்வநிலை பெற்று, மக்களால் வழிபடுதெய்வங்களாக மாறியுள்ளனர். அவர்கள் அனைவருடைய திருவுருவங்களையும் ஒன்றாக எழுந்தருளி வைத்து, அபிஷேகித்து அலங்காரம் செய்து வழிபட முடியாது என்பதால், அவர்களைக் குறிக்கும் வகையில் ஏழு பெண்களின் திருவுருவங்களை வைத்து "**சப்த கன்னியர்** "என்று வழிபடுகின்றனர். இது போல் கற்புடை மங்கையர், மகாவீரர்கள், முனிவர்கள் எனப் பல சிறப்பு மிக்கவர்களின் கூட்டத்தைக் குறிக்க, ஏழு திருவுருவங்களை அமைத்து வழிபடும் வழக்கமும் தொன்றுதொட்டு இருந்து வருகிறது.

இவற்றின் மூலம், ஏழு பெண் தெய்வங்களை ஒன்றாக வைத்து வழிபடும் வழக்கம் காலங்காலமாக இருந்து வருவதை அறிய முடிகிறது. இத்தகைய வழிபாடுகளில் சப்தமாதர் வழிபாடும் ஒன்றாகும். தமிழகத்தில் சப்தமாதர் வழிபாடும், கன்னிமார் வழிபாடும் தனிச் சிறப்புடன் இருந்து வருகின்றன.

இந்த இரண்டு பெரும் கூட்டங்களைத் தவிர பச்சையம்மன் கோயிலிலும் எழுமங்கையர் வழிபாட்டைக் காண்கிறோம். இதில் தலைமைத் தெய்வமான பச்சைவாழி அம்மன், காத்தாயி, முடியால் அழகி, பூங்குறத்தி, ஆனைமேல் அழகி, வனக்குறத்தி, வேங்கைமலை நாச்சியார் ஆகிய எழுவர் வழிபடப்படுகின்றனர்.

ஏழு பெண்களை வழிபடும் வழக்கம் பல்லாயிரம் ஆண்டுகளாகப் பாரததேசத்தில் தொடர்ந்து இருந்து வருகிறது.

சப்தமாதர் வழிபாடு – அறிமுகம்



பாரததேசத்தின் பழம்பெருமை மிக்க தெய்வ வழிபாடுகள் அனைத்திலும் துணைத் தெய்வவழிபாடாகச் சப்தமாதர் எனப்படும் ஒரே வரிசையில் அமைந்த ஏழு பெண் தெய்வங்களின் வழிபாடும் இடம் பெற்றிருக்கிறது. சப்தமாதர்கள் தனிப் பெருஞ்சக்தி பெற்ற பெண்தெய்வக் கூட்டமாக இருக்கின்றனர். இவர்களின் பெயர்கள் முறையே பிராமி, மகேஸ்வரி, வாராகி, வைஷ்ணவி, கௌமாரி, இந்திராணி, சாமுண்டி என்பதாகும். இவர்களைப் பயிர்த் தொழிலுக்குரிய தெய்வங்களாகவும் யோகக் கலையின் ஆதார தெய்வங்களாகவும், போர்த் தெய்வங்களாகவும் பல்வேறு நிலைகளில் வைத்து அன்பர்கள் கொண்டாடிவருகின்றனர். இவர்களுடன் துணைத் தெய்வங்களாக விநாயகரும் பிரம்மசாத்தனும் எழுந்தருளியுள்ளனர்.

சைவம், சாக்தம், வைஷ்ணவம் முதலான சனாதன சமயத்தின் உட்பிரிவுகளில் மட்டுமின்றி, சமணம் பௌத்தம் போன்ற சமயங்களிலும் சப்தமாதர் வழிபாடு தனி இடம் பெற்றுள்ளது.

சைவ சமயத்தில், சிவபெருமானுடைய அஷ்டபரிவாரங்களில் ஒன்றாகச் சப்தமாதர் கூட்டம் இருக்கின்றது. ஆகம வழிப்பட்ட தொன்மைச் சிவாலயங்கள் அனைத்திலும், தெற்குப் பிராகாரத்தில், (தட்சிணாமூர்த்திக்கு நேர்எதிரில்) சப்த மாதர்களை வைத்து வழிபடுகின்றனர்.

சிவாலயங்களில் எழுந்தருளியிருக்கும் அம்பிகை சந்நிதிகளில் நடைபெறும் பஞ்சாவரண பூசைகளிலும், ஹோம விதானங்களிலும் சப்தமாதர்கள் பரிவார தெய்வங்களாகப் பூசிக்கப்படுகின்றனர்.

சாக்த தந்திரங்களில், சப்தமாதர்கள் தனியிடம் பெற்றுள்ளனர். சாக்த தந்திரத்தின் முதன்மை பெற்ற நூல்களில் ஒன்றான **லலிதா சகஸ்ரநாமத்திலும், லலிதோபாக்யானத்திலும்** சப்தமாதர்கள் சிறப்புடன் போற்றப்பட்டுள்ளனர்.

அம்பிகையின் பூசையில் அமைந்த ஸ்ரீசக்ரத்தில் பூபுரம் எனப்படும் மூன்று சதுரக் கோடுகள் உள்ளன. இதற்குத் திரைலோக்கிய மோகன சக்கரம் என்பது பெயர். இதிலுள்ள வெளிச்சதுரத்தில் பத்து தேவதைகளும், உள்சதுரத்தில் பத்துமுத்திரா தேவிகளும் வணங்கப்படுகின்றனர். நடுவிலுள்ள சதுரத்தின் மேற்கே பிராமியும், வடமேற்கில் வாராகியும், வடக்கில் மஹேஸ்வரியும், வடகிழக்கில் இந்திராணியும்,

கிழக்கில் கௌமாரியும், தென்கிழக்கில் மகாலட்சுமியும், தெற்கில் வைஷ்ண வியும், தென்மேற்கில் சாமுண்டியும் பூசிக் கப்படுகின்றனர்.

முருக வழிபாட்டிலும் சப்தமாதர்கள் இடம் பெற்றுள்ளனர். ஜைன சமய பூசை களில் சப்த மாதர் வழிபாடு பரவலாக இல்லாவிட்டாலும் ஒரு சில நூல்களில் குறிக்கப்பட்டுள்ளது.

கிராமியத் தெய்வ வழிபாட்டிலும் சப்த மாதர்கள் சிறப்புடன் போற்றப்படு கின்றனர். பல்லவர்களும், சோழர்களும் பழைய ஊர்களைப் புதுப்பித்தபோதும், புதிய ஊர்களை நிர்மாணித்தபோதும், அந்த ஊர்களின் காவல் தெய்வமாகச் சப்தமாதர்களை நிலைப்படுத்தினர். இவ் வகையில் தென்னகமெங்கும் ஏராளமான சப்த மாதர்கள் ஆலயங்கள் இருக்கின்றன.

சப்தமாதர்கள் தோன்றியதற்கான வரலாற்றைப் புராணங்கள் பலவிதமாகக் கூறுகின்றன. கூர்மபுராணம், வராகபுரா ணம், மச்ச புராணம் முதலியவற்றிலும் ஆகம நூல்கள் பலவற்றிலும் சப்தமாதர் களின் தோற்றம் பற்றிய வரலாறுகள் இடம் பெற் றுள்ளன.



ஸ்ரீ மகேசுவரி சிவபூஜை செய்தல் ஸ்ரீ

வராக புராணத்தில் அந்தகாசுர வதத் தின் பொருட்டுச் சிவபெருமான் எட்டுகீழ் மைக் குணங்களில் இருந்து எட்டு சக்தி களைப் படைத்ததாகக் கூறப்பட்டுள்ளது. காமத்திலிருந்து யோகேஸ்வரியும், க்ரோ தத்திலிருந்து மகேஸ்வரியும், லோபத்திலி ருந்து வைஷ்ணவியும், மதத்திலிருந்து பிராம்மியும், மோஹத்திலிருந்து கௌமாரி யும், மார்ச்சர்யத்திலிருந்து இந்திராணியும், பிசுனத்திலிருந்து சாமுண்டியும், அசூயை (பொறாமை)யில் இருந்து வராகியும் தோற்றுவிக்கப்பட்டனர் என்று கூறப்பட் டுள்ளது. இவர்கள் அந்தகாசுர வதத்திற்குப் பிறகு சிவபெருமானை ஆராதித்து, அவர் ஆணைப்படி, திருமால், பிரமன், குமாரன், வராகர் முதலியவர்களை ஆராதித்து அவர் களுடைய சாரூபத்தைப் பெற்றார்கள் என்பர்.

கூர்ம புராணத்தில் பிரம்ம தேவரே இவர்களைப் படைத்துத் தேவிக்குப் படை யாக அனுப்பியதாகக் கூறப்பட்டுள்ளது.

வேறொரு புராணத்தில் அந்தகாசுரனை அழிக்கச் சென்ற சிவபெருமான், அவன் மீது பாணங்களை விடுத்தார். அவை அவனது உடலைத் துளைத்து இரத்தத்தை வழியச் செய்தன. இரத்தத் துளிகள் பூமியில் விழும் பொழுதெல்லாம் புதிது புதிதாக அந்தகா சுரர்கள் உண்டாகிக் கொண்டே இருந்தனர். அவர்களை அழிக்கவும், சேனைகளை நாசப்படுத்தவும், பூமிதேவி, திருமால், பிரமன், முருகன், நரசிம்மர், வராகர், மகேசுவரர் இந்திரன் ஆகியோர் தமது

சக்தியை உடன் அனுப்பினர். அந்தச் சக்திகள் பெண் வடிவில் சென்றனர் என்றும், அவர்களே சப்தமாதர்களென்றும் சாக்த நூல்கள் கூறுகின்றன.

இவர்கள் சிவபெருமானின் அருளால் தோன்றிய அஷ்டபைரவர்களை மணந்தனர் என்று கூறப்படுகிறது.

சப்தமாதர்களின் தோற்றம் பற்றிய வரலாறு ஒன்று நாட்டுப்புற வழக்கில் உள்ளது. அதன்படி உலகம் செயல்பட இறைவனால் கணக்கற்ற சக்திகள் படைத்து அனுப்பப்பட்டுள்ளனர். நாம் அந்தச் சக்திகள் அனைத்தையும் வழிபட முடியாது என்பதால் அவர்களில் முதன்மை பெற்ற ஏழு சக்திகளை வைத்து வழிபடுகிறோம். இவ்வகையில் உலகைப் படைக்கும் கடவுளான பிரம்மதேவன், காக்கும் கடவுளான திருமால், ஓயாது அழித்துப் புதுமைகளைப் படைக்கும் உருத்திரன் காவல் தொழிலைக் கொண்டுள்ள முருகன், மழை தரும் கடவுளான இந்திரன், பகைவர்களை அழிக்கும் யமன், பூமாதேவி ஆகிய எழுவரின் சக்தி வடிவங்களை ஒன்றாக வைத்து வழிபடுகிறோம். பிரமனின் சக்தி பிராமியாகவும், உருத்திரனின் சக்தி மகேசுவரியாகவும், திருமாலின் சக்தி வைஷ்ணவியாகவும், முருகனின் சக்தி கௌமாரியாகவும், பூமிதேவியின் சக்தி வராகியாகவும், இந்திரனின் சக்தி இந்திராணியாகவும், யமதருமனின் சக்தி சாமுண்டியாகவும் இருப்பதாகக் கூறுவர். இவர்களை வழிபடுவதால் அச்சமற்ற, பாதுகாப்பான, வளம் மிகுந்த இன்பமயமான, மனம் நிறைந்த சுகமான வாழ்வு கிடைக்கும் என்று உறுதியாக நம்புகின்றனர்.

குழந்தைகளைக் காக்கும் தெய்வங்களில் சப்தமாதர் கூட்டமும் ஒன்றாகும். பிள்ளைத் தமிழ் நூல்களின் காப்புப் பருவத்தில் பிள்ளையைக் காக்க வேண்டி, வேண்டுகின்ற பாடல்களில் சப்தமாதர்களிடம் வேண்டுவதும் இடம் பெற்றுள்ளது.

சப்தமாதர் வழிபாடு இரண்டாம் நிலையில் இருந்தாலும், சக்தி வாய்ந்ததாகவும் பரவலாகவும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளைக் கடந்த பழமை மிக்கதாகவும் இருந்துவருகின்றது.



ஸ்ரீ கௌமாரி – தூண்சிற்பம்
மதுரை மீனாட்சியம்மன் கோயில்

சப்தமாதர் திருமேனிகள்

1. பிராமி – நான்கு முகம் கொண்டவள். மேற்கரங்களில் கெண்டி ஜெப மாலை ஏந்தி முன்கரங்களில் அபய,வரத முத்திரைகளைத் தரித்தவள். பொன்னிற மானவள். பத்மாசனத்தில் வீற்றிருப்பவள். அன்ன வாகனத்தில் பவனி வருபவள். தூய வெண்ணிற ஆடைகளை அணிந்தவள். சில நூல்களில் சுருக், சுருவம் ஆகிய ஹோம கரண்டிகளை ஏந்தியவளாகவும் காட்சி தருகிறாள்.

2. மகேசுவரி – ஜடாமகுடம் தரித்து அதில் கொன்றை மாலையும் இளம்பிறையும் சூடியவள். பெரும்பாலும் மேற்கரங்களில் மான், மழு ஏந்தியவளாகக் காட்டப் பட்டுள்ளாள். சில இடங்களில் தட்சிணா மூர்த்தியைப் போல பாம்பு, தீ அகல் ஏந்தியவளாகவும் காட்டப்பட்டுள்ளாள். புலித் தோலாடை புனைந்தவள். இடப வாகனத்தை உடையவள். முன் கரங்களில் அபய வரத முத்திரைகளைத் தரித்தவள்.

3. கௌமாரி – மேற்கரங்களில் வஜ்ஜிரம், சக்தி ஆகியவற்றை ஏந்தியவள். (சில நூல்கள் ஜெபமாலை, சக்தியுடன் காட்சி தரு கிறாள்) சிவப்பு வண்ண ஆடை அணிந் தவள். சில சமயம் வேல், வில்லுடனும் காட்சி தருபவள். மயில் வாகனத்தில் பவனி வருபவள். முன்கரங்களில் அபய,வரத முத்திரைகளைத் தரித்தவள்.

4. வைஷ்ணவி – மேற்கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தியவள். நீலமேனி கொண்ட இவள் மஞ்சள் வண்ண (பீதாம்பர) ஆடைகளை அணிந்து துளசி மாலையைச் சூடியுள்ளாள். கருட வாகனத்தை உடையவள். சில சிற்பங்களில் பஞ்சாயுதங்களை ஏந்தியவளாக அமைத்துள்ளனர்.

5. வாராகி – பத்மராக வண்ணத்தினள். பச்சைப் பட்டாடை அணிந்தவள். மேற் கரங்களில் ஏர், உலக்கை ஆகியவற்றை ஏந்தியவள்.(சில கோயில்களில் சங்கு சக்கரம் ஏந்தியவளாகவும், வாள் கேடயம் ஏந்திய வளாகவும் அமைத்துள்ளனர். செங்காந்தள் மலர்களைச் சூடுபவள். எருமை அல்லது சிங்கவாகனத்தில் பவனிவருபவள்.

6. இந்திராணி – இந்திர நீல வண்ண மேனியனான இவள் பூம்பட்டாடைகளை உடுத்தி ஐராவதத்தின் மீது பவனி வருகிறாள். மேற்கரங்களில் வஜ்ரம் - அங்குசம் அல்லது இரண்டு கரங்களிலும் இரண்டு வஜ்ஜிரங்களைத் தாங்குகிறாள். முன் கரங்களில் அபய வரத முத்திரை தரித்துள்ளாள். இவள் இரண்டு கால்களையும் தொங்கவிட்டு இராஜ கோலாகலத்தில் வீற்றிருக்கின்றாள்.

7. சாமுண்டி– தலைமுடியை விரிந்த ஜடாமண்டலமாக முடிந்தவள். அதில் பாபி மண்டையோடு சந்திரனைச் சூடியவள். விழித்த அகன்ற கண் வாளையும் வாயிதழ் ஓரங்களில் வளைந்த கோரைப் பற்களையும் கொண்டவள். காதில் பிணத்தோட்டையும், மார்பில் மண்டையோட்டு மாலைகளையும் அணிந்தவள். பிரேதத்தை வாகனமாக உடையவள் என்று நூல்கள் குறித்தாலும் சிங்கத்தையும் வேதாளத்தையும் இவளுக்கு அமைத்துள்ளனர்.

வீரச் சங்கிலிகளை அணிந்து கத்தி, கேடயம், கபாலம், திரிசூலம் ஆகியவற்றைத் தாங்கியவள். உக்ர மயமான தோற்றத்தில் இருப்பினும் வரங்களை வாரி வழங்குபவள்.





சப்தமாதர்களின் தோற்றமும் நிலைப்பேறும்

சிவபெருமான் புரிந்த அட்டவீரட்டச் செயல்களில் ஏழாவதாகத் திகழ்வது அந்தகாசுரனை வென்ற வீரட்டகாசமாகும். இதனை அவர் **திருக்கோவலூர்** என்னும் தலத்தில் நிகழ்த்தியதாகப் புராணங்கள் கூறுகின்றன.

அந்தகன் என்ற சொல் யமதருமனைக் குறிப்பதாகும். அவன் தரும நியாயங்களை மட்டுமே கருத்திற் கொண்டு உயிர்களுக்கு உரிய தண்டனைகளை வழங்குகின்றான். அவனிடத்தில் பச்சாதாபம், கருணை, குழைவு, கனிவு எதுவும் இருப்பதில்லை. தீர்ப்பு வழங்கும் போது அவன் கண்ணற்றவன் போல் நடந்து கொள்வதால், அவன் அந்தகன் எனப்பட்டான். இலக்கியங்களும் புராணங்களும் யமனை அந்தகன் என்றே அழைக்கின்றன.

ஆனால் இங்கு குறிக்கப்படும் அந்தகன் வேறு ஒருவனாவான். அவனைப் பற்றியும் அவனைச் சிவபெருமான் சம்ஹாரம் செய்ததையும் சிவமகாபுராணம், தல புராணங்கள், தமிழ்மறைகள் முதலான நூல்கள் தனிச் சிறப்புடன் போற்றுகின்றன. அந்த வரலாற்றை இங்கே காணலாம்.

ஒரு சமயம் சிவபெருமான் உமாதேவியுடனும், தமது கணங்களோடும் மந்திர மலை மீது வீற்றிருந்தார். அங்கு முனிவர்களும் தவசிகளும் கூடியிருந்து எல்லையற்ற மகிழ்ச்சியுடன் அவர்களை ஆராதித்து வந்தனர்.

ஒருநாள் விளையாட்டாகப் பார்வதி தேவியார் சிவபெருமானின் கண்களைக் கைகளால் மூடி மறைத்தாள். அதனால் சூரிய, சந்திரர்களும், நட்சத்திரங்களும் தமது ஒளியை இழந்தனர். உலகமே இருண்டு அந்தகாரத்தில் மூழ்கியது. இதைக் கண்டு அச்சத்தால் அவளுடைய கரங்களில் வியர்வை அரும்பியது. அச்சமயம் உலகிற்கு ஒளியூட்ட, சிவபெருமான் நெற்றிக் கண்ணைத் திறந்தார். ஒளி கிடைத்தது என்றாலும் அதிலிருந்து கடும் வெப்பம் தோன்றியது. அந்த வெப்பமும் அம்பிகையின் வியர்வைத் துளிகளும் சேர்ந்து, ஒரு கரு உண்டாயிற்று.

அந்தக் கருவிலிருந்து அஞ்சத்தக்க கொடிய உருவமும், அழகற்றதும், சடை,



ஓ இரணியனைச் சங்கரிக்கும் நரசிம்மர் ஓ

தாடி, மீசைகள் அடர்ந்ததும், கருமை வண்ணமானதும், அழுகையுடன் சிரிப்பும், கலந்து பிரளயகாலமேகம் கர்ச்சிப்பது போன்ற குரலைக் கொண்டதுமான குழந்தை தோன்றியது. அப்போது சிவ பெருமான், பார்வதி தேவியிடம், "பெண்ணே! நீ எனது கண்களை மூடி இத்தகைய ஒருவனைப் படைத்து என்னை அச்சப்படுத்துகிறாயா?" என்றார். அவள் அவரது கண்களைப் பொத்தி மறைத் திருந்த தனது கைகளை விலக்கிக் கொண்டாள்.

அங்கு கோர ரூபத்துடன் தோன்றிய அக்குழந்தையைக் கண்டு அனைவரும் அஞ்சினர். பார்வதியும் அஞ்சினாள்.

அவள் "பெருமானே! இவன் யார்?" என்றாள். அவளை நோக்கிச் சிவபெருமான் "அஞ்சாதே, இவன் எனது மகனே! நீ எனது கண்களை மூடியபோது, உனது வியர்வை நீராலும் எமது அக்னியாலும் பிறந்துள்ளான். இவனை நீ ஒரு வருஷம் காத்து வளர்த்து வருக" என்றார். அவளும் அதையேற்றுத் தனது மாளிகையில் அவனை வளர்த்து வந்தாள். நாட்கள் நகர்ந்தன.

பூமியில் இரணியாட்சன், இரணிய கசிபு என்ற இரண்டு அசுர சகோதரர்கள் தோன்றி னர். அவர்கள் அளவற்ற வலிமை படைத்த வர்களாக விளங்கினர். இளையவனான இரணியகசிபுக்கு பிரகலாதன் முதலான நான்கு புதல்வர்கள் இருந்தனர்.

மூத்தவனான இரணியாட்சனுக்குப் புத்திரப்பேறு வாய்க்கவில்லை. அவன் காட்டிற்குச் சென்று சிவனை நோக்கிக் கடுந்தவம் புரிந்தான். அவனுடைய தவத் தால் மகிழ்ந்த சிவபெருமான் அவனுக்குக் காட்சி தந்து "அன்பனே! உனக்கு வேண்டிய வரத்தைக் கேள்" என்றார். "ஐயனே எனது சகோதரனுக்குப் பேர் சொல்லப் பிள்ளைகள் உள்ளனர். எனக்குப் புத்திரப்பேறில்லை. ஆதலின் எனக்குப் புத்திரப்பேற்றை அருளுக" என்றான்.

சிவபெருமான் "அசுரனே. உனக்கு உனது வீரியத்தில் இருந்து புத்திரன் பிறக்க மாட்டான். ஆதலால் எனது புத்திரனும் வலி மை பொருந்தியவனும் யாராலும் ஜெயிக்க முடியாதவனுமான இந்தக் குழந்தையைத் தருகிறேன். இவனைப் புத்திரனாக வரித்துக் கொள்" என்று கூறினார். பின்னர் பார்வதியின் பாதுகாப்பிலுள்ள **அந்தகாசுரனை** அழைத்து, அவனுக்கு மகனாக அளித்தார். அவன் மகிழ்ச்சியுடன் அந்தக் குழந்தையைப் பெற்றுக் கொண்டு தனது அரண்மனைக்குத் திரும்பினான். காலங்கள் சென்றன.

ஒரு சமயம் இரணியாட்சன் தனது அசுர புத்தியால் உலகத்திலுள்ளவரைத் துன்புறுத் தியதுடன், உலகைப் பாய் போலச் சுருட்டிச் சென்று கடலுக்கு அடியில் ஒளித்து வைத்து விட்டான். தேவர்களும், முனிவர்களும் இதைத் திருமாலிடம் கூறினர்.

திருமால் வராக அவதாரம் எடுத்து, கடலுக்கு அடியில் சென்றார். இரணியாட் சனைக் கொன்று, பூமியைப் பழையபடி நிலைப்படுத்திவிட்டுத் தன்னுலகம் சென்று யோக நித்திரையில் ஆழ்ந்தார்.

அந்தகன் குருடனாக இருந்ததால், இரணியாட்சனுக்குப் பிறகு இரணியகசிபு அரசனானான். ஆரம்பத்தில் அவன் நல்லவ னாகவே இருந்தான். பிரம்ம தேவனை உபாசித்து அனேக வரங்களைப் பெற்றுச் சுகமாக அரசாண்டு வந்தான். காலம் செல்லச்செல்ல அவனுக்குக் கொடிய எண்ணங்களும் அகங்காரமும் தோன்றின. அதனால் தேவர்களையும் முனிவர்களையும் படாத பாடு படுத்தினான்.

அவனுடைய கோபம் மகாவிஷ்ணுவின் பேரில் திரும்பியது. அவரைக் கொல் லத் துடித்தான். திருமால் அவ னுடைய தவஆற்றலை மதித் துக் காலம் வரும் வரை மறை வாக இருந்து காத்திருந்தார். அவனுடைய நல்வினைக் காலம் முடிந்ததால், திருமால் நரசிங்க வடிவம் கொண்டு அவனையும் அழித்தார்.

பிறகு அவன் மகனான பிரகலாதனுக்கு முடிசூட்டி அரசனாக்கி விட்டுத் தன்னுலகம் சேர்ந்தார்.

ஒருநாள் பிரகலாதனும் அவனுடைய சகோதரர்களும், அந்தகாசுரனிடம், "தமை யனே! உன் தந்தை அஞ்ஞான மிகுதியால் ஒரு குகையில் தவம் செய்து, அழகற்ற குருடனான உன்னை மகனாக அடைந்தான். உனக்கு ராஜ்யமும் இல்லை. வாழ்வும் வகையாக இல்லை. நீ வேறு யாருக்காவது மகனாகப் பிறந்திருக்கலாம். நீ எங்கள் குடும்பத்தில் பிறந்தது வீண்" என்றனர்.

இதனால் வருத்தமுற்ற அந்தகன் ஒரு நாள் இரவில் யாரும் அறியாத வகையில் நாட்டை விட்டு விலகிக் காட்டிற்குச்



❀ அந்தகாசுர வதம் ❀

சென்று நெருப்பின் நடுவே நின்று, பிரம்ம தேவனை நோக்கி உக்ரமான தவத்தை மேற்கொண்டான். தனது உடலைக் கூரான அம்பால் துளைத்து அறுத்து யாகத்தில் இட்டான். உதிரத்தை நெய்யாகச் சொரிந் தான். அவனுடைய கடுந்தவத்தால் மகிழ்ந்த பிரம்மதேவன் அந்த இடத்தில் தோன்றினார்.

அவருடைய வரவை உணர்ந்த அந்தகன் அவரைத் தொழுது வணங்கி னான்.

அவனை நோக்கிப் பிரம்மதேவன், "அன்பனே உனது தவம் போற்றத் தக்கது. நீ விரும்பிய வரத்தைக் கேள் அதைத் தருவேன்" என்றார். "ஐயனே நான் கண் ணற்றுக் குருடனாக இருப்பதால் எனது சகோதரர்கள் எனது ராஜ்ஜியத்தை அபகரித் துக் கொண்டனர். நான் பலசாலியாக இருந்த போதிலும் கண்ணில்லாததால் பயனற்றவனாக இருக்கிறேன். நீங்கள் என் மது அன்பு வைத்து எனக்குக் கண்களை யும், அழகிய உடலையும் அளிக்க வேண்டும். மேலும் நான் எந்நாளும் எதனாலும் சாகாதிருக்கும்படியான வரத் தையும் அளிக்க வேண்டும்" என்றான்.

பிரம்மதேவன், "அந்தகா! உனக்கு அழகிய உடலையும் ஒளி பொருந்திய கண் களையும் அதியுன்னத பற்பல ஆயுதங் களையும் தருகிறேன். ஆனால்,என்னால் மரணமற்ற நிலையை உனக்குத் தர இயலாது" என்றார். அவனோ தனக்கு மரணமற்ற வரத்தைத் தருமாறு மன்றாடி னான். பிரம்மதேவன், "என்னால் இயலாத ஒன்றைக் கேட்கிறாய். அது என்னால் முடியவே முடியாது. என்றாலும் அதற்குச் சமமான வேறு வரங்களைக் கேள். தருகிறேன்" என்றார்.

நெடுநேரம் யோசித்த அவன், அவரை வணங்கி, "ஐயனே! எனக்கு ஒரு பெண் காரணமாகவே மரணம் சம்பவிக்க வேண் டும். அதிலும் பேரழகியும் எனக்குத் தாயாக இருப்பவளும் ஆகிய பெண்ணைக் கண்டு நான் மோகிக்கும் போது மட்டுமே எனக்கு மரணமுண்டாகும்படியான வரத்தை அரு ளுக" என்றான். அவரும் "அப்படியே ஆகட்டும்" என்று கூறிவிட்டுத் தன்னுலகம் சேர்ந்தார்.

(ஒவ்வொரு உயிருக்கும் தனது தாயைக் காணும்போது அதற்குப் பாசமும், அன்பும் தன்னையும் அறியாமல் பெருகுகிறது. தாய் தனனைவிட மூத்தவளாகவும், எல்லாம் அறிந்தவளாகவும் இருப்பதை உணர்கிறது. தாயைக் கண்டு மோகிப்பவர் எவருமில்லை. அதனால் உலகில் நடைபெற முடியாத இந்தச் செயலை அந்தகன் வரமாகக் கேட்டான். அவனது தீயநேரம் பார்வதி தேவி தனது தாய் என்பதை அவன் அறியாமல் போனான்.)

அழகிய கண்களையும் ஒப்பற்ற அழகையும், மிகுந்த பலத்தையும் பெற்றுக் கொண்டபின், அவன் காட்டை விடுத்துத் தனது நாட்டிற்கு வந்தான். அவனுடைய நிலையையும் வரபலங்களையும் கண்ட பிரகலாதன் முதலியோர் அவனுக்கு அஞ்சி அடங்கி விட்டனர்.

அவன் மூன்று உலகங்களையும் வென் றான். இனி வெல்ல வேண்டியதும், பகை வர்களும் இல்லாததால் அவன் பெருமிதம் அடைந்தான். எட்டு கோடி வருஷங்கள் அவனுடைய ஆட்சிக் காலம் நடந்தது.

அவன் மந்திரமலைச் சாரலில் பெரிய நகரை நியமித்தான். அங்கு பணிபுரிய பல அழகிய பெண்களை அமர்த்தினான். அவர்களோடு மதுவை அருந்தி, பலவகை யான சுகங்களை அனுபவித்துக் கொண்டு

தன்னை மறந்து களித்திருந்தான்.

அவனுடைய மந்திரிகளான தர்யோத னன், வைபவசன், ஹஸ்தி என்ற மூவரும் நாட்டை ஆண்டனர். அவர்கள் அழகிய பெண்களைக் கண்டால் உடனே அவர்களைப் பற்றிச் சென்று தனது அரசனிடத்தில் விட்டுவிடுவர். அவன் அப்பெண்களைத் துய்த்து இன்பம் பெறுவான். இப்படி எல்லையற்ற பெண்கள் அவனால் வாழ்வை இழந்தனர். இந்தத் துர்மந்திரிகளின் செயல்களால் உலக மக்கள் வருந்தினர். அந்த மந்திரிகள் தேவர்களையும் முனிவர்களையும் பெண் வேடமிட்டுத் திரியும்படிச் செய்தனர். அந்த துஷ்டர்களை யாராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

காலங்கள் கழிந்தன. அந்தகனின் ஆட்சிக்கு முடிவுக்காலமும் நெருங்கி விட்டது.

ஒருநாள் அந்த மூன்று மந்திரிகளும் மந்திர மலையின் சாரலில் இருந்த ஒரு குகையைக் கண்டனர். இதுவரை அவர்கள் அந்த இடத்திற்கு வந்ததே இல்லை. குகைக்குள் என்ன இருக்கும் என்று ஆவல் கொண்டு அதனுள் சென்று பார்த்தனர்.

அங்கு சிவபெருமான் தவத்தில் வீற்றிருந்தார். அவருக்குப் பராசக்தி பணிவிடை செய்துகொண்டிருந்தாள். அவளுடைய ஒப்பற்ற பேரழகு அவர்களைக் கவர்ந்தது. வழக்கம்போல் அவளைப் பற்றிச் சென்று தனது அரசனிடம் சேர்ப்பிக்க எண்ணினர்.

உடனே அங்கு வீற்றிருந்த சிவபெருமானிடம் சென்று, "மகாமுனியே! நீ சடைமுடியையும், அதில் தண்ணீரையும் இளம் பிறையையும் தாங்கியுள்ளாய். முகத்தில் நெருப்பு ஜொலிக்கின்றது. தர்மவானைப் போலப் பிரகாசிக்கின்றாய். உன் மீது பாம்புகள் தவழ்கின்றன. சாம்பலைப் பூசிக்



கொண்டு எலும்புகளை அணிந்துள்ள உனக்கும் இவளுக்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை.

இந்தப் பேரழகி உனக்குத் தகுந்தவள் இல்லை. நீ இவளை எமது தலைவனுக்குக் கொடுத்து விடு. நீ கொடுக்கா விட்டாலும் நாங்கள் வலிய இவளைக் கவர்ந்து சென்று விடுவோம்" என்றார்கள்.

அப்போது சிவபெருமான் ஒன்றும் அறியாதவன் போல், "அன்பர்களே எனக்குத் தாயுமில்லை. தந்தையுமில்லை. இக்குகையில் அமர்ந்து கொண்டு எனக்குத் தெரிந்த மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருக்கின்றேன். இது எனது பாசுபதவிரதம். இதை என்னால் விட முடியாது. இவள் எனது மனைவி. முடியுமானால் நீங்கள் இவளைக் கவர்ந்து செல்லலாம்" என்றார்.

அதைக்கேட்ட அந்த மூவரும் கோபம் கொண்டனர். என்றாலும் ஒன்றும் பேசாமல் தனது தலைவனிடம் சென்று நடந்ததைக் கூறினர். பார்வதியின் பேரழகை விவரித்தனர். அதைக் கேட்ட அந்தகன் காமம் தலைக்கேறியவனாய் "நானே நேரில் சென்று அந்த முனிவனைக் கொன்று

அப்பெண்ணைக் கைப்பற்றுவேன்" என்று கூறி, வீராப்புடன் புறப் பட்டான்.

தனது சேனைகளோடு சிவபார்வதியர் வீற்றிருக்கும் குகை வாயிலை அடைந்தான். அங்கு சிவபெருமானுடைய கணங்களுக்கும் அவனுடைய படைக்கும் பெருத்த போர் மூண்டது. இதில் அசுர சேனைகள் சின்னாபின்னமாயினர். அந்தகன் தனது தோல்வியை அறிந்து ஓடி ஒளிந்தான்.

சிவபெருமான் பார்வதியை நோக்கி, "அன்பே! நான் இப்போது மேற்கொண்டிருக்கும் பாசுபத விரதத்தை நிறைவு செய்யச் சில ஆண்டுகள் ஆகும். இதை உபாசிக்க நான் வேறு இடத்திற்குச் செல்கிறேன். நீ இந்தக் குகையிலேயே தங்கியிரு. நந்தி முதலான வீரர்கள் உனக்குத் துணையிருப்பார்கள்" என்று கூறினார்.

பிறகு அடுத்திருந்த வனத்திற்குச் சென்றார். அங்கு தனது பாசுபத விரதத்தைத் தொடர்ந்தார். அங்கு தன்னைத் தானே பூசித்துக் கொண்டு ஓராயிரம் ஆண்டுகள் தியானத்தில் இருந்தார்.

பார்வதி தேவி அப்சரப் பெண்களோடும் தேவமாதர்களோடும் சிவபூசை செய்து கொண்டிருந்தாள்.

காலங்கள் கழிந்தன. அந்தகன் ஒரு வழியாகத் தேறினான். மீண்டும் படைகளைத் திரட்டிக் கொண்டு புத்துணர்வு பெற்றான். அவன் மனமோ பார்வதியின் அழகிலேயே இலயித்துக் கிடந்தது. அதனால் மோகமும் காமமும் தலைக்கேறி அறிவிழந்து கிடந்தான். காம வசப்பட்ட அவன், பெரிய படையைத் திரட்டிக் கொண்டு பார்வதியைக் கைப்பற்றிச் செல்ல மீண்டும் குகை வாயிலை அடைந்தான்.

அங்கே, அந்தகனின் அசுர சேனைக்கும் குகைக்குக் காவலனாக இருந்த நந்திக்கும் கடும்போர் மூண்டது. அதில் அடிபட்டு நந்தி மூர்ச்சையானார். அதைக் கண்ட அசுரசேனைக்கு உற்சாகம் பெருகியது. அந்த இடத்தைத் துவம்சம் செய்யத் தொடங்கினர்.

அப்போது பார்வதி, பிரம்மா, திருமால் உள்ளிட்ட தேவர்களை நினைத்தாள். அவர்கள் பார்வதி தனித்திருக்கும் இடத்திற்கு ஆண்வடிவிலே செல்லக் கூடாது என்பதால் பெண் வடிவம் கொண்டு அங்கே வந்தனர். அவர்களிடம் பார்வதி "அந்தகன் மீது போரிட்டு அவனை வெல்லுங்கள்" என்றாள். தனது சக்தியைப் பார்வையாலேயே அவர்கள் மீது செலுத்தினாள். அதனால் அவர்கள் உடலிலிருந்து பல சக்திகள் தோன்றி வெளிவந்தனர்.

பிரம்மாவின் உடலிலிருந்து பிராம்மியும், திருமாலிடமிருந்து வைஷ்ணவியும், முருகனிடமிருந்து கௌமாரியும், இந்திரனிடமிருந்து இந்திராணியும், ஈசானாரிடமிருந்து சாமுண்டியும், அனந்தரிடமிருந்து வாராகியும், மகேசுவரரிடமிருந்து மாகேசுவரியும் தோன்றினர். இவர்களே சப்தமாதர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். அந்தச் சக்திகளிடமிருந்து அனேக துணைச் சக்திகளும் தோன்றினர்.

இந்த ஏழு பெண்களின் தலைமையில் அனந்த கோடி சக்திகள் வலிய ஆயுதங்களை ஏந்தி, அசுரப் படைகளைத் துவம்சம் செய்தனர். அதைக் கண்டு அந்தகனும் அஞ்சினான்.

இனி, இப்படிப் போர் செய்து பயனில்லை என்ற எண்ணம் அவனுக்கும் தோன்றியது. ஆதலால் அனைவரையும் விழுங்குவதற்குப் பெரியவாயை உடைய கிராஸன் என்ற அசுர சக்தியானான். அவன் வாயினுள் பலர் வந்து வீழ்ந்தனர். என்றாலும் அவனால்

எல்லோரையும் விழுங்க முடிய வில்லை; போர் நீண்டது.

தமது யோக சக்தியால் சிவபெருமான் இதனை அறிந்தார். உடனே புறப்பட்டு அங்கே வந்தார். அவரைப் பார்வதிதேவி வணங்கி வரவேற்றாள். அவருடைய வர வால் அனைவரும் புதிய பலம் பெற்றனர். முன்பைவிடக் கடுமையாகப் போர்புரிந் தனர்.

ஆனால், அந்தகாசுரனின் சேனாதி பதியான விகஸன் என்பவன் பெரிய பாம் பாகி, அங்கு போரிட்டுக் கொண்டிருந்த அனைவரையும் ஒரு நொடியில் விழுங்கி விட்டான். அதைக் கண்டு உலகமே அச்சம் அடைந்தது. அப்போது சிவபெருமான் வலிய வில்லையும் கொடிய அம்புகளை யும் ஏந்தியவராக அங்கே சென்றார். அவருடைய ஓரம்பினால் விகஸன் அழிந் தான். அவனால் விழுங்கப்பட்ட அனைவ ரும் மீண்டும் வந்தனர். அதனால் தேவர் கள் பெருத்த ஆரவாரம் செய்தனர்.

அப்போது தேவர்கள் நாம் இவ்வளவு உக்கிரமாகப் போரிட்டு அசுரர்களை அழித்த போதும், அவர்கள் அழிவதாக இல்லை. பெருகிக் கொண்டேயிருக் கின்றனர். இதற்கு என்ன காரணம் என்று யோசித்தனர்.

அசுர குருவான சுக்கிராச்சாரியார் மிருத் யுஞ்சய மந்திரத்தால் போரில் மாண்டு வீழும் அசுரர்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் பிழைக்க வைப்பதை அறிந்தனர். அவர்களின் கோபம் சுக்கிராச்சாரியார் மீது திரும்பியது. அவரைப் பிடித்து ஒரு பழமாக்கிச் சிவபெருமானிடம் கொடுத்து விழுங்கும்படி வேண்டினர். அவர்கள் சொற்படியே சிவனும் சுக்கிரனை விழுங்கித் தனது வயிற்றுக்குள் செலுத்தி னார்.

சுக்கிராச்சாரியார் மறைந்ததால், அசுர சேனையை வளர்ப்பவர் இல்லை. அதனால் விரைவில் அது அழிந்தது. எஞ்சிய அசுரர்களும் பயந்து நீரிலும், பாதாளத்திலும், மலைகளிலும் ஓடி ஒளிந் தனர்.

அந்தகன் தன் முன் நின்ற பிரம்மா, விஷ்ணு, நந்தி முதலியோரை வென்று சிவ பெருமான் முன்பு வந்து நின்றான். அவன் மீது சிவபெருமான் பாணங்களையும், படைக்கலங்களையும் செலுத்தினார்.

அவனுடைய அசுரர்கள் தமது மாயை யால் பிரம்மா, விஷ்ணு, நந்தி முதலான உருவங்களைத் தாங்கினர். இதனால் யாரு டன் யார் போர் புரிவது என்ற குழப்பம் உண் டாயிற்று. மேலும் அவர்களின் உடலி லிருந்து வீழ்ந்த இரத்தத் துளிகளிலிருந்து மீண்டும் மீண்டும் அசுரர்கள் தோன்றிக் கொண்டே இருந்தனர்.

இதையறிந்த சிவபெருமான் தனது வலது தோளிலிருந்து ஒரு சக்தியைத் தோற்றுவித்தார். அவள் நான்கு கால்களும் அனேக கைகளையும் அனேக முகங்களை யும் நீண்ட நாக்குகளையும் கொண்டிருந் தாள். அவள் தன்னைப் போலவே அனேக சக்திகளைப் படைத்தாள். அவளும் அவளு டைய சக்திக் கூட்டமும் அங்கு வீழ்ந்த இரத்தத்தைப் பானம் செய்தனர். அதனால் அசுர சேனை பெருகுவது நின்றது. எல்லோரும் அழிந்த பின் அந்தகன் மட்டும் எஞ்சி நின்றான். அவனைச் சிவபெருமான் தனது சூலத்தால் குத்தித் தூக்கினார். அதில் அவன் சிக்கித் தொங்கிக் கொண்டிருந்தான்.

சிவபெருமான் அந்த சூலத்தை அருகில் நின்ற உருத்திரனிடம் அளித்தார். பிறகு உமா தேவியுடன் கயிலைமலையை

அடைந்தார். அந்தகன் அழிந்ததைத் தேவர்கள் கொண்டாடினர். பிரம்மா, விஷ்ணு, நந்தி முதலியோரை வென்று சிவனை வழிபட்டு அருள் பெற்றபின் தத்தம் இருப்பிடம் சேர்ந்தனர்.

அந்தகாசுரனைக் கோர்த்த சூலத்தை ஏந்திய உருத்திரன் "**கங்காளன்**" என்ற பெயர் தாங்கினான். அவன் கொடு கொட்டியை இசைத்துக் கொண்டு அந்தகன் தொங்கும் சூலத்தைத் தோளில் தாங்கியவாறு மூன்று உலகங்களிலும் உலா வந்தான். அசுரனின் உடலிலிருந்து வழி யும் இரத்தத்தைக் கீழே விழாமல் ஒரு பூதம் குடித்துக் கொண்டே வந்தது. அந்தப் பூதமே பின்னாளில் **அங்காரகன்** என்ற கிரகமாயிற்று.

சூலத்தில் தொங்கினாலும், தனது உறுதியைத் தளரவிடாத அந்தகன் ஞானம் பெற்றான். அவன் மிருத்யுஞ்சய மந்திரத் தைக் கூறிக் கொண்டும், சிவனின் 108 நாமங்களைச் சிந்தித்துக் கொண்டும், இருந்தான். இந்த உறுதியினாலும், தோத்தி ரத்தாலும், சிவபெருமான் களிப்புற்றார். அவனைச் சூலத்திலிருந்து விடுவித்தார்.

அவனை நோக்கி, "மகனே! உன்னை மன்னித்தேன். உனக்கு அழகிய உடலை அளித்தேன். மூவாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு உனக்கு மோட்சம் உண்டாகும். இப்போது நீ விரும்பிய வரங்களைக் கேள்" என்றார்.

நெடுங்காலம் சூலத்தில் தொங்கியதா லும், பசி, தூக்கம் ஏதும் இன்றித் தவித்ததா லும், இரத்தம் முழுவதும் வற்றிப் போய் விட்டதாலும், அவனால் எழுந்து நிற்கக் கூட முடியவில்லை. அவனைச் சிவபெரு மான் எடுத்துத் தழுவிக் கொண்டார். அவனுக்கு வேண்டிய வரங்களைத் தந்தார்.

அவன் தன்னை மன்னிக்குமாறு பல முறை சிவபார்வதியர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். அவர்கள் அவனைக் கணங்களின் அதிபதி ஆக்கினார்கள். அவனுக்கு **ப்ரிங்கிரிடன்** என்ற பெயர் சூட்டித் தனது குமாரனாக இருக்கும் வரத்தையும் அருளினார்கள்.

அதுமுதல் அந்தகன் சிவபூசை செய்து கொண்டு திருக்கயிலாயத்தில் கணநாய கனாக வீற்றிருக்கின்றான் என்று புராணங் கள் கூறுகின்றன.

பிரமன் முதலான தேவர்களிடமிருந்து வெளிப்பட்ட பிராம்மி, மகேசுவரி, கௌ மாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி ஆகிய எழுவரும் சிவ பெரு மானை ஆராதித்து அவரது பரிவாரங்களில் ஒன்றாயினர். அதுமுதல் அவர்கள் சிவால யத்தில் பரிவார தெய்வமாகவும், கிராமங் கள், நகரங்கள் ஆகியவற்றின் காவல் தெய்வங்களாகவும் இருந்து வருகின்றனர்.

❀

ப்ருங்கிரிடன் சந்நிதி

கேரளத்தில் உள்ள புகழ்பெற்ற சக்தி தலமான கொடுங்கல்லூருக்கு அருகில் திருவஞ்சைக்களம் என்னும் ஊர் உள்ளது. இது சுந்தரரால் பாடப்பட்ட தேவாரப்பதி. அவர் இங்கிருந்து தான் கயிலைக்குத் திரும்பினார். இங்குள்ள மகாதேவர் ஆலயத்தில் ப்ருங்கிரிடன் என்னும் (அந்தகாசுரனுக்கு) சிறிய சந்நிதி உள்ளது. அதில் அழகிய திரு வுருவுடன் அவன் எழுந்தருளியுள்ளான். இங்கு சப்தமாதர்களுக்கெனத் தனிச்சந்நிதி உள்ளது. இக்கோயிலில் அழகிய மரத்தாலான திருவுருவங்களாகச் சப்தமாதர்கள் எழுந்தருளி யுள்ளனர்.

❀

சப்தமாதர்களின் சிறப்புகள்



பெருந்தெய்வங்களின் துணைத் தெய்வங்களாகவும், கிராமியக் காவல்தெய்வங்களாகவும் விளங்கும் சப்தமாதர்களின் தோற்றம் பற்றிப் பல்வேறு கதைகள் சொல்லப்படுகின்றன. புராணங்கள் சப்த மாதர்களைச் சிவபெருமானின் யுத்த சேவகர்களாகவும், அம்பிகையின் துணைத் தெய்வங்களாவும் போற்றுகின்றன.

சில ஆராய்ச்சியாளர்கள் சிவபெருமான், பிரபஞ்சத்தைப் படைத்தபின் அதை வழி நடத்த அனேக சக்திகளைப் படைத்து அனுப்பினார் என்றும் அவர்கள் எல்லோரையும், ஒன்றாக எழுந்தருளி வைத்து நம்மால் வழிபட முடியாது என்பதால் அவர்களில் முதன்மை பெற்ற எழுவரின் சக்திகளைப் போற்றும் வகையில் அமைந்ததே இந்த ஏழு மங்கையர் வழிபாடு என்றும் கருதுகின்றனர்.

இவ்வகையில் படைப்புக் கடவுளான பிரமன், வழி நடத்தும் கடவுளான மகேசன், காத்தற்கடவுளான முருகன் ஒழுங்குபடுத்திச் செயலாற்றும் சக்தியான விஷ்ணு, உயிர்களுக்கு இடமாகவும் வாழ்வு தரும் தெய்வமுமாக விளங்கும் பூமாதேவி, மழை தந்து காக்கும் இந்திரன், உயிர்களுக்கு அழித்தல் என்னும் தொழிலால் மாற்றத்தைத் தரும் யமன் ஆகிய எழுவரின் சக்தியை அவர்களுடைய சாரூபத்துடன் போற்றுவதற்கு எழுந்த வழிபாடே பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்று ஏழு சக்திகளாக வழிபடப்படுகின்றனர் என்கின்றனர்.

அதனால் இவர்களுக்கெனத் தனித் தனிச் சிறப்புகளைச் சொல்லாமல் இவர்களின் மூல தெய்வங்களுக்குரிய சிறப்புகளே இவர்களுக்கும் கூறப்பட்டுள்ளன. மூல தெய்வங்களுக்குரியதாக உள்ள வாகனங்கள், கொடிகள், ஆயுதங்கள், பூஜைகள் யாவும் இவர்களுக்கு உரியதாக இருக்கிறது. மூலதெய்வங்களுக்கு ஏற்ப, இவர்களுக்கென தியான சுலோகம், காயத்ரி மந்திரங்கள் ஆகியனவும் உள்ளன.

பிள்ளைத்தமிழ் நூல்களில் சப்தமாதர்களின் சிறப்பைப் பேசும் போது அவர்

களின் மூல தெய்வங்களுக்குரிய சிறப்பு களையே இவர்களுக்கும் ஏற்றிப் பாடியுள்ளனர். எடுத்துக்காட்டாக, மகேசுவரியைப் பேசும் போது யானை உரியை அணிந்தவள், காலனை வென்றவள் வேதமான மான் ஏந்தியவள் என்று சிவபெருமானின் வீரச் செயல்களை அவளுக்கு உரியதாகக் கூறுகின்றனர். வாராகியைப் பேசும் போது பொறுமையாக இருப்பவர். பூமியைக் கொம்பின் நுனியில் தாங்குபவள் என்று பூமாதேவியின் பெருமைகளும் வராகரின் பெருமைகளும் இவளுக்கு ஏற்றிக் கூறப்பட்டுள்ளதைக் காண்கிறோம். இப்படியே மற்றையவர்களுக்கும் மூலதெய்வங்களின் சிறப்புகள் ஏற்றிக் கூறப்பட்டுள்ளன.

சப்தமாதர்கள் ஒவ்வொருவர் பற்றிய சிறு செய்திகளையும், அவர்களுக்குரிய தியான சுலோகங்கள் காயத்ரி மந்திரங்கள் தனிச் சிறப்புகள் முதலியவற்றையும் தொடர்ந்து வரும் பக்கங்களில் கண்டு மகிழலாம்.

அஷ்டமூர்த்தங்களும் சப்தமாதர்களும்

பிரபஞ்சத்திற்கு அடிப்படையாக இருப்பது நிலம், நீர், காற்று, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்னும் எட்டாகும். சிவபெருமானே இந்த எட்டு வடிவங்களில் இருந்து பிரபஞ்சத்தை நடத்துகிறான் என்று சிவாகம நூல்கள் கூறுகின்றன. சக்தி வழிபாட்டில் இந்த எட்டுப் பொருட்களிலும் அஷ்டமாதர்கள் நிறைந்திருந்து அதை நடத்துவதாகக் கூறப்பட்டுள்ளது. அது பற்றிய செய்தியைக் காணலாம்.

அந்தகாசுர வதத்தின்போது சிவபெருமான் எட்டு கீழ்மைக் குணங்களில் இருந்து அஷ்டமாதர்களைத் தோற்று



வித்தார் என்று சிவமகாபுராணம் கூறுகிறது. இந்த எண்மரும் சிவனருள் பெற்று உலகின் எட்டு அடிப்டைப் பொருட்களான அஷ்டமூர்த்தங்களில் நிறைந்துள்ளனர்.

அட்டமூர்த்தம் என்பன நிலம், நீர், தீ, காற்று ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மா என்ற எட்டாகும். நிலத்தில் வாராகியும், நீரில் இந்திராணியும், தீயில் கௌமாரியும், காற்றில் சாமுண்டியும், வானவெளியில் வைஷ்ணவியும், சூரியனில் பிராம்மியும், சந்திரனில் மகேஸ்வரியும், ஆன்மாவில் யோகினியும் வீற்றிருப்பதாகக் கூறுவர். இவர்கள் இயற்கையைச் செழிக்கச் செய்பவர்கள்.

பைரவ சமயத்தினர் சூரிய மண்டலத்தின் நடுவே மார்த்தாண்ட பைரவர் பிராம்மி தேவியுடன் வீற்றிருந்து அருள் பாலிக்கின்றார் என்று நம்புகின்றனர்.

பிராம்மி

சப்தமாதர்கள் தொகுதியில் முதலாவதாக இருப்பவள் பிராம்மி. இவள் படைப்புக் கடவுளான பிரம்மாவின் சாயலாகவும், அவரது அருட்சக்தி வடிவாகவும் இருப்பவள். ஆகமங்களின்படி பிரம்மன் வழிபாடு சூரிய வழிபாட்டுடன் தொடர்பு கொண்டதாகும். சிவாகமங்கள் பிரம்மதேவன் சூரிய மண்டலத்தின் நடுவே வீற்றிருப்பதாகக் கூறுகின்றன.

பூஜா பத்ததி நூல்களில் சிவபெருமான் வீற்றிருக்கும் பஞ்சாசனத்தில் உள்ள கமலத்தின் இதழ் நுனிகளில் இருக்கும் சூரிய மண்டலங்களில் எண்ணில்லாத பிரமதேவர்கள் வீற்றிருப்பதாகக் கூறப்பட்டிருப்பதுடன், அவர்களுடைய உருவ வர்ணனை, வழிபாடு ஆகியவையும் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

இதையொட்டி, பிராமியும் சூரிய மண்டலத்தில் விளங்கும்தேவியாகப் போற்றப்படுகிறாள்.

சைவ அனுட்டான விதிகளில் காணப்படும் சந்தியாகால வழிபாட்டில் பிராமி அதிகாலையில் சூரிய ஒளியைப் பூமியில் பரப்பும் சந்தியா தேவதையாகப் போற்றப்படுகிறாள். அவள் பிரம்ம தேவனைப் போலவே அன்ன வாகனத்தில் கமண்டலம், ஜபமாலை, புத்தகம் ஏந்தி பவனி வருவதாகக் கூறப்பட்டுள்ளாள்.

சில நூல்களில் இவள் வேள்விகளைக் காப்பவளாகவும், கையில் வேள்விக் கரண்டிகளான ச்ருக் சுருவம் ஆகியவற்றை ஏந்தியவளாகவும் கூறப்பட்டுள்ளாள். மதுரை அஷ்டசக்தி மண்டபத்திலுள்ள பிராம்மி ஒரு முகத்துடன் ச்ருக், சுவம் ஏந்திய வளாக அமைக்கப்பட்டிருப்பது இங்கு சிந்திக்கத் தக்கதாகும்.

இவளைப் புத்தகத்தோடும் அமைத்துள்ளனர். சில சிற்பங்களில் இவள் கத்தியும் பானபாத்திரம், சூலம், ஜெபமாலை ஏந்தியவளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள்.



இவள் ஏந்தும் வாள் அஞ்ஞானத்தை அழித்து, ஞானத்தைச் செழிக்கச் செய்யும் ஞான வாளாகவும், இவளது பானபாத்திரம் உலகிற்கு உணவு வழங்கும் அட்சய பாத்திர மாகவும் கூறப்படுகிறது.

இவள் அதிகாலையில் துதிக்கப்படும் சந்தியாதேவதையாகவும், பிரம்ம சக்தி என்னும் கிராமிய தெய்வமாகவும், வேள்வி களைக் காக்கும் யாக தேவதையாகவும், அஷ்டபைரவர்களில் முதல்வனான அஜி தாங்க பைரவனின் தேவியாகவும் பல நிலை களில் இருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக் கின்றாள்.

1. பிராம்மி தியானம்:



சதுர்புஜம் சதுர்வக்த்ராம் பீதமால்யாம் பரோஜ்வலாம்
வரதாபய ஹஸ்தாம் ச ஸாக்ஷமாலாம் ஸகண்டிகாம்
ஐடாமகுட ஸம்யுக்தாம் ஹம்சவாஹன ஸுஸ்திதாம்
ஸர்வாபரண ஸம்யுக்தாம் ப்ராஹ்மீம் த்யாத்வார பூஜேயேத்

நான்கு முகங்களையும். நான்கு கைகளையும் உடையவளும், மஞ்சள் நிறமான ஆடை, மாலை இவைகளால் மிகவும் பிரகாசிக்கின்றவளாயும், வரதம், அபயம் என்னும் முத்திரைகளைக் கைகளில் பெற்றிருப்ப வளும்,(உருத்திராக்க மாலையை அணிந்திருப்பவளும், அன்னவாகனத்தில் பவனி வருபவளும்),எல்லாவித ஆபரணங்களாலும் அலங்கரிக் கப்பட்டிருப்பவளுமான பிராமி தேவியைத் தியானம் செய்து பூஜிக்க வேண்டும். இத்தேவி யின் பின்கரங்களில் கமண்டலமும், அட்சமாலையும் காணப்படும்.

மேற்கண்ட பிராமி தியானத்தில் அவள் நான்கு முகங்களும், நான்கு கரங்களுடன் துதிக்கப்பட்டிருந்தாலும் பைரவரோடு அவள் இருக்கும் போது நடைமுறையில் ஒரு முகத்துடன் இரண்டு கரங்களைக் கொண்டவளாகவே அமைத்து வழிபடுகிறோம். நான்கு கரங்களுடன் அவள் அஜிதாங்க பைரவருடன் அன்னவாகனத்தில் பவனி வரும் கோலத்தையே இங்கு காண்கிறோம்.

பிராம்மி காயத்ரீ மந்திரம்

ஓம் ஹம்ஸத்வஜாய வித்மஹே, கூர்ச்ச ஹஸ்தாய தீமஹி:
தந்நோ ப்ராம்மீ ப்ரசோதயாத்::

ஓம். அன்னத்தின் உருவம் தீட்டப்பட்ட கொடியை உடையவளும், தர்ப்பைப் புற்களால் ஆன கூர்ச்சத்தை ஏந்திய கரங்களை உடையவளுமான பிராம்மீ என்னும் தேவியைத் தியானிக்கிறேன். அவள் என் முன்னே வந்து எனது அறிவை மேம்படுத்திப் பிரகாசிக்கச் செய்வாளாக.

மகேஸ்வரி



மகேசன் எனப்படும் சிவமூர்த்தியின் அம்சமாகத் தோன்றிய சக்தி, மகேசுவரி ஆவாள். இடப வாகனத்தில் பவனிவரும் இவள் மேற்கரங்களில் மான், மழு ஏந்தி முன் கரங்களில் அபய, வரத முத்திரை களைத் தாங்கியுள்ளார். இவளை முன்கரங் களில் கத்தி, கபாலம், சூலம் ஏந்திய வளாகவும் அமைக்கின்றனர். இவள் மூன்று கண்களைக் கொண்டவள் நெற்றி யில் மூன்றாவது கண் இருக்கிறது. சடையை எடுத்துக்கட்டி முடிந்துள்ளாள். அதில் வெண்பிறை துலங்குகிறது. இவள் சதா சிவனைப் போல ஐந்துமுகம் கொண்டவள் என்று சில நூல்கள் குறிப்பிடுகின்றன. வடநாட்டுச் சிற்பங்கள் சிலவற்றில் இவள் ஐந்து முகம் கொண்டவளாகவும் அமைக்கப் பட்டுள்ளாள். இந்த ஐந்து முகங்களும் ஐந்து வண்ணங்களைக் கொண்டதாகும். இவள் கரத்தில் நீண்ட சூலாயுதத்தைக் கொண்டுள்ளாள். புலித்தோலை அணிந்து யானைத்தோலைப் போர்த்துக் கொண்டி ருப்பவளாகவும் கூறுகின்றனர். இவளது வாகனம் எருது ஆகும்.

மகம் என்றால் வேள்வி. வேள்வி களைக் காப்பவளாக இவள் விளங்கு கிறாள். வேள்விகள் முறையாக நடை பெற்றால்தான் நாட்டில் மழை பொழியும். வேளாண்மை பெருகும் என்பது நம்பிக்கை யாகும். அதனால் வேள்விகள் முறையாக நடைபெறவும், நடைபெறும் வேள்விக ளால் உலகமக்கள் பயன் அடையச் செய் பவளாகவும் இவள் விளங்குகிறாள்.

மகேசுவரிக்கென அரிதாகவே தனி ஆலயங்கள் இருக்கின்றன. இவள் அன்பர் களுக்கு வளமான வாழ்வையும் தைரியத் தையும் வழங்குகிறாள்.

௨. மகேசுவரி



ஏகவக்தராம் த்ரிணேத்ராம் ச மஹாதேவீம் சதுர்புஜம்
ஜடாமகுட ஸம்யுக்தாம் ஸுக்லவர்ணா ஸுசோபிதாம்
வரதாபய ஹஸ்தாம் தாம் ம்ருகம் டங்கஞ் ச தாரிணீம்
வ்ருஷ(ப)வாஹ ஸமாரூடாம் வந்தே மாஹேச்வரீம் சுபாம்

(மகேசுவரி) ஒருமுகம், மூன்று கண்கள், நான்கு கரங்கள் இவை உடையவளும், ஜடாமகுடத்தைத் தரித்திருப்ப வளும், வெண்மை நிறமாக இருப்பவளும், மிகவும் அழகாகப் பிரகாசிப்பவளும், அபயம் முத்திரைகளைக் கொண்டவளும், மான், மழு இவைகளைக் கைகளில் வைத்திருப்பவளும் வ்ருஷப வாகனத்தில் அமர்ந்திருப்ப வளும் மகாதேவியும் ஆன மாகேஸ்வரியை (மகேசுவரி) வணங்குகின்றேன். அவள் எமக்கு மங்கலங்களை அருள்வாளாக. ❀

மகேசுவரி - காயத்ரீ மந்திரம்

ஓம் வ்ருஷபத் த்வஜாய வித்மஹே ம்ருக ஹஸ்தாய தீமஹி
தந்நோ ரௌத்ரீ (மகேஸ்வரி)ப்ரசோதயாத்

ஓம். வெண்மையான காளையின் வடிவம் தீட்டிய கொடியை உடையவளும், மானைக் கரத்தில் ஏந்தியவளுமான மகேஸ்வரி என்னும் தேவியைத் தியானிக்கிறேன். அவள் என் முன்னே தோன்றி வலிமையையும் ஆற்றலையும் அருள்வாளாக. ❀

திருக்கயிலாய ஞான உலாவில் சப்தமாதர்கள்

தமிழ் வேதமாகப் போற்றப்படுவது பன்னிரு திருமுறைகளாகும். இதிலுள்ள பதினோராம் திருமுறையானது நாற்பது சிற்றிலக்கியங்கள் தொகுப்பாக இருக்கின்றது. இதில் ஒன்பதாவது நூலாக இருப்பது சேரமான் பெருமாள் நாயனார் இயற்றியுள்ள திருக்கயிலாய ஞான உலாவாகும். இதில் சிவபெருமான் உலாச் செல்லும் போது அவருடன் சப்தமாதர்களும் சென்றதாகப் பாடியுள்ளார். இதனை, நாமம்சேர்- வேழ முகத்து விநாயகரை உள்உறுத்துச் சூழ் வளைக்கைத் தொண்டவாய்க் கெண்டை ஒண்கண் தாழ்கூந்தல் மங்கை எழுவரும் சூழ மடநீலி சிங்க மடலேற்றின் மேற்செல்ல என்னும் தொடரால் அறிகிறோம். இதில் சப்தமாதர்களுடன் விநாயகர், நீலி(துர்க்கை)ஆகியோர் வருவது குறிக்கப்பட்டுள்ளது.

இதில் மங்கையர் எழுவரும் சிறப்புடன் வர்ணிக்கப்படுகின்றனர். கைகளில் வளைகள் அணிந்து, கெண்டை விழிகள் சுழல, அழகிய கருங்கூந்தல் தாழ, இப் பெண்கள் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ❀

கௌமாரி

தண்தமிழ்க் கடவுளான முருகப் பெருமானுக்குக் குமரன் என்பது சிறப்புப் பெயராக விளங்குகிறது. குமரனை வழிபடும் சமயம் கௌமாரம் எனப்படு கிறது. குமரனின் அம்சமாகத் தோன்றிய பெண் தெய்வம் கௌமாரி எனப்படு கிறாள். சப்தமாதர் தொகுதியில் இவள் மூன்றாமவளாக வீற்றிருக்கின்றாள்.

பொதுவான நிலையில் இவள் மேற் கரங்களில் வஜ்ஜிரம், சக்தி ஆயுதம் தாங்கி, முன் கரங்களில் அபய வரத முத்திரை களைத் தாங்கியுள்ளாள். மயில் வாகனத் தில் அமர்ந்தவாறு வேலையும், சேவற் கொடியையும் கொண்டவராகவும் அமைக் கின்றனர்.

தொண்டை மண்டலத்தில் காணப் படும் முருகன் வடிவங்கள் மேற்கரங்களில் கெண்டி, அட்ச மாலை தாங்கியிருப்பதை ஒட்டி இவளையும் மேற்கரங்களில் அட்ச மாலை, கெண்டியுடன் அமைத்துள்ளனர்.

இவள் காவல் தேவதையாகக் கொண்டாடப்படுகிறார். சில ஊர்களில் கௌமாரி அம்மனுக்கென தனி ஆலயங்கள் உள்ளன. இவளை ஆறுமுகம்



கொண்டவளாகவும் அமைத்து வழிபடு கின்றனர். இவள் பகைவர்களை வென்று வெற்றியுடன் வாழ வைக்கும் தெய்வ மாவாள்.



மதுரை மீனாட்சியம்மனுக்குக் கௌமாரி என்பது பெயராகும். பாண்டியர்களுக்குக் கௌரியர் என்பது பெயர். கௌரியர்களின் குமாரியாகத் தோன்றியதால், மீனாட்சி கௌரி எனப் பெயர் பெற்றாள். ❀

૩. கௌமாரி

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமந்விதாம்
ஜடாமகுட ஸம்யுக்தாம் நீலவர்ணாம் ஸுயௌவனாம்
வரதாபய ஹஸ்தாம் தாம் வஜ்ரம் சக்தீம் ச தாரிணீம்
ஸர்வலக்ஷண ஸம்பந்நாம் கௌமாரீ தாம் விபாவயேத்

(கௌமாரி) ஒருமுகம், இரண்டு கண்கள் நான்கு கைகள் உடையவளும், ஜடாமகுடத்தை அணிந்திருப்பவளும், நீலநிறமான மேனியையுடையவளும், யௌவன வயதுடையவளும், வரதமுத்திரை, அபயமுத்திரை, வஜ்ராயுதம், சக்தி ஆயுதம் இவைகளைக் கைகளில் கொண்டவளும் சாமுத்ரிகா லக்ஷணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப் பெற்றவளுமான கௌமாரீதேவியை வணங்க வேண்டும்.

கௌமாரி - காயத்ரீ மந்திரம் :

ஓம் சிகித்வஜாயை வித்மஹே
வஜ்ர (சக்தி) ஹஸ்தாய தீமஹி :
தந்நஹ் கௌமாரீ ப்ரசோதயாத் :

ஓம். மயில் வடிவம் பொறித்த கொடியை உடையவளும் வஜ்ரம், சக்தி ஆகிய ஆயுதங்களை ஏந்தியவளுமான கௌமாரி தேவியைத் தியானிக்கிறேன். அவள் என் முன்னே வந்து வெற்றியையும் பாதுகாப்பையும் அருள்வாளாக.

திருப்புகழில் சப்தமங்கையர்

திருமுருகன் அருள்பெற்ற அருணகிரிநாத சுவாமிகள் அவனைப் பாடும் பணியையே தனது வாழ்நாள் பணியாகக் கொண்டவர் என்றாலும், சைவ,வைணவ, சாக்த சமயக் கடவுளர் அனைவரையும் உயர்ந்த மதிப்புடன் போற்றிப் புகழ்பவர். அவர் திருப்புகழில் சப்த மாதர்கள் பற்றி சில இடங்களில் குறித்துள்ளார்.

திருவண்ணாமலைத் திருப்புகழில்,

விமலைகள் எழுவரும் வழிபட அருளி அருணையின் உறைதரும் இறையவன் என்று புனிதம் நிறைந்த ஏழு மாதர்களும் பணி செய்ய உமையம்மை திருவண்ணாமலையில் வீற்றிருப்பதைக் குறித்துள்ளார்.

மேலும், **வீரம் மிக்க ஏழ்மாதர் நீள்தினம் நின்று நாளும் தொழும் ஆர்யை** என்று கூறுகின்றார். போரில் ஆர்வம் கொண்ட வீரமங்கையரான மாதர்கள் எழுவரும் நாள்தோறும் பணிந்தேத்தும் உயர்ந்தவள் என்று அம்பிகையைப் போற்றுகின்றார்.

இத்தொடர்கள் மூலம் சப்தமாதர்கள் போர்த் தெய்வங்களாகவும், வீர வனிதையர் களாகவும் பராசக்தியைத் தினமும் தொழுபவர்களாகவும் இருப்பதை அறியமுடிகிறது.

சிற்ப உலகில் கௌமாரி

சப்தமாதர்களின் வரிசையில் மூன்றாவதாக இருப்பவள் கௌமாரி. முருகனின் சாரூபமும் அருளும் பெற்றவள். மயில் வாகனத்தில் பவனி வரும் அவளது திருவுருவ அமைப்பைச் சிற்பநூல்கள் பலவிதமாகக் கூறுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

பொதுவான நிலையில், இவள் முருகனைப்போல மயில் மீது அமர்ந்தவளாக வஜ்ரம், சக்தி, ஆயுதங்களுடன் வேலையும் கொண்டுள்ளாள்.

பல்லவர்கள் இவளது வடிவைத் தமது ஆளுகைக்கு உட்பட்ட தொண்டை மண்டலத்தில் அமைத்தபோது மேற்கரங்களில் அட்சமாலை, கெண்டி,(நீர்க்கரகம்) கொண்டவளாக அமைத்துள்ளனர். அதற்குக் காரணம் தொண்டை மண்டலத்தைப் பல்லவர்கள் ஆண்டபோது இப்பகுதியில் பிரம்ம சாத்தன் எனப்படும் முருகன் வடிவமே பெருமளவு வழிபாட்டில் இருந்தது. காஞ்சி குமர கோட்டத்தில் உள்ள மூலவர் முருகப் பெருமானின் வடிவம் பிரம்மசாத்தன் வடிவமேயாகும். திருப்போரூரில் உள்ளதும் இவ்வடிவமே.

பிரம்மசாத்தன் என்பதற்குப் பேரறிவாளன் என்பது பொருள். பிரம்மனுக்கும், பிரம்மத்தின் வடிவமான பரமேசுவரனுக்கும் மந்திரங்களை உபதேசிக்கும் ஞானவானாக இருந்ததால் அவன் இப்பெயர் பெற்றான். இவ்வடிவங்களில் அவன் மேற்கரங்களில் அட்சமாலையும், கெண்டியும் தாங்கி, வலது முன் கை அபயம் காட்ட, இடது கையைத் தொடை மீது வைத்திருக்கிறான். அளவற்ற ஆற்றலை, பெரும் சக்தியைப் பெற்றிருப்பவன் என்பதைக் குறிக்கவே தனது இடது கையைத் தொடை மீது வைத்திருக்கிறான்.

குமரன் பிரம்மசாத்தன் கோலத்தில் இருப்பதால் குமரன் அருள்பெற்றவளான கௌமாரியைப் பல்லவர்கள் இப்பகுதியில் எழுந்தருளி வைத்தபோது கெண்டி, அட்சமாலை கொண்டவளாக அமைத்தனர். திருத்தணி, ஆலப்பாக்கம், பெருங்காஞ்சி, சோமங்கலம்,ராமஞ்சேரி முதலிய தொண்டை நாட்டுத் தலங்களில் இக்கோலத்தில் அவளைக் காணலாம்.



கண்டியூர், சிவபுரம், தாதாபுரம் முதலிய கோயில்களில் அவள் மேற்கரங்களில் வஜ்ரம், ஜெபமாலை கொண்டவளாக இருக்கிறாள். திருச்செந்தூரில் எழுந்தருளியுள்ள முருகன் மேற்கரங்களில் வஜ்ரம், ஜெபமாலையுடன் வலது முன் கரத்தில் மலரேந்தி, இடது கையைத் தொடை மீது வைத்திருக்கிறார். அதையொட்டியே இவளும் மேற்கரத்தில் வஜ்ரம், ஜெபமாலை கொண்டவளாக அமைக்கப்பட்டுள்ளாள் என்கின்றனர்.

முருகனைப் படைப்புத் தொழில் புரியும் பிரம்மசாத்தனாகவும், காத்தல் தொழில்புரியும் முகுந்த முருகனாகவும், தீயவற்றை அழித்து நல்லோரைக் காக்கும் உருத்திர குமாரனாகவும் போற்றி வழிபட்டதைப் போலவே, அவரது அருள் பெற்ற கௌமாரியையும் மூன்று நிலைகளில் வழிபட்டனர் என்று கருதுகின்றனர்.

முதல் நிலையில் படைப்புத் தொழிலுக்குரிய அட்சமாலை, கமண்டலம் ஏந்தியவளாகவும், இரண்டாம் நிலையில் காக்கும் தொழிலுக்குரிய வஜ்ரம், சக்தி ஏந்தியவளாகவும், மூன்றாவது நிலையில் அசுரர்களைச் சங்காரம் செய்தபின் சிவபூசை செய்ய முருகன்கொண்ட சக்தியாயுதம், ஜெபமாலை ஏந்திய (உருத்திரகுமார) கோலத்திலுமாக அவளை அமைத்துள்ளனர்.

சோழநாட்டுச் சிற்பங்களில் முருகன் மேற்கரங்களில் வஜ்ஜிரம், கோழி ஏந்தியவனாக அமைத்தனர். அதையொட்டி கௌமாரியும், மேற்கரங்களில் சக்தி, கோழி ஆகியவற்றை ஏந்தியவாறு அமைத்தனர். கௌமாரியின் இந்த நான்கு வடிவங்களும் முருகனின் வடிவை ஒட்டியே அமைக்கப்பட்டிருப்பது சிந்திக்கத் தக்கதாகும்.

இவள் அறிவுக்கடவுளாகப் போற்றப்படுதால் இவளைப் புத்தகம், ஜெபமாலை ஏந்தியவளாக சரஸ்வதிபோலவும் அமைக்கின்றனர். வடநாட்டுச் சிற்பங்கள் பலவற்றில் இவள் புத்தகம் ஜெபமாலையுடன் காட்சி தருகிறாள்.

குமார கௌரியை வழிபடுவதால் பகைவர்களால் ஏற்படும் தொல்லைகள் நீங்கும். மனதில் புத்துணர்வும் தெம்பும் மகிழ்ச்சியும் உண்டாகும். அறிவு பிரகாசிக்கும்.

அட்சர தேவியராக சப்தமாதர்கள்

வடமொழியில் ஐம்பத்தோரு எழுத்துக்கள் உள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் உரியதாக பெண் தெய்வங்கள் உள்ளன. இவர்களை அட்சர மாத்ருகா தேவதைகள் என்பர். திருவாரூரில் இவர்கள் மந்திரப் பூர்வமாக எழுந்தருளியிருக்கும் அட்சர பீடம் உள்ளது. வடமொழியைப் போலவே தமிழ் எழுத்துகளும் தெய்வத் தன்மை உள்ளதாகப் போற்றப்படுகின்றன.

இந்த எழுத்துகளில் உயிர் எழுத்துக்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன. இவ்வரிசையிலும் நெடில் எழுத்துக்களான **ஆ,ஈ,ஊ,ஏ, ஐ, ஓ,ஔ** ஆகியவை சிறப்பைப் பெறுகின்றன. இந்த ஏழு எழுத்துகளுக்கும் அதிதேவதைகளாகச் சப்தமாதர்கள் போற்றப்படுகின்றனர்.

வைஷ்ணவி

சமய நூல்கள் சிவபெருமானின் தேவி யான பராசக்தியே ஆண் வடிவில்(புருஷ சக்தியாக) திருமாலாகக் காட்சியளிக்கி றாள் என்று கூறுகின்றன.

திருமுறைகளில்,

காவியங் கண்களாகி கடல் வண்ணன்ஆகி நின்ற தேவியை பாகம் கொண்டார் என்றும், அரியலால் தேவியில்லை ஐயன் ஐயாறனார்க்கு என்றும் பராசக்தியே திருமால் வடிவில் இருக்கிறாள் என்றும் கூறியுள்ளது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

மேலும் சக்தியின் சதுர்த்த(நால்வகை) வடிவங்களைக் குறிக்கும் வடமொழிச் சுலோகம்

போகேக பவானி புருஷே ச விஷ்ணு
குரோதேச காளிள்சமரேச துர்க்கா

என்கிறது

இதன் பொருள் : அன்னை பராசக்தி சிவபெருமானின் இடப்பாகத்தில் அமர்ந்து இன்பமளிக்கும் தேவதையாக இருக்கும் வேளையில் பவானியாகவும், தனித்து ஆண் வடிவில் இயங்கும் போது புருஷோத் தமனான விஷ்ணுவாகவும், பகைவர் மீது கோபம் கொண்டு படைசெலுத்தும் வேளையில் உக்ரமய காளி தேவியாகவும் போரில் வெற்றி பெற்று இன்பத்துடன் இருக்கும் வேளையில் துர்க்கையாகவும் இருக்கிறாள் என்பதாகும்.

இதில் புருஷ வடிவம் கொண்டு விஷ்ணுமூர்த்தியாக இருக்கும் அவளே வைஷ்ணவி தேவியைத் தோற்றுவித்து, உலகைக் காக்க அனுப்பினாள் என்பர். அதனால் காவல் தெய்வங்களாக வைஷ்ண வியை நிலைப்படுத்தியுள்ளதாகக் கூறு கின்றனர். இவள் மேற்கரங்களில் சங்கு, சக்கரம் தரித்து, முன்கரங்களில் அபய,





ஸ்ரீ வைஷ்ணவிதேவி

கேரளத்திலும், கன்னடத்துக் கரையோரங்களிலும் காணப்படும் அனைத்து பகவதி ஆலயங்களும் வைஷ்ணவிதேவியின் ஆலயங்களே என்பது ஒரு கருத்தாகும். இதற்கு ஏற்ப அனைத்து பகவதிகளும் சங்கு, சக்கரம் ஏந்தி, வரத, சிம்ம, கர்ண முத்திரைகளைத் தரித்திருப்பது சிந்திக்கத்தக்கதாகும். இவர்களை அம்மே நாராயணா என்று அழைப்பதும் சிந்திக்கத் தக்கதாகும்.

இவள் பஞ்சாயுதங்களை ஏந்தியவள். கருடவாகனத்தில் பவனி வருபவள். உச்சிக் கால சந்தியா காலத்தின் தேவதை யாகப் போற்றப்படுகிறாள். சாக்த நூல்கள் இவளை அஷ்டபைரவர்களின் மூன்றாவதான க்ரோத பைரவரின் தேவியாகக் கூறுகின்றன. இவள் அன்னை பராசக்தியின் பஞ்சாவரண பூஜையில் மூன்றாம் ஆவரணத்தின் மேற்கில் பூசிக்கப்படுகிறாள்.

இமயச்சாரலில் வைஷ்ணவி தேவி என்னும் தலம் உள்ளது. இங்குள்ள குகையில் வைஷ்ணவி தேவி சுயம்பு வடிவமாகக் காட்சி தருகிறாள். ஆண்டு முழுக்க பல லட்சம் மக்கள் வைஷ்ணவி தேவியைத் தரிசிக்கப் பயணம் மேற்கொள்ளுகின்றனர்.

சிம்மகர்ண முத்திரைகளைத் தாங்கியுள்ளாள். சில இடங்களில் இவள் தனது இடது கரத்தைக் கதாயுதத்தின் மீது வைத்துள்ளவளாகவும் காட்சிதருகிறாள்.

விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் வியாபித்திருப்பவள் நிறைந்திருப்பவள் என்பது பொருள். இப்பெயருக்கேற்ப இவள் எங்கும் நிறைந்திருந்து அன்பர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருக்கிறாள்.

காளிதாசனின் குமார சம்பவத்தில் சப்தமாதர்கள்

மகாகவி காளிதாசன் இயற்றிய மாபெரும் சமஸ்கிருத காவியம் குமார சம்பவமாகும். இதில் இமய மன்னனின் மகளாக அவதரித்து, தன்னை நோக்கித் தவம் புரிந்த பார்வதியை மணக்கச் சிவபெருமான் புறப்பட்டார். அப்போது சப்தமாதர்கள் சிவபெருமானிடம் பூம்பட்டாடைகளையும் பொன்னாபரணங்களையும் அளித்து அவற்றை அணிந்து திருமணக் கோலம் கொள்ளும்படி வேண்டினர். அவற்றைப் பெருமான் தொட்டு உவந்தேன் என்றார்.

அந்தக் கணமே அவர் அணிந்திருந்த யானை, புலி, மான் ஆகியவற்றின் தோல்கள் உயர்ந்த பொற்சரிகையிட்ட பட்டாடைகளாயின. அதுபோல் அவர் அணிந்திருந்த பாம்புகளும் மண்டையோடு, பன்றிக் கொம்பு ஆகியவைகளும் உயர்ந்த ஆபரணங்களாகிவிட்டன. இதன்மூலம் மணமகன், மணமகளை அலங்கரிக்கச் சப்த மாதர்களின் அருள் இருப்பதை அறிய முடிகிறது.

4. வைஷ்ணவி (நாராயணீ) :

ஏகவக்த்ராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமன்விதாம் :
வரதாபயகராம் ச்யாமாம் சங்கம் சக்ரஞ்ச தாரிணீம் :
நவயௌவன ஸம்பன்னாம் ஶ்ரீமத் கருட வாஹனாம் :
சர்வலக்ஷண ஸம்பன்னாம் வைஷ்ணவீம் தேவிகாம் பஜே :

(வைஷ்ணவி) ஒரு முகமும், இரண்டு கண்கள், நான்கு கைகள் இவை களையுடையவளும், அபயமுத்திரை வரத முத்திரை, சங்கம் (சங்கு) சக்கரம் இவைகளைக் கைகளில் கொண்டவளும், பால்ய வயதைத் தாண்டி, அடுத்த யௌவன வயதை அடைந்திருப்பவளும், கருட வாகனத்தில் அமர்ந்திருப்பவளும், சாமுத்ரிகா லக்ஷணங்கள் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்றவளுமான வைஷ்ணவீ தேவியை வணங்குகின்றேன்.

வைஷ்ணவீ - காயத்ரீ மந்திரம்

ஓம் தார்க்ஷ்யத்வஜாயை வித்மஹே, சக்ர ஹஸ்தாயை தீமஹி :
தந்நோ வைஷ்ணவீ ப்ரசோயாத் :

ஓம். வலிமையான கருடனைக் கொடியில் கொண்டவளும், சக்ரத்தை ஏந்தியவளும் ஆகிய வைஷ்ணவி தேவியைத் தியானிக்கிறேன். அவள் என் முன்னே தோன்றி, வேண்டிய வரங்களைத் தருவாளாக.

சப்தமாதர்களின் தலையலங்காரம்

பிராம்மி தனது நான்கு தலைகளிலும் உள்ள சடையை கூடற் மகுடமாக முடிந்து அதில் பனம்பூக்களைச் சூடியுள்ளாள். மகேசுவரி தனது சடையை ஜடா மகுடமாக முடிந்துள்ளாள். அதில் கொன்றைமலர்த் தொங்கல், வெண்பிறை, சிறிய பாம்பு ஆகியன உள்ளன.

கௌமாரி தனது தலையில் முத்துகள் பதித்து இரத்தினங்கள் இழைத்த கிரீடத்தை அணிந்திருக்கிறாள். முன்புறம் கலிகதோராவும் அதில் தொங்கலும் உள்ளன.

வாராகி பச்சைக்கற்கள் பதித்த கிரீடத்தை அணிந்துள்ளாள். சில வடிவங்களில் பலவண்ண மலர்களால் புனையப்பட்ட கிரீடத்துடன் விளங்குகிறாள்.

இந்திராணி நவரத்தினங்கள் ஜொலிக்கும் மகுடம் அணிந்து மகுடபதியாக வீற்றிருக்கின்றாள். சாமுண்டி தேவி சடையை விரித்து ஜடாமண்டலமாகக் கொண்டுள் ளாள். அதைப் பாம்புகளால் கட்டியுள்ளார். மண்டையோட்டை உச்சிப்பூவாகச் சூடியுள் ளாள். சப்தமாதர்களின் தலையலங்காரம் தங்களின் மூலதெய்வங்களோடு இணைந்ததாகவே இருக்கின்றது.

வராகி



அதிக பலமும் கோபாவேசமும் நிறைந்த விலங்கு காட்டுப்பன்றி. இந்த இனத்தில் ஆண்பன்றி, பெண் பன்றி ஆகிய இரண்டுமே வெறியுடன் எதிர்த்துப் போராடும் இயல்பைக் கொண்டவை. அவற்றின் இலக்கு வெற்றி அல்லது வீரமரணமே. யானைகள் கூட பல சமயங்களில் பயப் படுத்தினால் பயந்துவிடும். ஆனால், காட்டுப் பன்றிகள் தாக்கத் தொடங்கி விட்டால் நிறுத்தாது. எதைக் கண்டும் அஞ்சாமல் எதிரிகளைத் தொடர்ந்து தாக்கும்.

பன்றிகள் வீரத்திற்கு அடையாளமாக இருப்பது போலவே அன்பிற்கும் அடை யாளமானவை. மக்களைக் காக்கும் தெய்வ மாக வீரமும் அன்பும் நிறைந்த பெரிய தெய்வம் பெண்பன்றியின் வடிவில் காட் டில் உறைவதாகப் பண்டைய மக்கள் நம்பினர். அவளை வழிபட்டால் சகல சுகங்களும் கிடைக்கும் என நம்பினர்.

பன்றி முகத்துடன் கூடியவளாக விளங் கும் அவளை மக்கள் ஏனமுகப் பாவை என்றும், கேழல் முகச்செல்வி என்றும் போற்றி வழிபட்டனர். வடமொழியில் அவள் வாராகி எனப்படுகிறாள். தொடக் கத்தில் தொல் பழங்குடியினரிடம் மலை யகத்தில் இருந்த வாராகி வழிபாடு பின்னா ளில் அனைத்துச் சமயங்களிலும் கலந்து விட்டது என்பது ஆய்வாளர் கருத்தாகும்.

அவள் சைவ சமயத்தில் சப்த மாதர் களில் ஒருத்தியாகப் போற்றப்படுகிறாள். இவள் பூமாதேவியின் அம்சமாகத் திகழ்கிறாள்.

சாக்தர்கள் அவளை லலிதா தேவியின் சேனாதிபதியாகக் கொண்டாடுகின்றனர். சாக்த தந்திரத்தில் இவள் **தண்டநாதா** எனும் பெயரில் கிரிச்சக்கர ரதத்தில் பவனி வருபவளாகத் துதிக்கப்படுகின்றாள்.

சமண, பௌத்த சமயங்களிலும் வாராகி வழிபடப்படுகிறாள். சைவம், வைணவம், சாக்த, வைரவம் முதலிய தந்திரங்களில் போற்றப்படும் வாராகி யைப் பற்றிய பல்வேறு செய்திகளை இப்பகுதி யில் அறிந்து மகிழலாம்.

சைவ சமயத்தில் ....

சிவபெருமானுக்குரிய அஷ்ட பரி வாரங்களில் ஒன்றாக இருப்பது சப்தமாதர் குழுவாகும். இதில் ஏழு பெண் தெய் வங்கள் இடம் பெற்றுள்ளனர். இவர் களில் ஐந்தாமவளாக இருப்பவள் வாராகி. இவள் கலப்பை, தண்டம் ஏந்தியவளாகக் காட்சி அளிக்கின்றாள். திருமூலர் திரு மந்திரத்தில் இவளை ஆற்றல் மிக்க பெண் சக்தியாகப் போற்றுகின்றார். இந்த ஏழு மாதர்களுடன் எட்டாவது தேவியான யோகினியும் சிவபெருமானால் அந்தகாசுர வதத்தின் பொருட்டுக் கீழ்மைக் குணங் களில் இருந்து தோற்றுவிக்கப்பட்டதாகச் சிவமகாபுராணம் கூறுகின்றது.

வாராகியைத் தனியாகவும் காண்கி றோம். சென்னை அருணாசலேசுவரர் ஆலயத்தில் சிங்கவாகனத்தில் வாராகி வீற்றிருந்து காட்சி அளிக்கிறாள்.

வைணவ சமயத்தில் ...

வைணவர்கள் வாராகியை விஷ்ணு வின் சக்தியாகப் போற்றுகின்றனர்.



திருமாலின் மூன்றாவது அவதாரமான சுவேதவராக சுவாமியின் சக்தியாக இவள் கொள்ளப்படுகிறாள். இவளை சங்கு, சக்க ரம், கதாயுதம் ஏந்தியவளாகப் போற்று கின்றனர். என்றாலும் இவள் வழிபாட்டை வைணவத்தில் காண முடியவில்லை.

சாக்த தந்திரங்களில் . . .

அன்னை பராசக்தியை தலைமைத் தெய்வமாகக் கொண்டு வழிபடும் சாக்த தந்திரங்களில் வாராகி, போர்க் கடவுளாகச் சித்தரிக்கப்படுகிறாள். லலிதா தேவியை எதிர்த்து வந்த பண்டாசுரனின் தளபதியான விசுத்தாசுரன் என்பவனை இவள் வெற்றி கொண்டதாகச் சாக்த நூல்கள் கூறுகின்றன.

பண்டாசுரனின் வலது தோளிலிருந்து உக்ரமயமான தோற்றத்துடன் தோன்றிய விசுத்தாசுரனை அழிப்பதற்காகவே தேவி இவளைத் தோற்றுவித்தாள் என்கிறது **தேவிபாகவதம்.** தேவி இவளைத் தனது அகங்கார தத்துவத்திலிருந்து கையிலுள்ள பஞ்சபாணத்தின் வழியாகத் தோற்றுவித்த தால், இவளைப் பஞ்சமி என்றும், அவளு

டைய ஆணைகளைச் செயல்படுத்து வதால் ஆக்ஞா தேவி என்றும் அழைக்கின் றனர்.

இவள் உலகப் படைப்பின் போது ஐந் தாவது சக்தியாகத் தோன்றியதால் பஞ்சமீ என்று அழைக்கப்படுகிறாள். அன்னை பராசக்தி இவள் மூலமாகவே பூமியையும் அதிலுள்ள கடல்கள், மலைகள், காடுகள் முதலியவற்றையும் படைத்தாள் என்கின் றனர்.

அன்னை பராசக்தி இவளைப் படைத் து, அளவற்ற ஆற்றல்களை வழங்கி வராகி என்று பெயர் சூட்டினாள்.

பின்னர் அவளுக்கு எருமை, யானை, மான், பன்றி, சிங்கம் ஆகிய ஐந்து வாக னங்களைப் படைத்து அளித்தாள். ஞானி கள் யானை மீது வருபவளாகவும், வீரர்கள் சிங்கத்தின் மீது வருபவளாகவும், வேளாண்மை செய்வோர் எருமை மீது வருபவ ளாகவும் இவளைப் போற்றி வழிபடு கின்றனர். இவளது வாகனமான சிங்கத் திற்கு வஜ்ரகோஷம் என்பது பெயர்.

அம்பிகை இவளுக்கு ஐந்து தட்டுக் களை உடைய பெரிய தேரை அளித்தாள். அவற்றை உறுதிமிக்க பன்றிகள் இழுத்துச் செல்கின்றன. (கிரி-பன்றி) காட்டுப் பன்றி களால் இழுத்துச் செல்லப்படுவதால் அது கிரிசக்கரம் என்று அழைக்கப்படுகிறது. (கிர்- காட்டுப் பன்றி)

இவளுடைய படையெழுச்சியின் போது படாஹம் என்னும் முரசு முழங்கு கிறது. இவளது பிரதம கணமாக இருப்ப வர்கள் சண்டன், உச்சண்டன் என்னும் பைர வர்களாவர். வேதாளப் படை கொண்ட இவர்கள் மகாவீரர்களாவர். வெற்றியை மட்டுமே அறிந்தவர்கள். வாராகியின் முதன்மைப் பணியாளர்கள் ஜ்ரும்பிணீ, மோஹினி, ஸ்தம்பிணி ஆகியோராவர்.

இவளுக்கு 1.பஞ்சமீ, 2. தண்டநாதா 3. ஸ்வேதா 4.ஸமயேச்வரீ, 5.ஸமயங்கேதா 6.வாராஹீ, 7. போத்ரிணீ 8. சிவா, 9. வார்த்தாளி 10.மஹாசேநா, 11. ஆக்ஞா சக்ரேஸ்வரி, 12. அரிக்நி என்னும் பன்னி ரண்டு பெயர்கள் வழங்குகின்றன. இப் பெயர்களில் முதலாவதான பஞ்சமீ என்பது அவள் பஞ்சபாணத்திலிருந்து தோன்றிய தாலும், தண்டநாதா என்பது சேனைகளை



ருத்ர வாராகி

ரௌத்திரம் என்பதற்கு அடங்காத ஆத்திரம் என்பது பொருள். ஆத்திரமும் அதனால் உண்டாகும் கோபமும் நிறைந்தவன் உருத்திரன் எனப்படுகிறான். அதேபோன்று கோபாவேசம் கொண்ட வாராகி, ரௌத்திர வாராகி என்று அழைக்கப்படுகிறாள். அவளையே ருத்ர வாராகி என்கிறோம். இவள் சிவ வாராகிபோல் ஏர்கலப்பை, தண்டமோ அன்றி, விஷ்ணு வாராகி போல் சங்கு சக்கரமோ ஏந்தாமல் வாள், கேடயம், சூலம் கபாலம் ஏந்துகின் றாள். பூத வாகனத்தில் பவனி வருகிறாள். இவளை வழிபடு வ தால் பகைவர் நாசம் அடைவர். மனதில் உறுதி உண்டாகும்; எடுத்த காரியங்களில் பெற்றி உண்டாகும்.

வழிநடத்துவதாலும் பதினொன்றாவதான ஆக்ஞா சக்ரேஸ்வரி என்பது பராசக்தியின் ஆணைகளை நிறைவேற்றுவதாலும் உண் டான பெயர்களாகும்.

அதியுன்னத வீரமாதாவாக இருப் பதால், போர் வீரர்கள் இவளை வழிபடு கின்றனர். அச்சமற்ற தன்மையும், தளராத வீரமும், சோர்வு தோன்றாது போரிடும் தன்மையும் உண்டாக இவளைத் துதிக் கின்றனர்.

வேளாளர் வழிபடும் வராகி

காட்டுப் பன்றிகள் வடிவால் பெரி யவை. உறுதியான தலையை உடையவை. காட்டில் கிழங்குகளைத் தோண்டியெ டுத்து உண்பவை. அவை தோண்டிய இடங்களில் பயிர் செழிப்பாக வளர்வ தைக் கண்டறிந்த ஆதிகால மனிதன் உழு வதற்கும் மண்ணைச் சமமாக்கி விவசா யம் செய்வதற்கும் கற்றுக் கொண்டான் என்கின்றனர்.

அதனால் உழுவதற்கும், நிலத்தைப் பண்படுத்துவதற்கும் உரிய தெய்வமாகப் பன்றிமுக தெய்வத்தைக் கொண்டாடினர். மேலும், விவசாய நிலங்களைப் பன்றிகள் பாழ்படுத்தாதிருக்கவும் பன்றி வடிவில் காடுகளில் நிலை பெற்றிருந்த தெய்வங் களை வழிபட்டனர். அத்தெய்வமே வாராகி என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள்.

காட்டில் வாழ்ந்த மனிதன், வளமான வாழ்வை நல்கும் பெண் தெய்வத்தைப் பெரிய பன்றி வடிவில் வழிபட்டான். அத்தெய்வம் அவர்களுக்கு அருள்புரிந்து வருகிறாள் என்பர். இவளே உழவுத் தொழிலை மனிதனுக்குக் கற்பித்தாள் என்று கூறுவர். இவள் நிலத்தை உழும் ஏரையும், (கலப்பையும்) பெரும்பாறை



அறுபத்து நான்கு யோகினிகளில் ஒருத்தியாக வாராகி

களை அடித்துத் தூளாக்கும். முசல (இரும்பு உலக்கையையும்)த்தையும் ஏந்தி யுள்ளாள். பயிர்த்தொழிலின் கடவுளாக இருப்பதாலேயே உழுபடையான ஏரை யும், பண்படுத்தும் இரும்பு உலக்கையும் கொண்டவைகளாகக் காட்சியளிக்கின் றாள் என்பர்.

திருமூலர் திருமந்திரத்தில்,

ஆன வராகமுகத்தி பதத்தினள்
ஈனவராகம் இடிக்கும் முசலத்தோடு
எனை உழுபடை ஏந்திய வெண்ணகை
ஊனமற உணர்ந்தார் உள்ளத்தோங்குமே.

என்று இவளை உழுபடையான கலப் பையையும், உலக்கையையும் ஏந்தியுள்ள வளாகப் போற்றுகின்றார்.

வேளாளர்கள் தங்கள் பயிர்த்தொழில் மேம்பட வராகிக்கு வழிபாடு செய்கின் றனர். நிலம் மாசுபடாதிருக்கவும், உழும் போது நிலம் இளகி மிருதுவாகி, பயிர்கள் செழிக்க ஏற்றதாக இருக்கவும், காட்டு விலங்குக ளால் தொல்லை நேராதிருக்கவும் நன்கு விளைச்சல் காணவும் இவளை வழிபடு கின்றனர்.

நிலத்தை உழுது சமன்படுத்த உதவும் கலப்பையையும், தானியங்களை இடித்துக் குத்தி உணவுப் பொருளாக்க உதவும் உலக் கையையும் வாராகி ஏந்தியிருப்பதும் அவர் வேளாளர்தம் கடவுள் என்பதை விளக்கு கிறது.

வாராகி மாலை

அந்தாதியாக அமைந்த இந்நூலில் 82 பாடல்கள் உள்ளன. 100 பாடல்கள் இருந் திருக்க வேண்டும்என்றும்,அவற்றில் மறைந்தது போக 82 பாக்களே கிடைத்ததாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

இதன் முதற்பாடலில் ஒன்பது இரத்தினங்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். 1) இரண்டு குழைகள் கோமளம் 2) புஷ்பராகம் போன்ற திருவடிகள் 3) குருவிந்தமணி நிலம் போல் கண்கள் 4) கோமேதகம் போன்ற கரங்கள் 5) வைரம் பாய்ந்த நகங்கள் 6) முத்துப் போல் பிரகாசிக்கும் புன்னகை 7. பவளம் போல் சிவந்த உதடுகள் 8) மரகதக் கொடி போல் திலகம் அணிந்தவள் என்று நவரத்ன மயமாக அவளது மேனி விளங்குவதை இந்நூலின் முதற்பாடல் குறிக்கிறது.

இறுதிப்பாடல் அவளைச் சிவஞான போதகி, கபாலினி, திகம்பரி, அகோரி என சிவம் எனும் செம்பொருள் சேர்ந்தவளாகக் கூறுகிறது.

அனந்த வாராகி


அனந்த வாராகி

பயிர்த்தொழிலைக் காக்கும் தெய்வங்களில் நாகதேவர்கள் முக்கியமான இடத்தைப்பெறுகின்றனர். பூமியின் அடியில் வாழும் நாகர்கள் பூமியின் புதல்வர்கள், மண்ணைச் செழிக் கச் செய்பவர்கள். நாகர்களின் மன்னனாகவும் சிவபெருமா னுக்கு அணுக்கத் தொண்டராகவும் இருப்பவர். அனந்தன் என்னும் பாம்பரசன் ஆவார். இவர் அனைத்துத் தெய்வங் களுடன் தொடர்புள்ள மகாநாகன் ஆவார். இவருடைய அம்சமாகவே வாராகி தோன்றினார் என்று கூறுகின்றனர். இதை யொட்டி வாராகியை அனந்த வாராகி என்றும் அழைக்கின்றனர். பாம்புப் படம் குடைபிடிக்க வீற்றிருக்கும் அனந்த வாராகியை சாக்த தந்திரத்தினர் சிறப்புடன் வழிபடுகின்றனர்.

சமண சமயத்தில் வாராகி


ஸ்ரீ வாராஹி தேவி

சமண சமயத்தில் வாராகி வழிபாடு சிறப்பான இடத்தைப் பெற்றுள்ளது. தென்னக ஜைன க்ஷேத்திரமான திருமலையில் பஞ்ச யக்ஷியருக்கான பெரிய ஆலயம் அமைக்கப்பட்டுள்ளது. இதில் ஐம்பெரும் யக்ஷிகள் அமைக்கப்பட்டுள்ளனர். ஆலயத்தில் நெடிய வடிவில் அமர்ந்துள்ள இந்த யக்ஷிகள் பெரும் சிறப்புப் பெற்றுள்ளனர். இதிலுள்ள வாராகி பெருஞ் சக்தியும், வரபலமும் தரும் தெய்வமாகக் கொண்டாடப் படுகிறார்.

சிவ வாராகி - விஷ்ணு வாராகி

வாராகியின் வடிவம் பூமியின் அம்சமாகும். பூமாதேவியின் அம்சமாகத் தோன்றிய அவளுக்குச் சிவபெருமான் உழுவதற்காக ஏர்க் கலப்பையையும், தண்டிப்பதற்கான உலக்கையையும் அளித்தார். திருமந்திரத்தில் திருமூலர் அவளை உழுபடை ஒருத்தி என்றும், ஈனவர் ஆகம் இடிக்கும் முசலத்தி என்றும் குறிக் கின்றார். இதன்மூலம் அவள் ஏர்க் கலப் பையும், உலக்கையும் கொண்டவளாக விளங்குகின்றார் என்பதை அறிகிறோம். சிவாலயங்களில் அமைந்துள்ள அனைத்து வாராகி திருவுருவங்களும் ஏரும், உலக்கையும் கொண்டதாகவே அமைக்கப்பட்டுள்ளன.

சிலர் வாராகி என்றதும், விஷ்ணு வின் மூன்றாவது அவதாரமான வராக (பன்றி அவதாரம்) அவதாரத்தின் பெண் அம்சம் என்றே கொண்டனர். அதை யொட்டி வாராகியை சங்கு, சக்கரம் ஏந்தி யவளாக அமைத்தனர். இதனால் சிற்சில இடங்களில் வாராகி சங்கு சக்கரத்துடன் விஷ்ணு வாராகியாகக் காட்சி தருகிறாள். மக்கள் இவளை விஷ்ணுவராகி என்று அழைக்கின்றனர். அன்பர்கள் துர்க்கையை சிவதுர்க்கை, விஷ்ணுதுர்க்கை என்று கொண்டாடுவதைப் போலவே, வாராகியையும் சிவவாராகி என்றும், விஷ்ணு வாராகி என்றும்அழைத்து வழிபடுகின்றனர்.

சென்னையை அடுத்துள்ள திருமுல்லைவாயில் பச்சையம்மன் கோயிலில் கருவறையின் மேற்குச் சுவர்களில் **சிவ வாராஹி-விஷ்ணு வாராஹி** ஆகிய இரு வரையும் தனித்தனி மாடங்களில் காணலாம்.

ஞானிகள் போற்றும் வாராகி

வாராகி மிகுந்த பலம் கொண்டவள். எதிரிகளை அழிப்பவள். அகப்பகையையும், புறப் பகையையும் வென்றழிப்பவள். ஞானிகள் தம் உள்ளத்தில் தோன்றும் அகங்காரம் என்னும் செடிக்கு வேராக உள்ள அகந்தைக் கிழங்கைத் தோண்டி அழித்து ஞானத்தைச் செழிக்கச் செய்கிறாள் என்கின்றனர். இதுபோன்று வாராகியைப் பல்வேறு நிலைகளில் அன்பர்கள் வழிபடுகின்றனர்.

૫. வாராகீ :

ஏகவக்தராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமன்விதாம் :
க்ருஷ்ணாம் பரதராம் தேவீம் வஜ்ர சக்ரஸம்யுக்தாம் :
ஹலமுஸல ஹஸ்தாம் தாம் வராபயகராம் புஜாம் :
ஸிம்ஹவாஹ ஸமாரூடம் கிரீட மகுடோஜ் வலாம் :
ஸர்வாலங்கார ஸம்பன்னாம் வாராஹீம் பூஜ யேத் புத :

(வாராகி - உத்மத்த பைரவரோடு விளங்குபவள்)

ஒருமுகம், இரண்டு கண்கள், நான்கு கைகள் இவைகளைப் பெற்றிருப்பவளும், கருப்பு நிறமுள்ள ஆடையை உடுத்திக் கொண்டிருப்பவளும். வஜ்ரம், சக்கரத்தைப் பெற்றிருப்பவளும். வரதமுத்திரை அபயமுத்திரை, உலக்கை, தடி ஏந்தியவளும், கீரிட மகுடத்தை அணிந்திருப்பவளும், சிம்மவாஹனத்தில் பவனி வருபவளும், சாமுத்ரிகா லக்ஷணங்களுடன் விளங்குபவளுமாகிய வாராகீ தேவியை வணங்க வேண்டும்.

வாராகீ காயத்திரி மந்திரம் :

ஓம் மஹிஷத்வஜயை வித்மஹே
தண்ட ஹஸ்தாய தீமஹி :
தந்நோ வாராஹீம் ப்ரசோதயாத்

ஓம் : எருமையின் உருவம் தீட்டப்பட்ட கொடியை உடையவளும், தண்டத்தை ஏந்திய கரத்தை உடையவளுமான வாராஹி தேவியைத் தியானிக்கிறேன். அவள் என் முன்னே தோன்றி, மன உறுதியையும், அளவில்லாத ஆற்றலையும் தைர்யத்தையும் அருளுவாளாக.

அஷ்ட வாராஹி



வாராகியை எட்டு பேர் உருவங்களில் வழிபடுகின்றனர். இது சப்தமாதர், அஷ்டபைரவர், நவசக்திகள் வழிபாடு போலவே சிறப்புடன் கொண்டாடப்படுகிறது. இதில் நடுவில் மகா வாராகியையும் சுற்றியுள்ள ஏழு தளங்களில் 1.உன்மத்த வாராகி,2.லகு வாராகி, 3.ஆதி வாராகி,4.மஹிக்ஷாருடா வாராகி,5.ஸிம்ஹாரூடவாராகி, 6. அஸ்வாருட வாராகி ,7.ஸ்வப்பன வாராகி ஆகிய வராகியின் ஏழு மூர்த்தங்களையும், அமைத்து வழிபடு கின்றனர்.இதை அஷ்டவாராகி வழிபாடு எனவும் அழைக்கின்றனர்.

பெரும்பாலும் இது சாக்த தந்திரர்களால் நடத்தப்படும் வழிபாடாகும்.

இந்திராணி

சப்தமாதர்கள் வரிசையில் ஆறாவதாக வீற்றிருப்பவர் இந்திராணி. இந்திரனின் அம்சமாகத் தோன்றியவள் என்பதால், அவனுக்குரிய சிறப்புகள் எல்லாவற்றையும் இவள் தன்னகத்தே கொண்டவள். அதனால் கற்பகத்தின் நிழலில் ஐராவதமும் காமதேனுவும் சூழ வீற்றிருக்கிறாள். மேற்கரங்களில் குலிசம் எனப்படும் வஜ்ராயுதங்களை ஏந்தியவள். அபய வரத முத்திரைகளைத் தாங்கியவள். சிவ நூல்களில் இவள் யானையை அடக்கி ஆளும் அங்குசம், இரண்டு வஜ்ராயுதங்கள், சக்கரங்கள் ஆகியவற்றை ஏந்தியவளாகவும் குறிக்கப்பட்டுள்ளாள்.

ஆடல் மகளிராகத் திகழும் கோயிற் பெண்கள் தாம் அமைத்த சப்தமாதர் கோயில்களில் இந்திராணியை நடுவில் இருப்பவளாக வைத்து வழிபாடு செய்து வந்ததாகக் கூறுகின்றனர்.

இவள் அரம்பையர் தொழ வீற்றிருப்பவள். தன்னை வணங்கும் பெண்களுக்கு அழகையும், மனோதைர்யத்தையும் வளமான வாழ்வையும் அருளுகின்றாள்.



இந்திரா, சஷ்டிதேவி போன்ற பெண் தெய்வங்களும் இந்திராணியோடு தொடர்புடையவர்களேயாவர்.

இந்திரன் மருதநிலத்தின் கடவுளாவான். தமிழ் இலக்கியங்கள் அவனை வேந்தன் என்று அழைக்கின்றன. பயிர்கள் செழித்து வளர மேகங்களைக்கொண்டு மழை பொழிவிப்பவன் அவனே. அவன் மேகங்களை வாகனமாகக் கொண்டிருப்பதால் மேகவாகனன் என்று அழைக்கப்படுகின்றான். அவனது அம்சமாகத் தோன்றியுள்ள இந்திராணியும் மேகவாகினியாகப் போற்றப்படுகிறாள். இவள் பயிர்த்தொழில் செழிக்கச் செய்யும் தேவதையாக இருக்கின்றாள்.

6. இந்திராணீ (மாகேந்திரீ) :

ஏகவக்நராம் த்விநேத்ராம் ச சதுர்புஜ ஸமன்விதாம் :
ஸரத்ன மகுடோ பேதாம் ஹேம வர்ண ஸ்வரூணீம்
வராபயகராம் போஜாம் வஜ்ரம் சக்திம் ச தாரிணீம்
மாஹேந்த்ரீம் மாதரம் வந்தே கஜவாஹன ஸம்ஸ்த்திதாம்

இந்திராணீ ஒருமுகம், இரண்டு கண்கள், நான்கு கைகளையுடையவளும், இரத்தினங்கள் பதிக்கப் பெற்ற மகுடத்தை அணிந்திருப்பவளும், பொன்னிறமான மேனியை உடையவளும், வரதம், அபயம், வஜ்ராயுதம், சக்தி ஆகியவைகளைக் கரங்களில் கொண்டவளும், யானை வாகனத்தின் மீது வீற்றிருப்பவளுமான மாகேந்திரியை (இந்திராணியை) வணங்குகின்றேன்.

இந்திராணீ (மகேந்திரீ) காயத்ரீ மந்திரம் :

ஓம் கஜத்வஜாய வித்மஹே
வஜ்ர ஹஸ்தாய தீமஹீ
தந்நோ இந்த்ராணீ ப்ரசோதயாத் :

ஓம். வெண்மை நிறமுள்ள யானையின் வடிவம் வரைந்த கொடியை ஏந்தி, வஜ்ராயுதம் தரித்த கரத்தையுடையவளுமாகிய, இந்திராணி என்னும் தேவியைத் தியானிக்கிறேன். அவள் என் முன்னே தோன்றி அளவற்ற செல்வங்களையும் மேலான சுகங்களையும் மனதில் மகிழ்ச்சியையும் அருள்வாளாக!

இந்திராணி என்று அழைக்கப்படும் தேவி மேகங்களை அடக்கி ஆள்பவள். இவள் இரண்டு மேற்கரங்களிலும் குலிசம் எனப்படும் வஜ்ராயுதங்களைத் தாங்கியிருப்பதாகவே புராணங்கள் கூறுகின்றன. இங்கு அவள் சக்தி குலிசம், தாமரை ஆகியவற்றை ஏந்தியவளாக சித்தரிக்கப் பட்டுள்ளாள். இவள் வேள்விகளைக் காப்பவள், பயிர்த்தொழில் புரிவோருக்கு விளைச்சலில் நன்கு பெருக்கமும் வளர்ச்சியும் உண்டாக அருள்புரிபவள். சில நூல்களில் இவள் பாம்புப் படத்துடனும் காட்டப்பட்டுள்ளாள். ❀

தொடை மீது வைத்த கரம்

தெய்வங்கள் தாம் ராஜகோலாகலத்தில் மகிழ்ச்சியில் வீற்றிருப்பதைக் குறிக்க, இடது கரத்தைத் தம்தொடைமீது ஊன்றியுள்ளனர். சப்தமாதர்கள் தாங்கள் அளவற்ற ஆற்றல் மிக்கவர்கள் என்பதையும், எல்லையற்ற இன்பத்தில் மூழ்கி இருப்பவர்கள் என்பதையும் குறிக்க வலது கையில் அபய முத்திரை ஏந்தி, இடது கரத்தைத் தொடை மீது ஊன்றியுள்ளனர். இது அவர்கள் தன்னிகரற்றவர்கள் என்பதைக் குறிக்கும் முத்திரையாகும். ❀

சாமுண்டி



சப்தமாதர்கள் தொகுதியில் ஏழாவதான சாமுண்டி இளம்பெண்ணாகவும், உக்ரமயமானவளாகவும் வயதால் மூத்த தொல்பழையோள் எனவும் பல நிலைகளில் காட்சிதருகிறாள். இவளது வாய் இதழ்களின் ஓரத்தில் கோரைப் பற்கள் மின்னுகின்றன. விழி உருட்டிச் சுழன்று அச்சமூட்டுவதாக இருக்கிறது. கபால மாலை களையும் பாம்பையும் அணிந்துள்ளாள். தலையின் உச்சியில் மண்டையோடும் இடது காதில் பிணத்தோடும் அணிந்துள் ளாள்.

பேய் இவளது வாகனமாகும். பேய் வடிவம் எழுதிய கொடியைக் கொண்டிருப்பதால் அலகைக் கொடியாள் என்று அழைக்கப்படுகிறாள். இவள் பகைவர்களை நாசம் செய்பவள். இவளை எட்டுக் கரங்களுடன் அமைக்கும் வழக்கமும் உள்ளது.

நடைமுறையில் இவளைச் சாந்த வடிவினளாகவே அமைக்கின்றனர். பல ஊர் களில் இவள் காவல் தெய்வமாகக் கொண்டாடப்படுகிறாள்.

மைசூரில் சாமுண்டி தேவி மலை மீது எழுந்தருளியுள்ளாள். இவள் பெயரால் இம்மலையே சாமுண்டீசுவரி மலை என்று அழைக்கப்படுகிறது. இவள் சண்டன், முண்டன் என்னும் இரண்டு கொடிய அரக்கர்களை அழித்ததால், அவர்களை அழித்த காரணத்தால் சாமுண்டி என்று அழைக்கப்படுகிறாள்.

சாமுண்டீசுவரி ஆலயத்தில் நடைபெறும் தசரா விழா உலகப் புகழ் பெற்றதாகும்.

7. சாமுண்டா (சாமுண்டி) :

சதுர்புஜாம் த்ரிநேத்ராம் ச காளமேக ஸமப்ரபாம்:
த்ம்ஷ்ட்ராக ராளவதானாம் வ்யாக்ரசர்மாம் பரோஜ்வலாம்
ஸகட்காம் சூல ஹஸ்தாம் ச கபாலா பயதாரிணீம்:
கிங்கிணீ மாலயாயுக்தாம் கரண்ட மகுடான்விதாம் :
சிரோமாலா ஸமாயுக்தாம் ப்ரேத வாஹந ஸம்ஸ்திதாம்
பீநஸ்தனீம் யௌவனாம் ச சாமுண்டாம் பாவயேத்ஸதா :

(சாமுண்டா)நான்கு கைகள், மூன்று கண்கள் இவைகளையுடையவளும், காளமேகம் போன்ற கருப் பான மேனியையுடையவளும், புலித்தோலை ஆடையாக உடுத்திக் கொண்டிருப்பவளும் கத்தி, சூலம், கபாலம், அபய முத்திரை இவைகளைக் கைகளில் பெற்றிருப்பவளும், சிறிய மணிகளாலான மாலையை அணிந்திருப்பவளும், கரண்டமகுடம் என்னும் மகுடத்தைத் தரித்திருப்பவளும், மனிதர்களின் தலைகளைக் (முண்டங்களை) கொண்ட மாலையை அணிந்திருப்பவளும், ப்ரேதத்தை (சவத்தை) வாகனமாக அமைத்துக் கொண்டு அதன் மேல் வீற்றிருப்பவளுமான சாமுண்டியை எப்பொழுதும் வணங்க வேண்டும்.

சாமுண்டா காயத்ரீ மந்திரம் :

ஓம் பசாச த்வஜாயை வித்மஹே
சூல ஹஸ்தாயை தீமஹீ :
தந்நஹ் காளீ ப்ரசோதயாத் :

ஓம் பிசாசு எழுதிய அலகைக் கொடியை கொண்டவளும், சூலத்தை ஏந்தியவளுமான காளிதேவியைத் தியானிக்கிறேன். சாமுண்டி என்றழைக்கப்படும் அத்தேவி என் முன்னே தோன்றி அளவற்ற வலிமையையும், வெற்றிகளையும் அருள்வாளாக.

சப்தஸ்வரங்களும் சப்தமாதர்களும்

இசை மனதை மயக்குகிறது. மனிதர்கள் மட்டுமல்லர்; தேவர்கள் தொடங்கி, பறவைகள், விலங்குகள் முதலானவை கூட இசையில் மயங்குகின்றனர். தெய்வீகமான இசைக்கு ஆதாரமாக இருப்பது ஸ,ரி,க,ம,ப,த,நி என்னும் ஏழு ஸ்வரங்களாகும். இந்த ஏழு ஸ்வரங்களின் அதிதேவதைகளாக சப்தமாதர்கள் இருக்கின்றனர். ஸ,ரி,க,ம,ப,த,நி,யில் ஸ என்பது சூரியனில் விளங்கும் பிராம்மியையும், ரி என்பது ரிஷப வாகனத்தைக் கொண்ட மகேசுவரியையும், க என்பது குமாரசக்தியான கௌமாரியையும், ம என்பது எங்கும் வியாபித்துள்ள ஓங்கார ரூபியான வைஷ்ணவியையும், ப என்பது பஞ்சமியான வாராகியையும், த என்பது இன்பங்களைத் தருபவளான இந்திராணியையும், நி என்பது சண்டிகையையும் அதிதெய்வங்களாகக் கொண்டிருப்பதாகப் புராணிகர்கள் கூறுகின்றனர்.

கௌரிகை

சிவபெருமான் அந்தகாசுர வதத்தின் போது எட்டு கீழ்மைக் குணங்களில் இருந்து எட்டுப் பெண்களைத் தோற்றுவித்தார். இவர்களையே அஷ்டமாதர் என்று அழைக்கின்றனர். இவர்களில் கௌரிகை எனப்படும் பெண்ணைத் தவிர பிராமி முதலான எழுவர் தனிக் கூட்டமாக இயங்குகின்றனர். இந்த எழுவரையே சப்தமாதர்கள் என்று அழைக்கிறோம்.

எட்டாவதாக இருப்பவள் யோக நாயகி. இவள் காமம் என்ற குணத்திலிருந்து உருவானவள். இந்த யோகநாயகி உருவமற்றவளாகவும், எல்லோருடைய இருதயத்திலும் மறைந்திருப்பவளாகவும் கருதப்படுகிறாள். அதனால் அவளுக்கு உருவம் அமைத்து வழிபடும் வழக்கமில்லை

இந்த கௌரிகையை யோகினி, யோக மோஹினி மகா லட்சுமி என்ற பல பெயர்களால் அழைக்கின்றனர்.



கௌரி என்ற சொல் அழகிய வடிவு கொண்ட பார்வதியையும், உக்ர வடிவம் கொண்ட காளி தேவியையும் குறிக்கின்றது. காளிதேவியைக் குறிக்கும் கௌரிகை என்ற பெயராலேயே இந்த எட்டாவது தேவியை அழைக்கின்றனர்.

கௌரிகை உருவமற்றவளாக எல்லோர் மனதிலும் நிறைந்திருப்பவளான அவள், உருவம் கொள்ளும் போது வீணை ஏந்திப் பாடிக் கொண்டிருக்கும் வீணாவாதினியாகக் காட்சி தருகிறாள். வடநாட்டுச் சிற்பங்களில் சப்தமாதர்களுடன் வீணை வாசித்துக் கொண்டிருக்கும் கௌரிகையை எட்டாவது பெண்ணாக அமைத்து வழிபடுகின்றனர்.

சிதம்பரம் தில்லையம்மன் ஆலயத்தில் தெற்குக் கோட்டத் தெய்வமாகக் கௌரிகையைக் காண்கிறோம். இவள் வீணையேந்தி இருப்பதால் இங்கே சரஸ்வதி என்று பெயர் எழுதியுள்ளனர்.

சப்தமாதர்கள் பயிர்த்தொழிலின் தேவதையாகக் கொண்டாடப்படும் போது இவள் மழைதரும் மோகினியாகக் கொண்டாடப் படுகின்றாள். போர்த் தெய்வமாகக் கொண்டாடப்படும் போது இவள் கண்ணுக்குப் புலப்படாதவளாக இருந்து எதிரிகளின் மனத்தைக் கலங்க வைக்கிறாள்.

சாக்த தந்திரங்களில் இவள் சம்ஹார பைரவர் என்னும் எட்டாவது பைரவரின் தேவியாகக் குறிக்கப்பட்டுள்ளாள். சம்ஹார பைரவரும் யோக மோஹினியான கௌரிகையும்



யோகினியான கௌரிகையை விலக்கி விட்டு எஞ்சிய எழுவரைச் சப்தமாதர் களாகப் போற்றி வணங்குகின்றனர்.

வடநாட்டுச் சிற்பங்கள் பலவற்றில் அஷ்டமாதர்களின் வடிவமே புடைப்புச் சிற்பமாக அமைத்து வணங்கப்படுகிறது. எட்டாவது யோகினி வீணையை மீட்டிப் பாடிக் கொண்டிருப்பவளாக அமைக்கப் பட்டுள்ளாள். சாக்த தந்திரங்கள் இவளை மகாசண்டி என்று அழைக்கின்றன. இவளை உக்ரம் மிகுந்த போர்த்தெய்வ மாகவும் சிங்கத்தின் மீது பவனிவருபவளாகவும் கூறுகின்றன. இவளது தியானத்தையும் காயத்ரி மந்திரத்தையும் தொடர்ந்து காணலாம்.

வீணை வாசித்து மகிழ்ந்து கொண்டி ருக்கும் கோலத்தை இங்கே காண்கிறோம்.

ஆதியில் அஷ்டமாதர்கள் என்று கொண்டாடப்பட்டவர்கள் பின்னாளில்

சண்டி (சண்டிகா) :

ஸ்ரீதத்துவநிதியில் - சண்டிகா தியானம் விளக்கம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. வெளுப்பு நிறமும், உக்ரமான சொரூபம், சிம்ஹவாகனமும். சடைமுடியும் (வட்ட வடிவமாக) மூன்று கண்களும் கொண்டவள். வலது கரங்களில் - வரதம், சூலம், கத்தரிக் கோல், இடதுகரங்களில் - பாசம், பாத்ரம் (பாணபத்திரம்) அபயம் கொண்டு விளங்குவாள்.

வேறுவகை மின்னல் ஒளியுடையவள். சிங்க ஊர்தியினள். ஒன்பது மாதர்களால் (நவ சண்டிகள்) சூழப்பட்டவள், முக்கண்ணும் பிறை தரித்த முடியும் உடையவள், சண்டன் என்னும் அசுரனைக் கொன்றவள். தனது எட்டுக் கரங்களிலும் முறையே சக்கரம், கதை. கேடயம், அம்பு, வில், பாசம். கண்டனம் ஆகியவற்றைக் கொண்டிருப்பவள், ஒன்பது எழுத்துக்களால் அமைந்தது, இவளது மூல மந்திரமாகும்.சண்டி - சம்ஹார பைரவரோடு விளங்குபவள்

சண்டீ காயத்ரீ மந்திரம் :

ஓம் சண்டீச்வரீ ச வித்மஹே மகாதேவி ச தீமஹி தந்நஸ் சண்டீ ப்ரசோதயாத்

ஓம். சண்டி என்னும் பெயர் கொண்டவளும், இயற்கைக்கு மாறான செயல்களை எளிதில் செய்பவளுமான சண்டிதேவியைத் தியானிக்கிறேன். அவள் என் முன்னே தோன்றி இனிய வரங்களைத் தருவாளாக.

எட்டாவதான சண்டிகை எனப்படும் பைரவலட்சுமி. பைரவரோடு இருக்கும் போது போர்க்கோலம் கொண்டவளாக எட்டு(அ) ஆறுகரங்களுடன் திகழ்கிறாள். அவள் அஷ்டமாதர் வரிசையில் அமையும் போது வீணை மீட்டிப் பாடிக் கொண்டிருப்பவளாக இருக்கின்றாள். கன்னடநாட்டில் காணப்படும் அனேக அஷ்டமாதர் சிற்பங்களில் அவள் வீணை மீட்டிக் கொண்டிருப்பவளாகவே காட்சி தருகிறாள்.

சப்தமாதர்களும் துணைத்தெய்வங்களும்

தொடக்க காலத்தில் சப்தமாதர்கள் எழுவரையும் தனியாக வழிபடும் வழக்கம் இல்லை. வரிசையாக அமர்ந்திருக்கும் இவர்களின் ஒரு பக்கத்தில் விநாயகரையும், மற்றோர் பக்கத்தில் வீரபத்திரர், ஐயனார், யோக சித்தன் ஆகிய மூவரில் யாராவது ஒருவரையும் அமைத்தே வழிபட்டனர்.

சப்தமாதர்கள் போர்த் தெய்வங்களாகக் கொண்டாடப்படும் போது அவர்களுடன் வீரபத்திரர் எழுந்தருளியுள்ளார். அவர் இவர்களுடன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகின்றார்.

சப்தமாதர்களைக் காவல் தெய்வமாகக் கொண்டாடும் வேளையில் அவர்களுடன் ஐயனார் காட்சி தருகிறார். இவர் யோக பட்டையம் தரித்தவராக வீற்றிருக்கின்றார். வலது கரத்தில் செண்டாயுதம் ஏந்தியுள்ள இவர் இடதுகரத்தினை (யோக பட்டையம் தரித்து, பீடத்தில் குத்திட்டு வைத்துக் கொண்டிருக்கும்)முழங்காலின் மீது நீட்டித் தொங்கவிட்டுக் கொண்டிருக்கின்றார். தலையை வட்டணையாக முடிந்துள்ளார். சப்தமாதர்கள் கிராமதேவதைகளாகக் கொண்டாடும் வேளையில், காவல் தெய்வமான ஐயனாரும் உள்ளார். இவரை பிரம்மசாத்தன் எனவும் அழைப்பர்.

சப்தமாதர்களைப் பயிர்த்தொழில் தெய்வமாகக் கொண்டாடும் வேளையில் அவர்களுடன் மழை தரும் மோகினியான கௌரிகை எனப்படும் யோகினியை அமைத்து வழிபடுகின்றனர். இவள் வீணை வாசிப்பவளாக இருக்கின்றாள். பின்னாளில் இவளுக்குப் பதிலாக வீணை வாசித்துக் கொண்டிருக்கும் பால பைரவரை அமைத்துள்ளனர். சப்த மாதர்களும், பைரவரும் பயிர்த் தொழிலைக் காக்கும் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர்.

சப்தமாதர்களை யோக நாயகியர்களாகக் கொண்டாடும் வேளையில் அவர்களுடன் இரு காலையும் குறுக்காக வைத்து அதில் யோக பட்டையம் தரித்த யோக சிவனை அமைத்து வழிபடுகின்றனர்.

சப்தமாதர்களைத் தனியாக வழிபடும் வழக்கம் இல்லை. அவர்களுடன் விநாயகர் மற்றும் ஏதாவது ஓர் தெய்வமும் இணைந்தே அருள்பாலிக்கின்றனர்.



சப்தமாதர்கள் போர்த் தெய்வங்கள்

சப்தமாதர்களைப் புராணங்கள் போர்த் தெய்வங்களாகப் போற்றுகின்றன. அம்பிகையின் சேனையில் இவர்கள் சேனாதிபதிகளாக உள்ளனர். குறிப்பாக, வாராகி பெரிய ரதத்தில் வருபவளாகவும், தண்டநாதாவாகவும் போற்றப்படு கின் றாள். இவளைச் சூழ்ந்தவாறு கோடிக் கணக்கான கணங்கள் உள்ளனர். பகைவர் களின் உடலில் இருந்து பெருகும் இரத்தத்தைச் சாமுண்டி தனது கபாலத்தில் ஏந்தி அமுதம் போல் குடித்து மகிழ்கிறாள். அவளது சேனா கணங்கள் பகைவர்களின் இரத்தத் தைக் குடித்த மகிழ்ச்சியால் அட்டகாசம் செய்து ஆர்ப்பரிக்கின்றன. தேவீ பாகவதம் லலிதோபாக்யானம் முதலிய சாக்த தந்திர நூல்கள் சப்தமாதர் களின் உக்ர மயமான போர்க்களக் காட்சி களை விவரிக்கின்றன.

சைவ நூல்களில் இவர்கள் சிவனது பரிவாரமாகவும் போர்க்களத் தெய்வ மாகவும் குறிக்கப்படுகின்றனர். அந்தகாசுர வதத்தின் போது அசுரக் கூட்டங்களை அழிப்பதற்காகச் சிவபெருமான் இவர் களைப் படைத்ததாகச் சிவமகாபுராணம் கூறுகின்றது.



✿ சப்தமாதர்கள் போர்க்களத்தில் உக்ரமாகப் போரிடுதல் ✿

வீரம் விளைவிக்கின்ற போர்க்களத்தில் இந்த ஏழுமாதர்களும் எவ்விதம் உன்னத வீரர்களுக்கு அருள்புரிகின்றனர் என்பதை இனி காணலாம். மகா வீரனுக்குத் தன் படையின் வலிமை, மாற்றானின் திறமை, போர்க்களச் சூழ்நிலை ஆகியவற்றையும் போருக்குரிய காலத்தையும் கணிப்பதில் பிராமி உதவுகிறாள்.

இரண்டாவது தேவியான மகேஸ்வரி படைகளை முன்னிறுத்துவதிலும், அணி சேர்ப்பதிலும், எதிரிகளை நோக்கிப் படை நகர்த்துவதிலும் துணை நிற்கின்றாள்.

வாராகி படைவீரர்களுக்குள் மூர்க்கத்தனமான எண்ணங்களைத் தோற்றுவித்து, அவர்களுக்கு அதிரடியான தாக்குதலுடன், வெறித்தனமாகப் போரிடும் ஆற்றலையும் அளித்துப் போரிடவைக்கிறாள். வீரர்களுக்கு எதிரிகளின் கொடுமைகளைக் கண்டு கலங்காத மனம் இவளாலேயே உண்டாகிறது.

அடுத்ததாக வைஷ்ணவி போரிடும் வீரர்களின் ஆயுதங்களில் உறைந்து அவற்றை இயக்குவதுடன், படையைப் பாதுகாக்கிறாள்.

அடுத்ததாக கௌமாரி, படையைச் சோர்வடையாமல் ஊக்குவிக்கிறாள்.

வெற்றியை அடைந்து மகிழ்ச்சியில் ஆர்ப்பரிக்கும் படைகளைத் தொடர்ந்து போரிடும்படிச் செய்து வீரர்களை மகிழ்ச்சியூட்டுபவள் இந்திராணி. இந்திராணியே ஜெயலட்சுமியாவாள். இவளே எல்லோருக்கும் மகிழ்ச்சியை அளிப்பவள். கடும் போராட்டத்திற்குப் பின்னர் கிடைத்த வெற்றியை நிலைக்க வைத்து, வீரர்களின் மனதில் அச்சம் அகற்றிச் சுகமாக வாழ வைப்பவள் சாமுண்டியாவாள். இவளே சாம் ராஜ்யலட்சுமியாவாள்.


தனது பக்தர்கள் மேற்கொள்ளும் போர்களில் தொடக்கம் முதல் சப்தமாதர்களுடன் **பிரம்மசாத்தன்** துணைநிற்கின்றான். போரில் வீர மரணமடைபவர்கள் மகா சாத்தனின் உலகமான வீரசுவர்க்கத்தையே அடைகின்றனர்.

மகாவீரர்கள் கொண்டாடும் சப்த மாதர்களில் இடம் பெற்றுள்ள சாத்தன் யானை வாகனத்தை உடையவன். அவன் பலவிதமான உயர்ந்த நூறு யானைகளை வாகனமாகக் கொண்டவன். வீரர்களில் உன்னத வீரன் அவனே.

சப்தமாதர்களின் அருள்பெற்ற போர் வீரர்கள் கலங்காத மனத்தைப் பெறுவதுடன், எதிரிகளை அழித்து மேன்மைகளைப் பெறுகின்றனர். மகாவீரர்களின் இஷ்ட தெய்வமாக சப்தமாதர்கள் விளங்குகின்றனர்.

அன்பர்களைக் காக்கும் பொருட்டு, பகைவர்களை அழிப்பதால் உண்டாகும் பாவம் நீங்க, சப்தமாதர்கள் சிவலிங்கங்களை அமைத்து வழிபாடு செய்கின்றனர். மயிலாடுதுறையைச் சுற்றிலும் அமைந்த ஏழு சிவாலயங்களில் சப்தமாதர்கள் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்று மயிலாடுதுறைப் புராணம் கூறுகின்றது.

சப்தமாதர்களை வழிபட்டு வெற்றிகளைத் தொடர்ந்து பெறுவோம்.



பயிர்த்தொழிலின் கடவுளரான சப்தமாதர்கள்

மக்களின் வாழ்வாதாரமாக இருப்பது பயிர்த் தொழிலாகும். உலகில் எவ்வளவோ உயர்ந்த தொழில்கள் இருந்தாலும், அவை யாவும் உணவைத் தரும் விவசாயத்திற்கு இணையானதல்ல. உலக உயிர்கள் உடற்பசியைப் போக்கிக் கொள்ள உணவு தரும் பயிர்த்தொழிலையே நம்பி உள்ளன. திருவள்ளுவர், ***சுழன்றும் ஏர்ப் பின்னது உலகம்*** அதனால் , ***உழன்றும் உழவே தலை*** என்கிறார்.

அதியுன்னத, மிக அவசியமான தொழிலான பயிர்த்தொழிலின் தெய்வங்களாகச் சப்தமாதர்கள் போற்றப்படுகின்றனர்.

ஒரு நிலத்தின் தன்மையையும், அதில் செய்யப்பட வேண்டிய பயிர்களின் தன்மையையும் ஆராய்ந்து, அதற்கேற்பச் செயல்படும் அறிவை விவசாயிக்கு பிராம்மி தேவி வழங்குகின்றாள்.

அந்த அறிவின் அடிப்படையில் தொழிலைச் சுலபமாகச் செயல்படுத்தும் வகையையும் உழைப்பையும் மகேசுவரி வழங்குகிறாள். பயிர்த்தொழிலுக்குத் திட்டமிடப்பட்ட நிலப்பரப்பை வேலி யிட்டுக் காப்பவளாகவும் விலங்குகள், பறவைகள் முதலியவற்றிடமிருந்து காப்பவளாகவும் இருப்பவள் கௌமாரி ஆவாள். நான்காவதான வைஷ்ணவி பயிர்த் தொழிலுக்கு ஆதாரமான விதைகளையும், நீரையும் தந்து அவற்றை விளைவிக்கிறாள். வாராகி நிலத்தைப் பண்படுத்தவும், அதில் இடப்பட்ட விதைகளை நன்கு வளரச் செய்பவளாகவும் இருக்கிறாள்.

விதைத்த விதைகள் நன்கு விளைந்து பயிராகி, நல்ல உயர்ந்த பலனைத் தந்ததும், அதைக் கொண்டு இன்பமுடன் வாழ்விப்பவள் இந்திராணி ஆவாள். (மருத நிலங்களுக்கும் பயிர்த்தொழிலுக்கும் அதனால் விளையும் விளைபொருட்களுக்கும் இந்திரனே தலைவன். அவன் அம்சமாகத் தோன்றிய இந்திராணி மேற்குறித்த பொருளுக்கும் அதிபதியாக இருக்கிறாள்.

இப்படியாகப் பயிர்த்தொழில் அது சார்ந் தவை பற்றிய அனுபவ அறிவைத் தருபவ ளாகப் பிராம்மியும், பயிர்த்தொழிலுக்கான செயல்பாட்டு நிலையை மகேசுவரியும், தேர்ந்தெடுக்கப்பட்ட நிலத்தை வேலியிட்டுப் பாதுகாப்பவளாக கௌமாரியும், நிலத்திற்கான விதை, நீர் ஆகியவற்றின் பயன்பாட்டை வைஷ்ணவியும், நிலத்தை நன்கு விளைவிப்பவளாகவும் அவற்றைப் பெருகச் செய்பவளாகவும் வாராகியும் அதனால் கிடைக்கும் பயன்களை நன்கு அனுபவித்துச் சுகம் பெறத் துணை நிற்பவளாக இந்திராணியும், கிடைத் தவற்றை அனுபவிக்கும் காலத்தில் பாதுகாத்து அருள்பவளாக சாமுண்டியும் இருப்பதை அறிய முடிகிறது. இவர்களுடன் காவல் தெய்வங்களாக விநாயகரும் சாத்தனும் விளங்குகின் றனர்.

தென்னகத்தில் அனேக ஊர்களில் வயல் வெளிகளுக்கு நடுவே சப்தமாதர்கள் ஆலயங்கள் அமைந்திருப்பதைக் காண்கிறோம். இவர்களை வழிபட்டால் பயிர்த் தொழில் நன்கு செழித்து வளரும். அந்த விளைச் சலின் பயனை நன்கு அனுபவித்துச் சுகம் பெற முடியும். இக்கோயிலைப் பண்ணையாத்தாள் கோயில் எனவும் அழைக்கின்றனர்.

யோக வித்தையில் சப்தமாதர்கள்

பாரத தேசத்தின் தெய்வீகக் கலைகளில் யோகக் கலையும் ஒன்று. யோகம் என்பதற்கு இணைப்பது என்பது பொருள். இறைவனோடு நம்மை இணைக்கும் கலை, யோகக் கலை. உலகைப் படைத்து, காத்து, அழித்துச் செயல்படுத்திக் கொண்டிருக்கும் மும்மூர்த்திகளும் யோகத்தில் நிலைபெற்றவர்களாக விளங்குகின்றனர். இவர்களை யோகப்பிரம்மன், யோகநாராயணர், யோகேசுவரன் என்று அன்பர்கள் அழைக்கின்றனர்.

யோக வித்தையானது, இறைவனின் முழு அருளையும் சாதகனுக்கு எளிதில் வழங்க வல்லது. அன்பர்களுக்கு யோக வித்தையை எளிதில் சிந்திக்கச் செய்பவளாகஇருப்பதால், அம்பிகை யோக நாயகி என்று அழைக்கப்படுகிறாள். திருப்பெருந்துறையில் அம்பிகையை யோகநாயகியாகக் காண்கிறோம். யோக நாயகியின் பரிவார தெய்வங்களாக அஷ்டமாதர்கள் உள்ளனர்.

அந்தகாசுரனை அழிக்க அஷ்டமாதர்களைச் சிவபெருமான் தோற்றுவித்திருந்த போதிலும், பின்னாளில் அவர்கள் சிவபெருமானை வழிபட்டு யோகக்கலையின் தெய்வங்களாகி விட்டனர் என்பர். யோக வித்தையில் இவர்கள் தனிச் சிறப்புடன் போற்றப்படுகின்றனர். இப்பகுதியில் யோகக் கலையில் சப்தமாதர்கள் பெற்றுள்ள நிலைகளைக் காணலாம்.

சப்தமாதர்கள் வழிபாடு கிராமிய காவல் தெய்வ வழிபாடாக நமக்குத் தோன்றினாலும், யோகக்கலையில் சாதகர்களுக்குக் குண்டலினி சக்தி விழித்தெழுந்து பயணிக்கும் பல்வேறு நிலைகளில் உடனிருந்து அருள்புரியும் தெய்வங்களாகக் கூறப்படுகின்றனர். யோக வித்தை பயிலும், சாதகன், அதன் முழுப்பலனையும் சப்தமாதர்களின் துணையின்றிப் பெற முடியாது என்பது சாதகர்களின் கருத்து.



மானுடர் உடலில் யோக நிலைகளைக் குறிக்கும் வகையில் ஆறு சக்கரங்கள் உள்ளன. இவை மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞா எனப்படுகின்றன. இவற்றை அடுத்து கபாலவாயிலும், அதைத் தாண்டி தலையின் உச்சி மீது தலைகீழாக மொட்டு வடிவில் உள்ள ஆயிரம் இதழ்த் தாமரையான பிரமரந்திரம் எனப்படும் தலமும்

உள்ளன.

சாதகனின் அரிய முயற்சியால் மூலா தாரத்தில் உறங்கும் நிலையில் சுருண்டு கிடக்கும் குண்டலினி சக்தியானது யோகக் கனலால் விழிப்புற்று, சுவாதிஷ்டானம் முதலிய ஆதாரங்களைக் கடந்து பிரம ரந்திரத்தில் உள்ள தாமரைமொட்டை மலரச் செய்து அதில் வாசம்செய்யும் சிவனிடம் இணைகிறது. அப்பொழுது பெருகும் அமிர்தம் உடலெங்கும் பரவுகிறது. அவ்வேளையில் பேரின்பம் தோன்றும். எல்லையற்ற அந்த இன்பத்தில் சாதகனை நிலைத்திருக்கச் செய்வதே யோகக் கலையின் அற்புத நிலையாகும்.

யோக நூல்கள் குண்டலினி சக்தி இருக்கும் இடமான மூலாதாரமானது முக்கோண வடிவில் மாணிக்கம் போல் செந்நிறத்தில் இருப்பதாகக் கூறுகின்றன. மூலாதாரத்தின் தெய்வங்கள் விநாயகரும், பிராமியுமாவர். பிராமி சாதகனுக்கு யோகக் கலையின் நுணுக்கங்களை அறிவிக்க, மூச்சுப் பயிற்சியால் உண்டாகும் யோகக் கனலால் குண்டலினி சக்தியை விநாயகர் எழுப்புகிறார். இந்த ஞானம் அம்சமந்திரம் எனப்படும். இந்த மந்திரத்தைக் குறிக்கும் அன்ன வடிவை பிராமி வாகனமாகக் கொண்டுள்ளாள். மூலாதாரத்தின் சக்தி பிராமி ஆவாள். சாதனையின் தொடக்கத் தில் சாதகனுக்குத் தியான வேளையில் கரும்சிவப்பு நிறம் உடலெங்கும் பரவி இருப்பது போல் தோன்றும்.

அடுத்ததான சுவாதிஷ்டமானது சதுர வடிவில், நடுவில் ஆறிதழ் கொண்ட தாமரையாக விளங்குகிறது. இதன் தெய்வம் பிரம்மாவும், சரஸ்வதியுமாவர். இவர்களுடன் இங்கு மகேஸ்வரி வீற்றிருக் கின்றாள். யோக சாதகனுக்கு மகேசுவரி அளவற்ற ஆற்றலைத் தருகிறாள். இந்த இடம் செம்பொன் மஞ்சள் நிறமாகும் (ஆரஞ்சு வண்ணம்).

சுவாதிஷ்டானத்தைக் குண்டலினி சக்தி அடையும்போது அங்கு வீற்றிருக்கும் மகேசுவரி அருள்புரிகிறாள். அவளுடைய அருளுடன் குண்டலினி சக்தி விரைந்து மேலெழுந்து மணிபூரகத்தை அடைகிறது.


மணிபூரகத்தின் தெய்வம் கௌமாரி மூன்றாம் பிறை வடிவிலான இதன் மத்தியில் பத்திதழ்க் கமலம் உள்ளது. பசிய மஞ்சள் நிறமான இவ்விடத்தின் கடவுளர் மகா லட்சுமி, மகாவிஷ்ணு ஆவார். மணி பூரகத்தில் கௌமாரி அருள்பெற்று, அதையடுத்த யோகஸ்தானமான அனாகதம் என்னும் சக்கரத்தை அடையும் குண்டலினி சக்தியை வைஷ்ணவி தேவி சிறப்பிக்கச் செய்கிறாள்.

அநாகதம் பச்சைவண்ணத்தில் முக்கோ ணத்தின் வடிவில் திகழ, இதனுள் பன்னி ரண்டு இதழ்த் தாமரை உள்ளது. இங்கு உருத்திரனும் உருத்திராணியும் வீற்றிருக் கின்றனர். யோக சக்தியான வைஷ்ணவியின் அருளுடன் அநாகத்திலிருந்து ஐந்தாம் நிலையமான விசுத்தித் தானத்தை குண்டலினி சக்தி எட்டும்போது இங்கு வீற்றிருக்கும் வாராகியின் அருள் கிடைக் கிறது. விசுக்தித்தானம் நீலநிறமானது. அறு கோணத்தின் நடுவில் பதினான்கு இதழ்க் கமலம் கொண்டது. அதில் மகேஸ்வரன் மகேஸ்வரியுடன் வீற்றிருக்கிறார். விசுத்தி யில் ஆதார யோக சக்தியான வாராகி வீற்றி ருக்கிறாள். அவளது அருள் பெற்று விசுத்தி யிலிருந்து புருவமத்தியாகிய ஆக்ஞா சக்கரத்தை குண்டலினி சக்தி அடைய இந்தி ராணியின் அருள் உதவுகிறது.

ஆக்ஞா சக்கரம் அரைவட்ட வடிவில் வெளிர் நீலத்தில் ஒளிர்வது. இதன் நடுவே மூன்றிதழ்த் தாமரை இருக்க, அங்கு சதா சிவர் மனோன்மணியுடன் விளங்கு கிறார். அவர் அருளால் சாதகனுக்கு அஷ்டமாசித் திகள் கைவருகின்றன. உலகி லுள்ள அனைத்து சுகங்களும் அவன் வசமாகும். இந்திரனுக்கு இணையான போகங்களை இந்த சக்தியின் பயனால் அடைவர். பெரும்பாலான சாதகர்கள் இந்தச் சுகங் களில் மயங்கி இங்கேயே உழன்று கொண்டிருக்கின்றனர்.

இதைக் கடந்து கபால வாயிலைத் திறக்க வேண்டும் இது யோகக் கோட்டையின் பிரதான வாயில். இது திறந்தால் மட்டுமே யோகபுரியான பிரமரந்திரத்தை அடைய முடியும். அதற்குச் சாதகனுக்குப் பெரும் சக்தி தேவைப்படுகின்றது. அந்தச் சக்தியை அருளும் தெய்வமாக மகாசண்டி விளங்கு கின்றாள். பயங்கர யுத்தத்தை நொடியில் செய்து முடிப்பவளான இத்தேவி சாதகன் கபால வாயிலைத் தகர்த்து எளிதில் திறக்க உதவு கிறாள்.

கபால வாயில் திறந்ததும் குண்டலினி சக்தி நீல நிற ஒளியுடன் வெளிப்பட்டு, பிரமரந்திரத்தில் ஆயிரம் தாமரை இதழ் களுடன் விளங்க, அங்கு வீற்றிருக்கும் சிவனிடம் ஐக்கியம் அடைந்து விடுகிறது. அவ்வேளையில் அந்தத் தாமரை விரிய, அதனை இடமாகக்கொண்டு அர்த்த நாரீசு வரராகப் பெருமான் நடனமாடுகிறார். ஆயிரம் இதழ்த் தாமரை மலரில் இருந்து பெருகும் ஆனந்த அமிர்தம் உயிரை நனைத்து, அதற்கு அமரத் தன்மையை அளிக்கிறது.



இந்த யோக சாதனையின் நெடும் பாதையில் சாதகனுக்குப் பிரம்ம சாத்தன் துணை வருகின்றான். சாதகன் மூச்சுக் காற்றையே (வாசிக்குதிரையாகிய) தனது குதிரையாகக் கொண்டு உயிரின் துணையான குண்டலினி சக்தியின் பயணத்தைச் சிறப்பாக முடித்து உயிரை அமரத்துவம் பெற வைக் கின்றான்.

எனவே, சப்தமாதர்களுடன் அவனை யோக பட்டையம் தரித்த யோகேசுவரனாக அமைத்துள்ளனர். இவன் தலைமுடி வட்ட ணையாக முடியப்பட்டுள்ளது. அதில் கங்கை, இளம்பிறை ஆகியன உள்ளன.

சப்தமாதர்களை யோகநாயகியராகக் கொண்டாடும் மரபு நெடுங்காலமாக உள்ளது. யோகசாதகர்கள் சப்தமாதர்களைச் சிறப்புடன் வழிபடுகின்றனர்.

சிற்ப உலகில் சப்தமாதர்கள்



சிவாலயங்களில் பரிவார தெய்வங்களாகவும், கிராமிய தெய்வங்களாகவும் சப்தமாதர்களின் திருவுருவங்களை அமைத்து வழிபடுகின்றனர்.

தொடக்க காலத்தில் அமைக்கப்பட்ட சப்தமாதர் சிற்பங்கள் யாவும் நீண்ட செவ்வகக் கற்பலகையில் புடைப்புச் சிற்பங்களாகவே அமைக்கப்பட்டன. இவர்கள் எல்லோரும் சுகாசனத்தில் அமர்ந்தவர்களாகவும், நாற்கரம் கொண்டவர்களாகவும் அமைக்கப்பட்டனர். சில சிற்பங்களின் பீடத்தில் இவர்களுடைய வாகனங்கள் அமைக்கப்பட்டுள்ளன. சில சிற்பங்களில் இவர்கள் ஏழுபேருக்கும் உரியதான தனித்தனிக் கொடிகள் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளன. கொடிகளில் இவர்களுடைய வாகனங்களின் வடிவங்களே சின்னங்களாகப் பொறிக்கப்பட்டுள்ளன.

பின்னாளில் சப்தமாதர் வடிவங்களையும் துணைத் தெய்வங்களான விநாயகர், யோக சிவன் ஆகியோரையும் தனித் தனிச் சிற்பங்களாகச் செய்து நிலைப்படுத்தும் வழக்கம் வந்தது.

திருவண்ணாமலை, திருவிடை மருதூர், திருக்கோயிலூர் போன்ற தலங்களில் பலகைக்கல் புடைப்புச் சிற்பமாகவும் அச்சிறுபாக்கம், திருவக்கரை போன்ற தலங்களில் தனித்தனி சிற்பங்களாகவும் அமைத்திருப்பதைக் காண்கிறோம்.

தொடக்கத்தில் சிவாலயங்களில் பரிவார தெய்வங்களாகவும் இருந்த சப்தமாதர்களுக்கு ஆலய முற்றத்தில் தனிக் கோயில்கள் உருவாகியுள்ளன. அதன்பிறகு ஊர்க்காவல் தெய்வங்களாக சப்தமாதர்கள் கோயில் கொண்டனர் என்கின்றனர்.

பல்லவர்கள் சப்தமாதர்களைப் பெரிதும் போற்றினர். காஞ்சிபுரம், பரமேசுவர மங்கலம், திருமுக்கூடல் போன்ற தலங்களில் பல்லவர்கள் சப்தமாதர் களுக்குத் தனிக்கோயில் அமைத்துள்ளனர். இவர்கள் பலகைச் சிற்பங்கள், தனித்தனி சிற்பங்கள் என்ற இரண்டு நிலைகளிலும் இவற்றில் சப்தமாதர்களை அமைத்துள்ளனர்.

பல்லவர்களைத் தொடர்ந்து வந்த சோழர்களும் சப்தமாதர் வழிபாட்டில் ஆர்வம் காட்டினர். அவர்கள் சிவாலயங் களில் அஷ்டபரிவாரங்களில் ஒன்றாக சப்த மாதர்களை அமைத்தனர். பெரும் பாலும் இச்சிற்பங்களைப் பலகைக்கல் புடைப்புச் சிற்பங்களாகவே அமைத்தனர். மேலும் கிராமிய தெய்வங்களாகவும் சப்த மாதர்களை அமைத்தனர். திருவக்கரை வக்கிர காளியம்மன், மானாம்பதி சோழி யம்மன் போன்றவை சிவாலய பரிவா ரமாக அமைக்கப்படாமல், தனி ஆலயங் களாக அமைந்ததாகும்.

சப்தமாதர்களின் தெய்வத் திருமேனி களை உருவாக்குவதற்குத் துணை நிற்பவை பூஜா பத்ததி நூல்களில் உள்ள தியான சுலோகங்கள் மற்றும் சிற்ப நூல்களில் காணப்படும் சூத்திரங்களு மாகும். சப்தமாதர்களின் திருவுருவ வர்ணனை, வடிவம், வனப்பு போன்ற வற்றை சிற்ப, சிந்தாமணி, ரூப மண்டலம் போன்ற சிற்ப நூல்கள் விரிவாகக் கூறுகின்றன. இவற்றை ஒட்டியே சப்த மாதர்களின் பலகைக் கல் சிற்பங்களும், தனிச் சிற்பங்களும் கோயில் முகப்பில் காணப்படும் சுதைச் சிற்பங்களும் அமைக் கப் பட்டுள்ளன.

கர்நாடகத்தில் பல இடங்களில் ஒரே வரிசையில் அமைந்த பலகைக் கல் சிற்பங்களாகச் சப்தமாதர்கள் அமைக்கப் பட்டுள்ளனர். மேலூர் சென்னகேசுவர் ஆல யத்தின் பிராகாரச் சுவரில் அமைக்கப் பட்டுள்ள சப்தமாதர் தொகுதியை இங்கே காண்கிறோம். இது ஆலய வழிபாட்டில் இல்லை என்றாலும், மக்கள் வணங்கிச் செல்கின்றனர்.

சப்தமாதர்களுக்கு உலாத்திருமேனி களை அமைக்கும் வழக்கமில்லை. விழா கொண்டாடப்படுவதும் இல்லை. அப்படி உலாத்திருமேனி அமைக்கப்பட்டு விழா நடத்த வேண்டும் என்ற நிலை உண்டான போது பிடாரியின் (சாமுண்டியின்) சிலையை அமைத்து, அதற்கே விழாவும் வீதி உலா வும் நடத்தும் வழக்கத்தை ஏற்படுத்தி உள்ளனர்.

சப்தமாதர்களை விநாயகர் வீரபத்திரரோடு அமைப்பதே முறை என்றாலும் இவர்களைத் தனியாகவும் அமைத்துள்ளனர். புராணங்களின்படி, பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் வரிசையிலேயே அமைப்பது வழக்கம். இம்முறையைத் தலைகீழாக சாமுண்டி, இந்திராணி, வாராகி, வைஷ்ணவி, கௌமாரி, மகேசுவரி, பிராம்மி என்ற வரிசையிலும் அமைக்கின்றனர். இந்த அமைப்பை சிதம்பரம், ஸ்ரீமுஷ்ணம், வேளச்சேரி போன்ற அநேக ஊர்களில் காண்கின்றோம்.

துணைத் தெய்வங்களாக சப்தமாதர்கள்

சிவாலயங்களில் அஷ்டபரிவாரங்களில் ஒன்றாக சப்தமாதர் கூட்டம் அமைந்துள்ளது. இதனைப் பெரிய சிவாலயங்கள் அனைத்திலும் காணலாம். காளி கோயில்கள் பலவற்றில் துணைத் தெய்வமாக சப்தமாதர்கள் இடம் பெற்றுள்ளனர். சென்ற நூற்றாண்டில் கிராமியத் தெய்வங்கள் மற்றும் மாரியம்மன் கோயில்களிலும் சப்தமாதர்களை எழுந்தருளுவிக்கும் வழக்கம் வந்துவிட்டது. இப்போது நூற்றுக்கணக்கான அம்மன் கோயில்களில் சப்தமாதர்களைத் துணைச் சந்நிதியில் காண்கிறோம். அண்மைக் காலத்தில் சப்தமாதர் வழிபாடு புத்துணர்ச்சி பெற்றுப் பெருகி வருகின்றது.

சப்தமாதர்களும் கொடிகளும்

பாரத தேசத்து மக்களின் வாழ்வில் கொடிகள் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளன. நெடிதுயர்ந்த கொடிகள் அது நிலைபடுத்தப்பட்டுள்ள இடத்தின் தன்மையையும் அங்கு செய்யப்படும் செயலையும் குறிப்பால் தெரிவித்தன. அன்னதானம் செய்யுமிடங்களில் காவி வண்ணணக் கொடி ஏற்றினர். அது அன் னக் கொடி எனப்பட்டது. வியா பாரிகள் தமது வியாபாரத் தலங்களில் கொடி களைப் பறக்க விட்டனர். அரசர்கள் முதல் வீரர்களின் கூட்டங்கள், தனியாண் மை பெற்ற வீரர்கள் என எல்லோரும் தனக் கென கொடிகளை வைத்துள்ளனர்.

ஒவ்வொரு தெய்வமும் தனக்கென ஒரு கொடியைக் கொண்டுள்ளது. சிவ பெருமான் இடபக் கொடியையும், திருமால் கருடன் கொடியையும், முருகன் சேவற் கொடியையும் கொண் டுள்ளான்.

இவ்வகையில் சப்தமாதர்களும் தனக் கென தனித்தனியே கொடிகளைக் கொண் டுள்ளனர்.

பராம்மி அன்கொடியை யும்,
மகேசவரி ரிஷபக் கொடியையும்,
கௌமாரி மயில் சேவல் கொடியையும்,
வைஷ்னவி கருடக் கொடியையும்,
வாராகி சிங்கக் கொடியையும்,
இந்திராணி யானைக் கொடியையும்,
சாமுண்டிபேய் (அலகை)க் கொடியையும்
தாங்கியுள்ளனர்.

சில சப்தமாதர் தொகுதிகளில் ஏழு பேரின் பின்னணியிலும் அவர்களது கொடிகளும் சேர்த்தே செதுக்கி அமைக்கப்பட்டுள்ளன.


கட்டியத் தண்டம்

தெய்வங்கள், அரசர்கள், அதிகாரிகள் ஆகியோரின் வரவை அறிவிக்கும் வகையில் கட்டியங்காரன் என்பவன் தண்டம் ஏநதியவாறு முன்னே செல்வான். அவன் தனது தலைவனுக்குரிய விருதுகளையும், தனிச்சிறப்புக்களை விளக்கும் பட்டங்களையும் உரத்த குரலில் தெரிவிப்பான்.

தண்டம் முன்னே ஏந்திச் செல்லுதல் அதற்குரியவர் சமுதாயத்தில் பெற்றுள்ள அந்தஸ்தை விளக்குவதாக அமைந்திருக் கின்றது. சிவபெருமானுக்கு ரிஷப தண்டமும், அம்பிகைக்கு சிம்மதண்டமும், திருமாலுக்குச் சக்கரம் அல்லது கருடன் வீற்றிருக்கும் தண்டமும், முருகனுக்கு மயில், சேவல் தண்டங்களும் உரியதாக இருக்கின்றன.

சப்தமாதர்களுக்கு உரியதாகத் தண்டங்கள் இருக்கின்றன. திருவையாறு ஆலயத்தில் அமந்துள்ள சப்தமாதர் சிற்பங்களில் அவர்களது தண்டமும் இணைத்தே அமைக்கப் பட்டுள்ளன. இது கட்டியத்தடி எனப்படும் வகையில் அமைந்ததாகும். பிராம்மியின் கட்டியத்தடி மீது அன்னமும், மகேசுவரிக்கு உரியதில் இடபமும், கௌமாரிக்குரியதில் மயிலும், வைஷ் ணவிக்குரியதில் கருடபகவானும், வாராகிக்கு உரியதில் சிங்கமும், இந்திரா ணிக்குரியதில் யானையும், சாமுண்டிக்கு உரியதில் கழுகும் அமர்ந்துள்ளன.

சப்தமாதர்களின் வாகனங்கள்



தெய்வங்கள் யாவும் தமக்கென உரிய சிறப்பு மிக்க வாகனங்களில் பவனி வந்து அருள்பாலிக்கின்றன. தெய்வங்களுக்கு அவை ஏறி வரும் வாகனங்களையொட்டி சிறப்புப் பெயர்களும் வழங்குகின்றன. சிவபெருமான் ரிஷபத்தில் பவனி வருவதால், ரிஷபவாகனன் என்றும், இடப வாகனன் என்றும் அழைக்கப்படுகிறார். இவ்விதமே முருகன் மயில் வாகனன் என்றும், திருமால் கருடவாகனன் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

சப்தமாதர்கள் எழுவரும் தமக்கெனத் தனித்தனியே வாகனங்களைக் கொண்டுள்ளனர். பிராமி அன்னத்தையும், மகேசுவரி இடபத்தையும், கௌமாரி மயில் வாகனத்தையும், வைஷ்ணவி கருடபகவானையும், வாராகி சிங்கத்தையும், இந்திராணி ஐராவதம் என்னும் யானையையும், சாமுண்டி பேயையும் வாகனமாகக் கொண்டுள்ளனர்.

சில நூல்களில் கௌமாரிக்குச் சேவல் வாகனமும் வாராகிக்கு எருமையும், சாமுண்டிக்குச் சிங்கமும் வாகனங்களாகக் கூறப்பட்டுள்ளன. சீமாபுரம் என்னும் ஊரில் வாராகிக்கு ஆட்டு வாகனம் அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கிறோம்.

சப்தமாதர்களின் பீடத்தில் அவர்களது வாகனத்தையும் சேர்த்து அமைக்கும் வழக்கம் உள்ளது. திருத்தணி வீரட்டேசுவரர் கோயில், சீமாபுரம் மயிலம்மன் கோயில், நெல்லை மாவட்டம் களக்காடு பிரம்மபுரீசுவரர் கோயில் போன்ற நூற்றுக் கணக்கான ஆலயங்களில் சப்தமாதர்களின் பீடத்தில் அவர்களது வாகனத்தையும் புடைப்புச் சிற்பமாகக் காண்கிறோம்.

சிற்சில இடங்களில் சப்தமாதர்கள் தத்தம் வாகனங்களில் அமர்ந்தவாறு காட்சி தருகின்றனர். ஓவியங்களில் சப்தமாதர்களைத் தத்தம் வாகனத்தின் மீது வீற்றிருப்பவர்களாகவே தீட்டியுள்ளனர்.

சப்தமாதர்களின் ஆலயங்களுக்கு எதிரே பொதுவாக பலிபீடம் மட்டுமே அமைக்கப்படுகிறது. அபூர்வமாக சில இடங்களில் யானை அல்லது குதிரை அல்லது சிங்கத்தின் உருவமே அமைக்கப் பட்டுள்ளது.

தென் மாட்டங்களில் சப்த மாதர் களுக்கு எதிரே வேதாளத்தை வாகனமாக அமைத்துள்ளனர்.

சப்தமாதர்களை அவர்களின் வாகனத்தின் பெயராலும், கொடிகளின் பெயராலும் இலக்கியங்கள் குறித்து மகிழ்கின்றன.திருத்தவத்துறை (லால்குடி) பெருந் திருப்பிராட்டி பிள்ளைத் தமிழில் சப்த மாதர்கள் அவர்கள் வாகனத் தின் பெயரால் குறிக்கப்பட்டுள்ளனர்.

பிராமியை நிலவு எழு சிறை ஓதிமத்தை நடத்துபவள் என்றும்; மகேசுவரியை அடல்ஏறு உகைத்துக் களிப்பவள் என்றும், கௌமாரியை நெடுவலி மயில் வாகனத்தில் சிறப்பவள் என்றும், வைஷ்ணவியை நிகழ் அரவு உணவும் ஊர்தியைப் பெற்று உகப்பவள் என்றும், வாராகியை அரிமா நடத்தும் சமர்த்தினள் என்றும், இந்திராணியை இமிழ் மத அயிராவணத்தைப் புரப்பவள் என்றும், சாமுண்டியை எழும் அலகையில் ஏறு வெற்றி குணத்தினள் என்றும் குறிக்கப் பட்டுள்ளது இங்கே சிந்திக்கத் தக்கதாகும். (ஓதிமம் - அன்னம், இடபம், (காளை,) மயில்-மயில் அரவு உண்பவள் -பாம்பு களை உண்ணும் கருடன், அரிமா- சிங்கம், அயிராணவம் - வெள்ளை யானை - அலகை பேய்) சப்த மாதர் களின் வாகனங்களும் வலிமையும் சிறப்பும் பொருந்தியவைகளாக இருக்கின்றன.

வேதாள வாகனம்

சப்தமாதர்கள் ஒவ்வொருவரும் தனக்கெனஎன தனித்தனி வாகனங்களைக் கொண்டுள்ளனர் என்றாலும், இவர்கள் சந்நிதிக்கு முன்பாகப் பலிபீடம் மட்டுமே நிலைப் படுத்தப்படுகிறது. கடலூர் முதலிய சில திருத் தலங்களில் மட்டும் எதிரே பலிபீடத்திற்கு முன்பாக வேதாளத்தை அமைத்துள்ளனர். போர்த் தெய்வங்களான சப்த மாதர்கள் வேதாள, பூத, பிசாசு கணங்களைப் படைகளாகக் கொண்டனர். அதையொட்டிச் சப்தமாதர்களின் சந்நி திக்கு முன்பாக பெண் வேதாளத்தை அமைக்கும் வழக்கம் வந்துள்ளது என்கின்றனர்.



❀ ஆடல் உவந்து ஆடிக் களிக்கும் சப்தமாதர்கள் (சுடுமண்சிற்பம்) ❀



ஆடல் உவந்த சப்தமாதர்கள்

பாரத தேசத்தில் வழிபடப்படும் தெய்வங்கள் யாவும் பாடுவதிலும், ஆடல்புரிவதிலும் பெரிதும் மகிழ்கின்றன. பெருந்தெய்வமாக விளங்கும் சிவபெருமான் ஆனந்த நடமாடும் நடராசனாகக் காட்சி தருகிறார். அமைதியாக காட்சி தரும் தெய்வங்களை விட போர்த் தெய்வங்களின் ஆட்டமும் பாட்டமும் அதிகமாக இருக்கின்றது. வீரர்கள் போர் புரிவதற்கு முன்பாகவும் போரில் பகைவரை அழித்தொழித்த மகிழ்ச்சியினாலும் ஆடல்புரிகின்றனர். வீரர்கள் பெரிய போரில் தாம் வெற்றியை அடைந்த போது அதைக் கொண்டாடப் பலவிதமான ஆடல்களை நிகழ்த்தினர். பகைவரை வென்ற வாளை ஏந்தி வீரர்கள் ஆடும் அமலை என்ற கூத்தையும், வெற்றிக் களிப்பால் ஆடும் வென்றிக் கூத்தையும் பழம் தமிழ் இலக்கியங்கள் சிறப்பாகப் பேசுகின்றன.

போர்த் தெய்வங்களாகவும், அதியுன்னத வெற்றியை மட்டுமே அடைபவர்களாகவும் இருக்கும் சப்தமாதர்கள் வெற்றிக்களிப்பால் ஆடுகின்றனர். ஆலயங்களில் பரிவார தெய்வமாக அமைக்கும் போது அவர்களை அமர்ந்த கோலத்தில் அமைப்பதே மரபு. பைரவர்களோடு அமைக்கும் போது நின்ற கோலத்தில் அமைக்க வேண்டுமென்று சிற்பநூல்கள் கூறுகின்றன.இதை நடைமுறையில் காண முடியவில்லை.

ஆலயங்களில் சப்தமாதர்களை நடன கோலத்தில் அமைத்து வழிபடாவிட்டாலும் கலைஞர்கள் கூட்டமாக இருந்து ஆடி மகிழும் சப்தமாதர்களை அமைத்துள்ளனர். தென்னாட்டில் இத்தகைய சிலைகளைக் காண முடியவில்லை. வடநாட்டுக் கலைஞர்கள் சப்தமாதர்களின் ஆடற் கோலத்தை அமைத்துள்ளனர். அவர்களோடு பிரியா திருக்கும் விநாயகர், வீரபத்திரர் ஆகியோரும் ஆடுகின்றனர்.

மேலே நடனமாடிக் கொண்டிருக்கும் சப்தமாதர்களையும் விநாயகரையும் வீரபத்திரரையும் காண்கிறோம். மேலும் அச்சிற்பத்தை ஒட்டிச் செய்யப்பட்ட சுடுமண் சிற்பத்தை எதிர்ப்பக்கத்தில் காண்கிறோம்.

சப்தமாதர் செய்த சிவவழிபாடு

உலகில் உயர்ந்ததும் சிறந்ததும் நிலைபேறு தருவதும் சிவவழிபாடே ஆகும். அதனால் அனைத்து தெய்வங்களும் மேன்மையும், நிலைபேறும் பெறச் சிவவழிபாட்டை மேற்கொண்டு சிவலிங்க பூசை செய்கின்றனர். சப்தமாதர்களும் சிவபூசை செய்வதில் விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர். காசி, திருவாரூர், காஞ்சி முதலிய அனேக திருத்தலங்களில் அவர்கள் சிவலிங்க வழிபாடு செய்து சிவனருளைப் பெற்றுள்ளனர். அவர்கள் சிவபெருமானை ஆராதித்து வழிபாடு செய்த தலங்களில் சிலவற்றை இங்கே சிந்திக்கலாம்.

திருவாரூரில் சப்தமாதர் வழிபாடு

சைவ சமயத்தின் ராஜதானியாகவும், தியாகராஜப் பெருமான் செம்பொற் சிம்மா தனத்தில் வீற்றிருந்து செங்கோல் நடத்தும் திருநகராகவும் இருப்பது திருவாரூர்.

யோக வித்தைகளின் ஆதாரத் தலமான திருவாரூரில் யோக வித்தைகளின் நாயகி



களான சப்தமாதர்களும் திருமகள், கலை மகள் ஆகியோருடன் சிவபெருமானை வழிபட்டுப் பேறுபெற்றதைத் தலபுராணம் விரிவாகக் கூறுகிறது.

திருவாரூரில் சப்தமாதர் பூசித்த லிங்கம் மூலத்தானத்திற்கு வடக்கில் இருந்ததாக வரலாறு கூறுகின்றது. மேலும், சப்த மாதர்களில் ஒருத்தியான கௌமாரி இங்கு தனியே வழிபாடு செய்ததைத் தலபுராணம் கூறுகிறது.

சோமாஸ்கந்தத் தலமான திருவாரூர் ஆலயத்தில் முருகனுக்குத் தனிச்சிறப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வூர்க்குரிய பெயர்களில் ஸ்கந்தபுரி என்பதும் ஒன் றாகும். இங்கு விசாக நட்சத்திரம் சிறப் புடன் போற்றப்படுகிறது.

அதுபோலவே முருகனின் அம்சமாக விளங்கும் கௌமாரியும் தனிச் சிறப்புடன் போற்றப்படுகிறாள். சப்தமாதர்கள் இங்கு வழிபட்ட போது அத்தொகுதியில் இடம் பெற்றிருந்த அவள் சிவ்பெருமானை வழிபட்டாள். அத்துடன் தான் தனியாக இருந்தும் சிவவழிபாடு செய்தாள். அவள் வழிபாடு செய்த சிவலிங்கம் கௌமாரீ சுவரர் என்னும் பெயரில் அமைந்திருந்தது.

கௌமாரி தேவி அகழ்ந்த திருக்குளமும் இருந்து வந்துள்ளது. திருவாரூர் புராணத்தில் அதன்சிறப்பும் அதில் மூழ்கி கௌமாரி லிங்கத்தை வழிபடுவதன் மூலம் கிடைக்கும் சிறப்புகளும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

இதன்படி ஆவணி மாதம் அவிட்டத்தில் பௌர்ணமி கூடிய அந்நாளில் இந்தத் தீர்த்தத்தில் மூழ்கி வழிபட்டால் வழிபடுபவரைப் பற்றியுள்ள குற்றங்கள் விலகும்.

திருவாரூர் ஆலயத்தில் சப்தமாதர் சந்நிதி இரண்டாம் தெற்குப் பிராகாரத்தில் உள்ளது. வடக்கு நோக்கி அமைந் ததான இச்சந்நிதியில் எழுந்தருளி யுள்ள சப்த மாதர்களின் திருவுருவங்கள் சோழ நாட்டிலுள்ள சப்தமாதர் சிலைகளில் பழைமையானதாகவும், சோழநாட்டுச் சிற்பிகளால் வடிக்கப்பட்டதாகவும் அறிஞர்கள் கூறுகின்றனர்.

மயிலாடுதுறையில் சப்தமாதர் வழிபாடு

மயிலாடுதுறை புராணத்தில் சப்த மாதர்கள் வழிபட்டது தனிச்சிறப்புடன் குறிக்கப்பட்டுள்ளது. அதன்படி, காவிரிக் கரையில் அமைந்துள்ள மாமரத்தின் கீழ் ஒப்பிலதாய் முளைத்த ஓர் சிவலிங்கம் சுயம்பு வடிவில் இருந்தது. அன்னை பராசக்தி மயில்வடிவுடன் சென்று, அவரை வழிபட்டாள். அதனால் அவருக்கு மாயூர நாதர் (மயிலப்பர்) என்பது பெயராயிற்று. அம்பிகையுடன் வந்த சப்தமாதர்கள் மாயூரநாதரை வணங்கிப் போற்றினர். மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் தனித் தனியே அருகிலுள்ள தலங்களுக்குச் சென்று அங்குள்ள சிவாலயங்களை வழிபட்டனர். அத்துடன் அவர்கள் தங்கள் பெயரால் சிவலிங்கத்தை அமைத்ததுடன்



தீர்த்தங்களையும் அமைத்து வழிபாடு செய்தனர்.

தலபுராணத்தின்படி, பிராமி முதலான சப்தமாதர்களும் கயிலைக்குச் சென்று இறைவனை வணங்கி, யாம் நின்னை வழிபட எண்ணுகிறோம். அதற்கு உரிய தலம் எது? என்று விண்ணப்பித்தனர். சிவபெருமான் "சப்தமாதர்களே! நீங்கள் சோழ நாட்டில் இடப தீர்த்தத்தில் மூழ்கி அதனைச் சுற்றி யுள்ள ஏழு தலங்களிலும் எம்மை வழிபடுக" என்று அனுப்பி வைத்தார். அவர்களும் அவ்வாறே வந்து காவிரியில் நீராடிப் பூசித்தனர்.

பிராமி - தான்தோன்றிய நாதரை வழிபட்டு எல்லா நலங்களையும் எய்தினாள். மாகேசுவரி-கருணபுரீசுவரரை வழிபட்டு பெருஞ்சிறப்பு எய்தினாள். கௌமாரி-கஞ்சாறூர் இறைவனை வழிபட்டுப் பல வரங்களை அடைந்து இன்புற்றாள். வைஷ்ணவி-பசுபதீச்சரத்தில் உள்ள புண்ணியநாதரைப் போற்றி உயர்ந்தாள். வாராகி-கழுக்காணி மட்டத்தில் உள்ள இறை வனைப் பூசித்துச் சிறப்பெய்தினாள். இந்தி ராணி தருமபுரத்திலுள்ள தருமபுரீசுவரரை வழிபட்டுப் பல வரங்களைப்

பெற்றாள். சாமுண்டி உத்தர மாயூர நாதரை வழிபட்டு உய்ந்தாள். இவ்விதம் சப்தமாதர்களும் இறைவனைத் தனித்தனியே வழிபட்டு வரம் பெற்றார்கள்.

குடந்தையைச் சுற்றி அமைந்த சப்தமங்கையர் வழிபட்ட ஏழுமங்கை

கும்பகோணத்தை அடுத்த தலம் திருச் சக்கரப் பள்ளியாகும். இதனைச்சுற்றி அரி மங்கை, சூல மங்கை, நந்திமங்கை, பசுபதி மங்கை, தாழைமங்கை, புள்ளமங்கை என்னும் ஊர்கள் உள்ளன.

திருச்சக்கரப் பள்ளியில் வீற்றிருக்கும் இறைவர் சக்ரவாகேசுவரர் என்றும் ஆலந்து றையீசர் என்றும் அழைக்கப்படுகிறார். அம்பிகை தேவநாயகி எனப்படும் அல்லி யங் கோதை ஆவாள்.

அரிமங்கையில் மகேசுவரியும், சூல மங்கையில் கௌமாரியும், நந்திமங்கை யில் வைஷ்ணவியும், பசுபதி மங்கையில் வாராகியும், தாழமங்கையில் இந்திராணி யும், புள்ளமங்கையில் சாமுண்டியும் வழி பட்டுப் பேறுபெற்றதாகக் கூறுகின்றனர்.

திருமீயச்சூரில் சப்தமாதர் வழிபட்ட சிவலிங்கங்கள்

திருவாரூருக்கு அருகி லுள்ள திருத் தலம் திருமீயச்சூர். ஆதிபரா சக்தி லலிதாம் பிகையாகக் கோயில் கொண் டுள்ள தலம். சக்தியின் பிரபாவங்களைப் போற்றிப் பேசும் நூலான லலிதா சகஸ்ரநாமம் தோன் றியது. இத்தலத்திலேயேயாகும்.இத்தலத் தில் சப்த மாதர்களும் சிவவழிபாடு செய்து மேன்மை பெற்றனர். அவர்கள் மேகநாதரான சிவபெரு மானை வழிபட்டது டன், தத்தம் பெயரால் தனியே லிங்கங்களை வைத்து வழிபட் டனர். அந்த லிங்கங்கள் பிராகாரத்தில் வரிசையாக இடம் பெற்றுள்ளன.

சிவாலயக் கருவறையில் சப்தமாதர்கள்

தேவாரப் பாடல் பெற்ற சோழ நாட்டுத் திருத்தலம் கடம்பன் துறை. இது இந்நாளில் குழித்தலை என வழங்குகிறது. சிவனடியார்கள் இதனைக் கடம்பர் கோயில் என்று போற்று கின்றனர். இத் தலத்திலுள்ள இறைவன் கடம்பவனேசுவரர் என்றும், இறைவி முற்றிலா முலை அம்மன் என்றும் அழைக்கப்படுகின்றனர்.

இங்கு கடம்ப மரத்தின் கீழ் ஒப்பிலதாய் முளைத்த சிவலிங்கத்தைச் சப்தமாதர்கள் வழிபட்டுப் பேறு பெற்றதாகத் தலபுராணம் கூறுகிறது.

போர்த் தெய்வங்களான சப்தமாதர்கள் அசுரர்களைக் கொன்றதால் உண்டான பெரும் பாவம் நீங்க இங்கு வீற்றிருக்கும் சிவபெருமானை வழிபட்டு அப்புண்ணியத்தால் மேன்மை பெற்றனர். இதைக் குறிக்கும் வகையில் இங்குக் கருவறையில் கடம்பவனநாதரான சிவ லிங்கத்திற்குப் பின்புறம் (கருவறைச் சுவரில்) சப்த மாதர்களின் திருவுருவம் அமைக்கப் பட்டுள்ளன. கருவறையில் சிவலிங்கத்திற்குப் பின்புறம் சப்தமாதர் அமைக்கப்பட்டிருப்பது இத்தலத்தில் மட்டுமே என்பதால் இங்குள்ள சப்த மாதர்கள் தனிச் சிறப்பைப் பெறுகின் றனர். இவ் வரிசையில் விநாயகர் முதலில் அமையாமல் கடைசியில் அமைந்திருப்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இது முருகன், பிரம்மதேவர், இந்திரன் முதலியோர் பூசித்துப் பேறு பெற்ற தலமாகும்.

ஏழுமாதர்கள் பூசித்த எழுமாத்தூர்

கொங்குநாட்டுப் பெருநகரமான ஈரோடுக்கு அருகில் பூந்துறை என்னும் தொன்மையான ஊர் உள்ளது. பழைமையும் வரலாற்றுச் சிறப்பும் மிக்க இத் தலத்தின் சிறப்புக்களை விளக்கி, காளியண்ணப்புலவர் அவர்களால் பூந்துறைப் புராணம் என்ற நூல் பாடப்பட்டுள்ளது. இந்நூலில் இத்தலத்திற்கு அருகிலுள்ள எழுமாத்தூர் பற்றிய புராண வரலாற்றைக் காண்கிறோம். (இத்தலம் சப்தமாதர்களால் பூசிக்கப்பட்டதால் ஏழுமாதர் ஊர் என்று அழைக்கப்பட்டு, இப்போது எழுமாத்தூர் என வழங்குகிறது என்கின்றனர். இங்குள்ள சிவாலயத்தில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கும் சக்தீசர் என்பது பெயராகும். சக்தியர்களான சப்த மாதர்களுக்கு அருள்புரிந்ததால் அவர்கள் பெயரால் சக்தீசர் என்று அழைக்கப்படுகிறார். இவரது தேவியின் திருப்பெயர் பாகம் பிரியாள் என்பதாகும்.

இத்தலத்திற்குச் சக்திவனம் என்பதும் பெயராகும்.

பூந்துறைப் புராணம் இந்த எழுமாத்தூர் பற்றிக் குறிப்பிடும் செய்தியைப் பார்ப்போம்.

ஒரு சமயம் சப்தமாதர்களான பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி என்ற எழுவரும் விண்ணில் பயணித்தனர். அவர்கள் ஒரு மலைச்சாரலில் பெரிய அரங்கமும் அதையொட்டி அழகிய திருக்குளமும் இருக்கக் கண்டனர். அவர்கள் அங்கு சென்று அங்கிருந்த அரங்கில் அம்மானை, கழங்கு, பந்தாடல் முதலிய அனேக விளையாட்டுகளை ஆடி மகிழ்ந்தனர்.

நெடுநேரம் ஆட்டத்தில் திளைத்ததால் அவர்கள் மனம் மகிழ்ச்சியில் திளைத்தாலும் உடல் களைப்பை அடைந்தது. அந்தக் களைப்பை நீக்கிக் கொள்ள அவர்கள் அருகில் இருந்த குளத்தில் நீராடினர். நெடுநேரம் நேரம் போவதே தெரியாமல் குதித்தும், நீந்தியும், குடைந்தும் விளையாடி மகிழ்ந்தனர். நீண்டநேரம் ஆடிக் களித்தபின் அவர்கள் குளத்தை விட்டுக் கரை ஏறினர்.

கரை ஏறிய போது அவர்கள் ஆண்களாக மாறி இருந்தனர். அதனால் அவர்கள் திகைப்பும் வேதனையும் அடைந்தனர். அக்குளம் பால்மாறிக் குளமாகும்.

அக்குளத்திற்கு அதிபதிகளாக இருந்த முனிவர்கள் இந்தக் குளத்தில் தம் அனுமதி இல்லாமல் மூழ்குபவர்கள் பால் மாறிவிடுக என்ற சாபத்தை அளித்திருந் தனர். (ஆண்கள் மூழ்கினால் பெண்களாகவும், பெண்கள் மூழ்கி ஆண்களாகவும் மாறுவதே பால் மாறுதல் என்பதாகும்.) முனிவர்களின் சாபத்தால் ஆண் வடிவம் எய்திய சப்தமாதர்கள் மனம் வருந்தி, அந்தக் குளத்தின் அதிபதி

யான முனிவர்களைத் தேடிச் சென்றனர். அவர்களைக் கண்டு (வணங்கி) தமக்குச் சாபவிமோசனம் தரும்படி வேண்டினர்.

அந்த முனிவர்கள், நீங்கள் கொங்கு நாட்டில் உள்ள பூந்துறைக்கு அருகில் உள்ள வனத்தில் சென்று தவம் செய்யுங்கள் சிவ பெருமான் உமக்குச் சாப விமோசனம் தருவார் என்றனர். அதன்படியே அவர்கள் சந்தனம், பாக்கு, தேக்கு முதலான நெடிய மரங்கள்நெருங்கி வளர்ந்ததும் அழகிய பூக்களை மிகுதியாக மலர்விக்கும் மரஞ்செடி கொடிகள் நிறைந்ததுமான இந்த இடத்திற்கு வந்து சிவலிங்கம் அமைத்து வழிபாடு செய்து தவத்தில் ஆழ்ந்தனர்.

இருபத்தோராயிரம் ஆண்டுகள் கழிந்தன. அவர்களது அயராத தவத்தைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் அவர்கள் வழிபட்ட லிங்கத்திலிருந்து வெளிப்பட்டு அவர்களுக்குக் காட்சி அளித்தார்.

அவர்கள் அவரை அடிபணிந்து போற்றினர். அவர் அவர்களுடைய ஆண் உருவை நீக்கி, முன்னிலும் பொலிவான பெண்ணுருவைத் தந்ததுடன், அரிய வரங்களையும் தந்தார்.

அவர்கள் மகிழ்ச்சியுடன் விடை பெற்றுக் கொண்டு அருகில் உள்ள ஊரொன்றில் குடியேறி நிலைபெற்றனர். சப்தமாதர்கள் எழுமாத்தூரில் வழிபட்ட பின் விடைபெற்றுக்கொண்டு சென்று தங்கிய ஊர் அவர்கள் பெயரால் பிடாரியூர் எனப் பெயர் பெற்றது. அங்கு அவர்க ளுக்கென அமைந்த ஆலயம் திருப்பிராட்டி ஆலயம் எனப் பெயர் பெற்றது என்கில் றனர். கொங்கு நாட்டில் சப்தமாதர் வழி பாடு பல இடங்களில் சிறப்புடன் திகழ்கி றது என்றாலும், அதில் எழுமாத்தூரும் பிடாரியூரும் தனிச்சிறப்பைப் பெற்றுள்ளன.

சப்தமாதர்கள் சூடும் நவரத்தின மாலைகள்

தெய்வங்கள் மார்பில் மலர்மாலைகளுடன் பொன்னாபரணங்களையும் பூணுகின்றனர்.



அவர்கள் பலவிதமான அணிகளை அணிந்தாலும் அவர்களுக்கே உரியதான இரத்தின மாலைகளும் உள்ளன.

பிராம்மி ஸ்படிக மாலையையும்,மகேஸ்வரி உருத்திராக்க மாலைகளையும், கௌமாரி முத்துமாலைகளையும் வைஷ்ணவி வைஜயந்தி என்னும் மாலைகளையும்(துளசி மாலைகளையும்), வாராகி பவழமாலைகளையும், இந்திராணி இந்திர நீலக்கற்கள் பதித்த இந்திர ஹாரத்தையும், சாமுண்டி பகைவர்களின் மண்டை ஓடுகளால் ஆன மாலை களையும் அணிந்திருக்கின்றாள். இவர்களுடன் அமர்ந்திருக்கும் விநாயகர் மரகத மணி மாலைகளையும், மாசாத்தன் மணிகளைக் கொண்டு தொடுத்த மாலை களையும் அணிந்துள்ளனர்.

இவர்களில் கௌமாரி மார்பின் குறுக்காகத் தோளில் அணியும் சன்னவீரம் என்னும் இரட்டை வீரச்சங்கிலிகளையும் அணிந்துள்ளாள்.

நங்கைவரத்து நங்கைமார் எழுவர்

பெண்களை நங்கை என்னும் சொல்லால் அழைக்கின்றனர். இச்சொல்லுக்கு அறிவும் ஆற்றலும் மிக்கவள் என்பது பொருள். ஆண்களை நம்பி என்றும், பெண்களை நங்கை என்றும், போற்றுகின்றனர். சப்தமாதர்களை இவ்வகையில் நங்கைமார் எழுவர் என்னும் சொல்லால் அழைத்து மகிழ்கின்றனர்.


மணக்கால் என்னும் ஊரிலுள்ள சப்தமாதர் கோயில் **நங்கைமார் எழுவர்** கோயில் என்று அழைக்கப்பட்டு வந்துள்ளது. சென்ற சிலகாலம் வரை இதனை மக்க்ள் நங்கைமார் கோயில் என்றே அழைத்துவந்தனர். இப்போது ஊரின் பேரால் மணக்கால் ஆயிகோயில் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த மணக்கால், திருச்சியை அடுத்த லால்குடிக்கு அருகிலுள்ளதாகும்.

இங்குள்ள சப்தமாதர் ஆலயம் சிறப்புடன் பராமரிக்கப்பட்டு அழகாகக் காட்சிதருகிறது.

நங்கைமார்களான சப்தமாதர் எழுவரும் வழிபட்ட சிவத்தலம் ஒன்று உள்ளது. அது அவர்கள் பெயரால் நங்கைவரம் என்று அழைக்கப்பட்டு, இப்போது நங்கவரம் என்று வழங்குகிறது. இத்தலத்தில் சப்தமாதர்கள் சிவவழிபாடு செய்துள்ளனர். அவர்களுடைய தவத்திற்கு மகிழ்ந்து சிவபெருமான் வரங்களைத் தந்தார். நங்கைகள் வரம்பெற்ற காரணத்தால், இவ்வூர் நங்கவரம் என்று பெயர் பெற்றது. திருச்சியிலிருந்து ஏறத்தாழ 20 கி.மீ. தொலைவில் உள்ள இந்த நங்கவரம் வரலாற்றுச் சிறப்புமிக்க ஊராகும். இவ்வூரில் சப்தமாதர்கள் வழிபட்ட பெரிய சிவாலயம் உள்ளது. தனியே சப்தமாதர் கோயிலும் சிறப்புடன் உள்ளது. இந்த சப்தமாதர் கோயிலை மக்கள் சாத்தாண்டி அம்மன் கோயில் என்று அழைக்கின்றனர். இக்கோயிலைத் தேள்மாலையம்மன் கோயில் என்றும் கூறுகின்றனர்.இங்குள்ள சப்தமாதர் தொகுதியில் சாமுண்டி தேவி நடுவே வீற்றிருக்கிறாள். அவள் தேள் கூட்டத் தை மாலையாக அணிந்துள்ளாள். இவளது கல் திருமேனியிலேயே தேள் மாலையானது செதுக் கியமைக்கப் பட்டுள்ளதால், இவளுக்குத் தேள்மாலை அம்மன் என் பதும் பெயரா யிற்று. பேருந்து நிலையத் திற்கு அருகி லேயே இக் கோயில் அமைந் துள்ளது. இவர்களுக்கு அருள்புரிந்து இங்கு கோயில் கொண்டிருக்கும் சிவபெரு மானுக்குச் சுந்தரேசுவரர் என்பதும், அம்பி கைக்குக் கோமளாம்பிகை என்பதும் பெயராகும்.



சிவபெருமானின் அஷ்ட பரிவாரங் களில் சப்தமாதர்



அதியுன்னத வீரனும் எப்போதும், எவ ராலும் வெல்லமுடியாதவனும், பகைவர் களை அழித்து அடக்கி அவர்களுக்கு அருள் பாலிப்பவனும் பெரும் தெய்வ மு மான சிவபெருமானைச் சுற்றி சதா கால மும் பிரியாதிருக்கும் தெய்வங்களைப் பரிவாரம் என்று அழைக்கின்றனர். இ த்தகைய துணைத்தெய்வங்கள் அனேகம் உள்ளன.


அவர்களில் எட்டு பேரைத் தேர்ந்தெ டுத்து, அஷ்டபரிவார மூர்த்திகள் என்று அன்பர்கள் வணங்குகின்றனர். கிழக்கில் நந்திதேவர், தென்கிழக்கில் சூரியன், தெற் கில் சப்தமாதர்கள், தென்மேற்கில் விநா யகர், மேற்கில் முருகன், வடமேற்கில் அன்னை பராசக்தி, வடக்கில் சண்டீசர், வடகிழக்கில் பைரவர் என்னும் எண்மரும் சிவபெருமானுக்கு அஷ்ட பரிவாரங்களாக எழுந்தருளியுள்ளனர் என்று பூஜாபத்ததி நூல்கள் கூறுகின்றன.

இவர்களில் சப்தமாதர்கள் தனிச் சிறப்பைப் பெறுகின்றனர். இவர்களைச் சிவபெருமானின் அகோரமுகத்திற்கு எதி ராக அமைக்கவேண்டும் என்பது விதி. அத னால் கருவறையில் உள்ள லிங்கத்திற்குத் தெற்கு முகமான திசையில் அமைந் திருக் கும் தட்சிணாமூர்த்திக்கு நேர்எதிரில் அமைத்துள்ளனர். சப்தமாதர்களை எப் போ தும் வடக்கு நோக்கியே அமைக்கின்றனர். இவர்கள் போரில் விருப்பமுள்ளவர்கள்.

இவர்களைத் தனியே அமைப்பது இல்லை. இவர்களுக்குக் கிழக்கில் விநாயக ரையும், மேற்கில் எட்டாவது பெண்ணான யோகினியையும் அமைக்கின்றனர். தென் னாட்டில்யோகினியை நீக்கிவிட்டு பால பைரவரையும் வீணை வாசித் துக் கொண் டிருக்கும் சிவனை அமைத்துள் ளனர். வீணை வாசிக்கும் பாலபைரவனுக்குப் பதி லாக வீரபத்திரன் அல்லது யோக சிவன் அல்லது பால சாஸ்தா ஆகியோரை அமைப் பதும் உண்டு. சப்த மாதர்களுடன் விநாயகர் கண்டிப் பாக இடம் பெறுகிறார். இடத்திற்கு ஏற்ப, வீரபத்திரர்,அல்லது சாத்தன் அல்லது யோக சிவனைக் காண்கிறோம்.

சோழர்கால, பல்லவர்கால சிவாலயங் கள் அனைத்திலும் சப்தமாதர்கள் இடம் பெற்றுள்ளனர். கேரளத்தில் இவர்கள் அனைத்துச் சிவாலயங்களிலும் மந்திரப் பூர்வமாக வழிபடப்படுகின்றனர்.

சக்தி பஞ்சாவரண பூஜையில் சப்த மாதர்கள்



அன்னை பராசக்தியை ஆகம நூல்கள் மகா கௌரி என்று அழைக்கின்றன. அம்பிகை ஆலயம் கௌரி ஆலயம் என்று அழைக்கப்படுகிறது. அன்னை கௌரியை வழிபடும் போது அவளைச் சுற்றி அமைந்துள்ள ஐந்து ஆவரணங்களில் வீற்றிருக்கும் பஞ்சாவரண தேவதைகளையும் பூசிக்கிறோம். இவ்வகையில் இரண்டாவது ஆவரணத்தில் வீற்றிருக்கும் சப்தமாதர்கள் உடனான துர்க்கையை வழிபடுகிறோம். இந்த ஆவரணம் எனப்படும் வீதியில் கிழக்கில் பிராம்மி, தென் கிழக்கில் மகேசுவரி, தெற்கில் கௌமாரி, தென் மேற்கில் வைஷ்ணவி, மேற்கில் வாராகி, வடமேற்கில் இந்திராணி, வடக்கில் சாமுண்டி, வடகிழக்கில் துர்க்கை ஆகியோர் எழுந்தருளியுள்ளனர்.

இந்த பஞ்சாவரணத்தில் மட்டுமின்றி, அன்னை பராசக்திக்கு அமைக்கப்படும் வேள்விச் சாலை களிலும் துர்க்கை உடனான சப்த மாதர்கள் பூசிக்கப்படுகின்றனர்.


சக்தி வழிபாட்டில் சப்தமாதர்கள் நீங்காத இடம் பெற்றுள்ளனர்.

கொடியேற்றத்தில் சப்தமாதர் வழிபாடு

சிவாலயங்களில் பெருந்திருவிழாவை முன்னிட்டு ஏற்றப்படும் கொடியேற்று விழாவில் சப்தமாதர்கள் மந்திரப் பூர்வமாகப் பூசிக்கப்படுகின்றனர்.

கொடிமரத்தின் அடிப்பகுதியில் அமைந்த தாமரை மலர் போன்ற பீடத்தைத் தாங்கும் மேகலையில் இவர்கள் பூசிக்கப்படுகின்றனர்.

மேலும் திரிசூலத்தில் சகலதேவதா ஆவாகனம் எனப்படும் அனைத்து தேவர்களையும் வரவேற்று எழுந்தருளச் செய்யும் ஆவாகன பூசை நடைபெறுகிறது. அதில் திரிசூலத்தின் பீடத்திலுள்ள தாமரைப் பீடத்தில் கௌரிகை உடனான சப்த மாதர்கள் நிலைப்படுத்தப் பட்டுப் பூசிக்கப்படுகின்றனர். இதில் சப்தமாதர்களின் உருவ வர்ணனையுடன் பீஜ மந்திரங்களும் இடம் பெற்றுள்ளன.



கேரளத்திலுள்ள பகவதி கொடி மரங்களின் அடிப்பகுதியில் சப்தமாதர்கள் சிறிய வடிவில் உலோகத்தால் செய்து எட்டுத் திசைகளிலும் பொருத்தப்பட்டுள்ளனர்.

தென்னகத்துக் கிராமிய் தெய்வ வழிபாடுகளில் நடத்தப்படும் கொடியேற்று விழாக்கள், முளைப்பாரி விழாக்கள் ஆகியவற்றிலும் சப்த மாதர்கள் வழிபடப்படுகின்றனர்.

புகழ்பெற்ற சப்தமாதர் சந்நிதிகள்

சிவாலயங்களில் அஷ்ட பரிவாரங் களில் ஒன்றாக சப்தமாதர் கூட்டம் போற்றப்பட்டு, தட்சிணாமூர்த்திக்கு நேர் எதிரில் அவர்கள் நிலைப்படுத்தப்பட்டுள் ளனர். பழம்பெரும் கோயில்கள் அனைத் திலும் இம்முறையே கடைப்பிடிக்கப் பட்டுள்ளது.

சில தலங்களில் கோயிலுக்கு முன் னுள்ள முற்றத்தில் சப்தமாதர் வடக்கு நோக்கி அமைக்கப்பட்டுள்ளதைக் காண்கி றோம். எடுத்துக்காட்டாக திருவக்கரை, கடலூர் (திருப்பாதிரிப்புலியூர்) போன்ற ஊர்களில் கோயிலுக்கு முன்னுள்ள முற்றத்தில் சப்தமாதர்கள் அமைக்கப் பட்டுள்ளன. அத்துடன் அவற்றிற்கு வேறு பெயர்களும் வழங்குகின்றன. எடுத்துக் காட்டாக, திருவக்கரை ஆலயத்து சப்த மாதர் சந்நிதி வக்ரகாளியம்மன் சந்நிதி என்றும், திருஒற்றியூரிலுள்ள சப்தமாதர் சந்நிதி வட்டப்பாறை அம்மன் சந்நிதி என்றும், அழைக்கப்படுவதைக் காண் கிறோம்.

சிவாலயங்களுக்கு உள்ளேயும், அதை ஒட்டியும் அமைந்துள்ள சப்தமாதர் சந்நிதிகள் சிலவற்றைப் பற்றி இங்கே சிந்தித்து மகிழலாம்.

காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலய சப்தமாதர்கள்



கல்வியில் கரையில்லா கச்சி என்று போற்றப்படும் காஞ்சிமாநகரில் பல்லவர்கள் கண்ட கலைக்கோயில்கள் பல உள்ளன. இவற்றில் தலைசிறந்ததாக இருப்பது காஞ்சி கயிலாயநாதர் ஆலயமாகும். இது அறுபத்து மூன்று அடியவர்களில் ஒருவரான காடவர் கோன் கழற்சிங்கன் என்று அழைக்கப்படும் மாமன்னன் ராஜசிம்மனால் கட்டப்பட்டதாகும். ஏறத்தாழ ஆயிரத்து அறுநூறு ஆண்டு பழைமையான இத்திருக்கோயி லில் சப்தமாதர்கள் இடம் பெற்றுள்ளனர். இவ்வரிசையில் சப்தமாதர்களுடன் விநாயகப் பெருமானும் பாலசாத்தனும் இடம் பெற்றுள்ளனர். இது தொன் நெடுங்காலமாக சப்தமாதர் வழிபாடு இந்த நாட்டில் நிலவி வந்ததைப் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

திருக்கோயிலூர் சப்தமாதர்கள்

தென்னக புராணங்களின்படி, சிவபெருமான் அந்தகாசுரனை அழித்து அருள் பாலித்த இடம் திருக்கோயிலூர் ஆகும். இது பெண்ணையாற்றின் தென் கரையில் உள்ள தலம். இங்கு ஆற்றின் தென் கரையில் வீரட்டேசுவரர் ஆலயம் உள்ளது. இங்கு அந்தகாசுர மூர்த்தி உற்சவராக எழுந்தருளியுள்ளார். இப்போது அந்தகாசுர சம்ஹார பைரவமூர்த்தியும் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளார்.

சிவபெருமான் சப்தமார்களைத் தோற்றுவித்த இடமும் இதுவேயாகும். இங்குள்ள வீரட்டேசுவரர் ஆலயத்தின் முதல் பிராகாரத்தில் சப்தமாதர்களின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. நீண்ட பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக அமைக்கப்பட்டுள்ள இந்த சப்தமாதர் வடிவங்கள் கலையழகு மிக்கவைகளாகும்.





திருவண்ணாமலை சப்தமாதர்கள்

பஞ்சபூதத் தலங்களில் அக்கினித் தலமாக விளங்குவது திருவண்ணா மலை. இத்தலத்தில் அண்ணாமலையார் ஆலயம் அமைந்துள்ளது. இந்த ஆலயத் தில் இரண்டு இடங்களில் சப்தமாதர்கள் இடம் பெற்றுள்ளனர். முதலாவது, சப்த மாதர்கள், தட்சிணாமூர்த்திக்கு நேர் எதிரில் திருமாளிகைப் பத்தியில் வடக்கு நோக்கி அமைந்துள்ளனர். இது ஒரே பலகைக் கல்லில் வடிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவதான தொகுதி கொடிமரப் பிராகாரத்தில் ஈசான மூலையில் வடக்கு நோக்கி அமைந்துள்ள ஆலயத்தில் உள்ள தாகும். இந்தச் சப்தமாதர் சந்நிதி பெரிய அளவிலானது. இதன் முற்றத்தில் கல்லா லான நெடியசூலம் நிலைப்படுத்தப் பட்டுள்ளது. இந்தச் சந்நிதியில் சிறிய அளவில் பலகைக் கல்லில் புடைப்புச் சிற்பமாக சப்தமாதர்கள் அமைக்கப் பட்டுள்ளனர். இந்தச் சந்நிதி பிடாரி சந்நிதி என்று அழைக்கப்படுகிறது. பெருந்திரு விழாவிற்கு முன்பாக இங்குப் படைய லிட்டு வழிபாடு செய்கின்றனர்.





பெரிய சந்நிதிக்குள் சிறிய வடிவில் சப்த மாதர்கள் அமைந்திருப்பதும், இச்சந்நிதிக்கு முன்பாக நாட்டப்பட்டிருக்கும் நெடிய சூலமும் வேறெங்கும் காண முடியாத காட்சிகளாகும்.

திருவண்ணாமலையில் மலையின் ஈசான பாகத்தில் பச்சையம்மன் ஆலயம் அமைந்துள்ளது. இக்கோயிலை ஒட்டி அழகிய திருக்குளம் அமைந்துள்ளது. குளத் தின் கரையில் வடக்கு நோக்கியவாறு அழகிய வளைவு அமைக்கப்பட்டு, அவற் றில் தனித்தனியே சப்தமாதர்களின் வடிவங் கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை வண் ணப் பொலிவுடன் விளங்குகின்றன.

திருவக்கரை சப்தமாதர்கள் (வக்ர காளி அம்மன்)

தொண்டை நாட்டுத் தலங்களில் ஒன்றாக இருப்பது திருவக்கரை. திண்டி வனத்திலிருந்து மயிலம் வழியாக, பாண்டி செல்லும் சாலையில் பயணித்தால் இடையில் பெரும்பாக்கம் என்ற ஊரை அடையலாம். இங்கிருந்து தெற்கு நோக்கி 5 கி.மீ சென்றால் சங்கராபரணி ஆற்றையும் அதைத் தாண்டி அதன் தெற்குக் கரையில் உள்ள திருவக்கரையையும் அடையலாம். சோழர் காலத்தில் உன்னத நிலையில் வைத்துப் போற்றப்பட்ட சிவாலயங்களில் திருவக்கரை சந்திர மௌலீசுவரர் கோயி லும் ஒன்றாகும். கருவறையில் அளவால் பெரியவடிவமும், மூன்று முகங்களைக் கொண்டதுமான பெரிய லிங்கமாகச் சந்திர மௌலீசுவரர் காட்சி தருகிறார்.

இக்கோயிலில் கண்டார் சூரியன் திருக் கோபுரம் என்று சம்புவரையர் காலக் கல்வெட்டு குறிப்பிடும் ராஜகோபுரத்தைக் கடந்து உள்ளே சென்றதும், பெரிய முற்றத் தைக் காண்கிறோம். இந்த முற்றத்தில் வடக்கு நோக்கியவாறு சப்தமாதர்கள் சந்நிதி அமைந்துள்ளது. இதிலுள்ள ஏழு மாதர்கள் வடிவங்களும் மிகப் பெரியதாகும். இங்கு நடுவில் சும்ப,நிசும்ப மர்த்தனியாக சாமுண்டி தேவி எழுந்தருளியுள்ளாள். இவளை வக்ரகாளி என்று அழைக்கின் றனர். காதில் பிணத்தோடு அணிந்துள் ளாள். எட்டுக் கரங்களுடன் திகழ்கிறாள். சப்த மாதர்கள் தொகுதியில் அமையும் சாமுண்டியை நான்கு கரங்களுடன் அமைப் பதே வழக்கம். இங்கு அவள் எட்டுக் கரங்களுடன் காட்சி தருகிறாள். ஒரு காலை பீடத்தில் குத்திட்டு ஊன்றியும் ஒரு காலை பீடத்தில் தொங்கவிட்டும் அமர்ந்துள்ளார். வலது முன்கை குத்துவாளைக் கொண்டு ஓங்கிக் குத்தும் பாவனையிலும், இடது கை கபாலத்துடன் சூசி முத்திரையிலும் உள்ளன. மற்றக் கரங்களில் வில், அம்பு, சுரிகை, கேடயம், கபாலம் முதலியன உள்ளன. இச்சந்நிதிக்கு வடக்கில் மேற்கு நோக்கியவாறு வக்ரகாளி பூசித்த வக்ர லிங்கம் உள்ளது.

பௌர்ணமி தோறும் திரளான மக்கள் நள்ளிரவில் கூடி வழிபாடு செய்கின்றனர். வேள்விகளும் இயற்றப்படுகின்றன.



வக்ரகாளியம்மன் - திருவக்கரை

திருஒற்றியூர் சப்தமாதர்கள் (வட்டப்பாறை அம்மன்)

சென்னையின் வடபகுதியாகத் திகழும் நகரம் திருஒற்றியூர். புண்ணிய பூமியான திருஒற்றியூர் ஞானிகளின் இருப் பிடமாகத் திகழ்கிறது. திருஞானசம் பந்தரும், சுந்தர ரும் பாடிப் பரவிய தேவா ரத்தலம். இங்கு சிவபெருமான் புற்றிடங் கொண்ட நாதர் என்ற பெயரிலும், அம்பி கைவடிவுடை நாயகி என்ற பெயரி லும் எழுந்தருளியுள்ளனர். இக்கோயிலில் தியாகேசப் பெருமான் எழுந்தரு



ளியுள்ளார். அவர் பெயராலேயே இக் கோயில் தியாக ராஜசுவாமி கோயில் என்று அழைக்கப் படுகிறது.

இக்கோயிலில் எழுந்தருளியுள்ள சப்த மாதர்கள் சந்நிதி பலவகையிலும் தனித் தன்மை மிக்கதாக விளங்குகிறது. வழக்க மாகக் கருவறையின் தெற்கில் தட்சிணா மூர்த்திக்கு நேர் எதிரில் இருக்கும் சப்த மாதர் சந்நிதி மாறாக இங்கு வடக்குப் பிராகாரத் தில் வடக்கு நோக்கியவாறு அமைந்துள் ளது.

இச்சந்நிதிக்கு நேர் எதிரில் குறுகிய வாயில் அமைந்துள்ளது. வாயிலுக்கு நேர் எதிரில் தெற்கு நோக்கியவாறு கொடிமரம், பலிபீடம் ஆகியன அமைந்துள்ளன. சந்நிதி யில் சப்தமாதர்களுக்கு முன்பாக வட்ட மான பெரிய பாறை உள்ளது. அந்த வட்டப் பாறையின் பெயரால் இச்சந்நிதி வட்டப் பாறை அம்மன் சந்நிதி என்று அழைக்கப் படுகிறது.

இங்கு தினமும் பூசைகள் சிறப்பாக நடத்தப்படுகின்றன. சித்திரை மாதத்தில் கொடி யேற்றி ஏழு நாட்கள் விழா கொண் டாடப்படுகிறது. சிவாலயத்தில் கொடி மரத்துடன் கூடியதாகவும் தெற்குப் பிரா காரத்தில் இருப்பதற்குப் பதிலாக வடக்குப் பிராகாரத்தில் இருப்பதாகவும் காணப்படு வதால், இச்சந்நிதியை தனித் தன்மை கொண்டதாக விளங்குகிறது.



திருவையாறு சப்தமாதர்கள்

சைவர்கள் போற்றும் சிவத்தலங்களின் வரிசையில் தனியிடம் பெற்றது திருவையாறு. திருவையாறு காவிரிக் கரையில் அமைந்த மாபெரும் சிவத் தலமாகும். காவிரியின் பெயரால் காவிரிக் கோட்டம் என்ற சிறப்புப் பெயரைப் பெற்றது. இத்தலத்தில் பரந்து விரிந்த பெரிய ஆலயமாக ஐயாறப்பர் ஆலயம் திகழ்கிறது. இந்த ஆலயத்தில் கருவறையைச் சுற்றி அமைந்த சுற்றுப் பிராகாரம் தனிச் சிறப்பு மிக்கதாகும்.

இதில் சிவபெருமானின் சடை மண்டலம் பரவி இருப்பதாக அன்பர்கள் கூறுகின்றனர். இப்பிராகாரத்தில் சப்த மாதர்களின் பலகைக் கல் சிற்பம் அமைந்துள்ளது. மக்கள் இதனை வலம் வருவதில்லை என்றாலும், தெற்குப்பக்கம் சென்று அங்குள்ள சப்தமாதர்களை வணங்கி, தட்சிணாமூர்த்தியை வழிபட்டுத் திரும்புவது வழக்கம். இங்குள்ள சப்தமாதர்கள் பல்லவர்களால் அமைக்கப்பட்டதாகும். இதில் ஒவ்வொரு பெண்ணின் வலப்புறத்தும் தண்டம் ஒன்று உள்ளது. அந்த தண்டத்தின் மீது அந்தப் பெண் தெய்வத்திற்குரிய வாகனம் அமைந்துள்ளது.





தஞ்சைப்பெரிய கோயிலில் சப்தமாதர்கள்

ஆலயங்களில் கருவறையைச் சுற்றி அட்டதிக்குப் பாலகர்கள், ஊர்த்துவ, அதோ திக்பாலகர்கள், அஷ்டபரிவாரங் கள் ஆகிய தெய்வங்களை மந்திரப்பூர்வ மாக நிலைப்படுத்தி வணங்குகின்றனர். கேரள ஆலயங்களில் இந்தப் பதினெட்டு பேர்களைக் குறிக்கும் வகையில் பலிபீடங் கள் அமைக்கப்பட்டு, தினமும் மந்திரப் பூர்வமாக பூசை செய்யப்படுகிறது.

மாமன்னன் இராஜராஜன் தான் கட்டிய தஞ்சைப் பெரிய கோயிலில் ஸ்ரீவிமா னமான கருவறையைச் சுற்றிப் பெரிய சுற்றுத் திருமாளிகையை அமைத்ததுடன், அதில் உரிய இடத்தில் அஷ்டதிக்குப்



பாலகர்கள், அஷ்டபரிவாரங்கள், நாகர்கள் ஆகியோரையும் எழுந்தருளி வைத்து அவர்களுக்கு உரிய வழிபாடுகளை நடத்தச் செய்தான்.

தஞ்சைப் பெரிய கோயிலைச் சுற்றியுள்ள திருமாளிகையில் தெற்குத் திருமாளி கையில் வடக்கு நோக்கியவாறு சப்தமாதர் கள், சந்நிதி அமைக்கப்பட்டுள்ளது. அதில் சப்தமாதர்களும் விநாயகரும் யோக சிவ னும் அமைக்கப்பட்டிருந்தனர்.

படையெடுத்து வந்த அந்நியர்கள் கோயில்களைக் கொள்ளையிட்டதுடன் கோயிலில் இருந்த வழிபடு மூர்த்தங்க ளையும் உடைத்துச் சேதப்படுத்தினர். அந்த வகையில் சப்த மாதர்களின் சிலைகளும் சேதப்படுத்தப்பட்டன. வாராகியின் திருவுரு வமும் அந்நிலையை அடைந்தது. தஞ்சாவூர் ஆலயத்தில் அது புதையுண்டு இருந்தது.

பின்னாளில் அன்பர்கள் வாராகியை எடுத்துக் கிழக்கு நோக்கியவாறு அமைத்து வழிபடத் தொடங்கினர். இந்த வாராகி நினைத்ததை நிறைவேற்றி வைக்கும் தெய்வ மாக விளங்குவதால், ஏராளமான அன்பர் கள் வந்து வழிபாடு செய்கின்றனர்.

விவசாயிகளின் தெய்வமாகவும், பூமா தேவியின் அம்சமாகவும் திகழும் வாராகி தஞ்சைப் பெரிய கோயிலில் சிறப்புப் பெற்று அன்பர்களால் கொண்டாடப்படும் தெய்வ மாக விளங்குகிறாள்.

தஞ்சையில் இப்போது இராஜராஜ னால் அமைக்கப்பட்ட சப்தமாதர் சந்நிதி வெற்றிடமாக இருக்கிறது. சப்தமாதர் தொகு தியில் இருந்த வாராகி மட்டும் புதிய சிறிய சந்நிதிக்குக் குடிபெயர்ந்து சிறப்புடன் அருள் பாலித்து வருகிறாள்.


நாட்டுப்புற தெய்வங்களாக விளங்கும் சப்தமாதர்கள்.

சப்தமாதர்கள் சிவபெருமானின் பரிவார தேவதைகளில் ஒன்றாக இருப்ப துடன் ஊர்க்காவல் தெய்வங்களாகவும் இருக்கின்றனர். தமிழகத்தில் அனேக ஊர்களில் சப்தமாதர்கள் ஊர்க்காவல் தெய்வங்களாக வீற்றிருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர். இங்கே இவர்களது ஆலயம் சப்தமாதர் கோயில் என்று அழைக்கப்படுவதில்லை. வட்டார வழக்கத்திற்கு ஏற்ப, பிடாரி கோயில், ஏழு பிடாரி கோயில், பொன்னியம்மன் கோயில், செல்லி அம்மன் கோயில் என்று பலவிதமான பெயர்களைப் பெற்றுள்ளன. இக்கோ யில்கள் யாவும் ஊருக்கு வடக்கே, வடக்கு நோக்கியவாறு அமைந்துள்ளன.

இந்தக் கோயில்கள் மன்னர்கள் பெயரால் சோழி யம்மன் கோயில், பாண்டி யம் மன் கோயில், வஞ்சியம் மன்கோயில் என்றும் அழைக் கப்படுகின்றன.

நாடு, நகரம் என்பவவை தொழில் வாழ்க்கை முறை யை ஒட்டி மக்கள் வாழும் பகுதிக்கு இடப்பட்ட பெயர் களாகும். நாடு என்பது பயிர்த் தொழிலை அடிப்படையாகக் கொண்ட மக்கள் வாழும் ஊர்களைத் தன்னகத்தே கொண் டது. நகரம் என்பது வியாபாரம் செய்யும் மக்கள் கூடி வாழும் இடமாக இருப்பது.

நாட்டுப்புறம் அமைதியும், எளிமை யும் நிறைந்தது. நகர வாழ்வு பகட்டும், ஆரவாரமும் நிறைந்தது. சப்தமாதர்கள் நாடு நகரம் என்னும் இரண்டு பகுதிகளி லுமே காவல் தெய்வமாக இருந்து மக்களின் வழிபாடுகளை எற்றுக் கொண்டு அருள்புரிந்து வருகின்றனர்.



இங்கே காணும் படத்தில் லால்குடியில் அமைந்துள்ள இளமாடச்சி அம்மன் சந்நிதியைக் காண்கிறோம். இது சப்தமாதர்களுக்கான கோயிலாகும். முகப்பின் மீது சப்தமாதர்கள் சுதை வடிவங்களாக அமைக்கப் பட்டுள்ளனர். படம் உதவி. லண்டன்வாசி லால்குடி வேதநாராயணன்

நாட்டுப்புறத்தில் பயிர்த்தொழிலின் தேவதைகளாகச் சப்தமாதர்கள் கொண்டாடப்படுவதால், விளைநிலங்களுக்கு நடுவே சப்தமாதர்களின் ஆலயத்தை அமைக்கும் வழக்கம் உள்ளது. நாட்டுப்புற ஊர்களுக்கும் அவர்கள் காவல் தெய்வங்களாக இருக்கின்றனர். நாட்டுப்புறத் தெய்வங்களாக அமையும் வேளையில் மரத்தடியில் அமைந்த மேடையில் திறந்தவெளிக் கோயிலாகவும், இவர்கள் திருவுருவங்கள் அமைக்கப்பட்டிருப்பதையும் காண்கிறோம்.

திருத்தணிகை வடமீனாட்சியம்மன் கோயில், மானாமதி சோழியம்மன் கோயில், திருமுக்கூடல் பொன்னியம்மன் கோயில், திருத்தினைநகர் பொன்னியம்மன் கோயில், வேளச்சேரி செல்லியம்மன் கோயில், லால்குடியைஅடுத்த இளமாடச்சியம்மன் கோயில், கோவை பேரூர் ஏழு பிடாரி கோயில், சென்னை ஆலப்பாக்கம் ஏழூர்ப் பிடாரி கோயில் பரமேஸ்வரமங்கலத்துப் பிடாரியம்மன் போன்றவை கிராமியக் காவல் தெய்வங்களாக இருக்கும் சப்தமாதர்கள் கோயிலாகும்.

கிராமிய தெய்வமாக விளங்கும் சப்தமாதர்கள் கோயில்கள் சிலவற்றை இங்கே சிந்திக்கலாம்.

வேளச்சேரி செல்லியம்மன் ஆலயம்

தென்சென்னையில் கிண்டிக்கு அருகில் அமைந்துள்ள ஊர் வேளச்சேரி.



வேளச்சேரியில் புராதன சிவாலயம் உள்ளது. யமன் தனது தண்டத்தையே சிவலிங்கமாக அமைத்துப் பூசித்த தலம் ஆனதால், இறைவன் தண்டீசுவரர் என்று அழைக்கப்படுகிறார். வேளச்சேரியின் கிராம தேவதையாக சப்தமாதர்கள் எழுந்தருளியுள்ளனர். இது பல்லவர் காலத்துக் கோயிலாகும். இங்கு சப்தமாதர்கள் சாமுண்டி, இந்திராணி, வாராகி, வைஷ்ணவி, கௌமாரி, மகேசுவரி, பிராம்மி என்னும் வரிசையில் அமைந்துள்ளார். இந்த வரிசையின் இருகோடியிலும் விநாயகரும் வீரபத்திரரும் எழுந்தருளியுள்ளனர்.

இக்கோயிலில் இரண்டு கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன. முதல் கல்வெட்டில் வேளச்சேரியில் இருக்கும் இந்தக் காளப்பிடாரி ஆலயத்தில் தினவழிபாட்டிற்கும் விளக்கெரிக்கவும், சோழமன்னன் ஒருவனால் அளிக்கப்பட்ட நிலக் கொடையைப் பற்றிய செய்தி காணப்படுகிறது.

இரண்டாவது கல்வெட்டில் சோழ நாட்டைச் சேர்ந்த வேட்பூருடையான் என் பவர் நிலத்தை வாங்கி ஊர்ச் சபையாரிடம் கொடுத்ததையும், சபையார் இந்த சப்த மாதர் ஆலயத்திற்கு அதை மானியமாக வழங்கியதையும் அதை இக்கோயில் அலு வல்களைக் கண்காணிக்கும் மாத்ரு பிராமணர்கள் ஏற்றுக் கொண்டதையும் தெரிவிக்கிறது. சிவன் கோயில் அந்தணர்கள், சிவப்பிராமணர்கள் என்று அழைக்கப் பட்டதைப் போல மாத்ரு தேவியர் ஆலயத் தை நிர்வகிப்போர் மாத்ரு பிராமணர் என்று அழைக்கப்பட்டதை இக்கல்வெட்டின் மூலம் அறிகிறோம்.

அன்பில் ஆச்சிராம வல்லியாரான சப்தமாதர்கள்

ராமம் என்பதற்கு இனிமைதரும் இடம் என்பது பொருள். ஆச்சிராமம் என்பதற்கு விரும்பி வாழ்வதற்கு ஏற்ற இனிய இடம் என்பது பொருள். காவிரியின் வேகம் மிகுந்த (பாய்ச்சல்) இடத்தில் இருந்த இடம் பாச்சில் ஆச்சிராமம் என்று அழைக்கப்படுகிறது.

விரும்பித் தொழும் அடியவர்களுக்கு இனிய வரங்களைத் தரும் தேவியரான சப்தமாதர்கள் ஆச்சிராம வல்லியர் என்று அழைக்கப்பட்டனர். 108 திவ்ய தேசங்களில் ஒன்றும் திருமால் வடிவழகியநம்பி என்னும் பெயரில் வீற்றிருப்பதுமான அன்பில் என்னும் திருப்பதியில் கோயில் கொண்டிருக்கும் சப்தமாதர்களுக்கு ஆச்சிராம வல்லி என்பது பெயராகும். இங்கு கடந்த காலத்தில் மூலத்தானத்தில் இடம் பெற்றிருந்த அன்னையர் எழுவர் திருவுருவங்களும் பிராகாரத்தில் வைக்கப்பட்டுள்ளன. இப்போது புதியதாகச் செய்யப்பட்ட திருவுருவங்கள் மூலத்தானத்தில் இடம்பெற்றுள்ளன.

கோயில் சிறப்பாகத் திருப்பணி செய்யப்பட்டு, வழிபாடுகள் நன்கு நடைபெற்று வருகின்றன.

தகவல் உதவி - திரு.மோகன்தாசு ஸ்தபதியார் - சுவாமிமலை

திருக்குற்றாலம் பராசக்தி பீடத்தில் சப்தமாதர்கள்

பாண்டிய நாட்டுப் பழம்பதியான திருக்குற்றாலத்தில் குற்றால அருவியின் கீழ் குற்றால நாதர் ஆலயம் உள்ளது. இவரது தேவி குழல்வாய் மொழியம்மை தனிக்கோயிலில் எழுந்த ருளியுள்ளாள். இங்கு தரணி பீடம் என்னும் சக்திபீடம் உள்ளது. இந்தப் பீடம் அமைந் துள்ள கருவறையில் விநாயகர், பைரவர் முதலிய பரிவாரங்களுடன் சப்தமாதர்களும் எழுந்த ருளியுள்ளனர். சப்தமாதர்களோடு இருக்கும் பீடம் இதுவாகும். இங்கு பராசக்தி மும் மூர்த்தி களைத் தொட்டிலில் இட்டுத் தாலாட் டினாள் என்கின்றனர். அந்தத் தொட்டிலுக்குத் **தாணு மாலயப் பூந்தொட்டில்** என்பது பெயராகும். அந்தத் தொட்டிலைச் சப்தமாதர்கள் காத்து வருகின்றனர்.



குற்றாலநாதர் ஆலயப் பிராகாரங்களிலும் பரிவார தெய்வமாகச் சப்தமாதர்கள் வீற்றிருக் கின்றனர். இக்கோயிலில் இரண்டு நிலைகளில் அன்னையர் எழுவரைக் காண்கிறோம்.

திருமுக்கூடல் - பழையசீவரம் சப்தமாதர்கள் கோயில்

செங்கல்பட்டிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் சாலையில் பாலாற்றின் வட கரையில் பழைய சீவரம் என்னும் ஊர் உள்ளது. பல்லவ சிங்கபுரம் என்னும் ஊர்ப் பெயரே இப்போது பழைய சீவரம் என்று வழங்குவதாகக் கூறுகின்றனர். இங்கு பாலாற்றங்கரையில் சிறிய குன்றும், அதன் மீது பெருமாள் ஆலயமும் உள்ளன. மலை யடிவாரத்தில் ஆற்றங்கரை அம்மன் என்னும் பெயரில் ஒரு அம்பிகை ஆலயம் உள்ளது. இதில் தொன்மையான பல்லவர் கால சப்தமாதர்கள் கல்திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. இது தொன்மை மிகுந்த கோயிலாகப் போற்றப்படுகிறது. அன்பர் கள் இதனைச் செல்லியம்மன் கோயில் என்று அழைக்கின்றனர்.



பல்லவ மன்னனும் அவனது தேவியும்

இக்கோயில் எளிய கருங்கல் கட்டிட மாக உள்ளது. இதனுள் மணற் கல்லால் ஆன சப்தமாதர்கள், யோகசிவன், விநாய கர் திருவுருவங்கள் இடம் பெற்றுள்ளன. இவை தனித்தனிச் சிற்பங்களாகும். இவை பல்லவர் காலத்தியவையாகும். மிகவும் தேய்ந்துள்ளன. இச்சிலைகள் அமர்ந்திருக்கும் கோலம், கண்டு மகிழத் தக்கதாகும். ஒவ்வொரு தேவியும் நளின மாக உடல் வளைந்து நெளிந்து ஆர்ப்பாட் டத்துடன் அமர்ந்துள்ளனர். இவர்கள் அமர்ந்திருக்கும் கோலமே இவர்கள் மகிழ்ச்சியில் திளைத்திருப்பதைக் காட் டுகிறது. நமக்கும் அவர்கள்மகிழ்ச்சி நிறைந்த வாழ்வைத் தரக் காத்திருக் கின் றனர். கோயில் பூசாரியால் பூசிக் கப்படுகிறது.

பழைய சீவரத்திற்கு நேரா கப் பாலாற்றின் தென் கரையில் திரு முக்கூடல் என்னும் ஊர் உள்ளது. இங்கும் பழைமை யான சப்த மாதர் கோயில் உள்ளது. இதனை மக்கள் செல்லி யம்மன் கோயில் என்றே அழைக்கின்றனர். இக்கோ யிலில் உள்ள சப்தமாதர் சிற்பத் தொகுதி ஒரே நீண்ட பலகைக் கல்லில் செதுக்கி அமைக்கப் பட்டுள்ளது. துணைத் தெய்வங் களான விநாயகரும் யோக சிவனும் தனியாக இல்லாமல் சப்தமாதர்களுடன் சேர்த்தே அமைக் கப் பட்டுள்ளனர். இதுவும் பல்லவர்



சப்தமாதர்களின் உருவங்கள் - திருமுக்கூடல்

காலத் தியதாகும். இந்தச் சிற்பத்தொகுதி காஞ்சி கயிலாயநாதர் ஆலயத்திலுள்ள சப்தமாதர் சிற்பத் தொகுதியை ஒத்ததாக இருக்கிறது. இதில் சப்தமாதர்கள் ஒயிலாக அமர்ந்துள் ளனர். இக்கோயிலின் அர்த்த மண்டபத்தில் பல்லவமன்னனும் அவனது தேவியும் அமர்ந்த நிலையில் உள்ள புடைப்புச் சிற்பம் உள்ளது. இது காஞ்சிபுரம் கயிலாயநாதர் ஆலயத்திலுள்ள அரசன் அரசியர் வடிவை ஒத்துள்ளது. இக்கோயில் ஊர்மக்களால் பெரிதும் போற்றப்படுகிறது. கருவ றையை விசாலமாக விமானத்துடன் கட்டியுள்ள னர். பிராகாரத்தில் நவக்கிரகங் கள், விநாயகர், நாகர் சந்நிதிகள் உள்ளன. சப்தமாதர்களின் சுதைச் சிற்பத் தொகுதி ஒன்றும் உள்ளது.உவச்சன் இனத்தினர் பூசை களைச் செய்கின்றனர்.

இந்த இரண்டு ஊர்களும், பல்லவர்கள் காலத்திலும் தொடர்ந்து சோழர்கள் காலத்திலும் சிறப்புடன் விளங்கியதை வரலாறு தெரிவிக்கின்றது.

பரமேசுவரமங்கலத்து சப்தமாதர்கள் ஆலயம்

சென்னை-பாண்டிச்சேரி கிழைக் கடலோர சாலையில் பாலாற்றின் கரையில் பரமேசுவரமங்கலம் என்னும் ஊர் உள்ளது. இது பல்லவப் பேரரசனான பரமேசுவர வர்மனால் வேதமோதும் பிராமணர்களுக்குத் தரப்பட்ட ஊராகும். இது அவன் பெயரால் பரமேசுவர மங்கலம் என்று அழைக்கப்பட்டது. இங்கு புராதனமான சப்தமாதர் ஆலயம் உள்ளது. இங்குள்ள சப்தமாதர்களின் வடிவங்கள் பெரியதாகவும் சிறந்த கலைப் படைப்பாகவும் உள்ளன. பல்லவர் காலத்தில் சப்தமாதர்கள் வழிபாடு பெற்றிருந்த பெருஞ் செல்வாக்கை இந்த ஆலயம் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றது.

எசாலம் (பிடாரிப்பட்டு) சப்தமாதர்

விழுப்புரத்திலிருந்து செஞ்சி செல்லும் சாலையில் எசாலம், எண்ணாயிரம், பிரம்மதேசம் என்னும் ஊர்கள் அடுத்தடுத்து உள்ளன. இவை மூன்றும் மாபெரும் சோழமன்னர்களான விஜயாலயன், ஆதித்தன், பராந்தகன், இராஜராஜன் ஆகியோர் ஆட்சிக்காலத்தில் பெருஞ் சிறப்புப் பெற்றிருந்த ஊர்களாகும். எசாலத்தில் சோழர்கால சிவாலயம் உள்ளது. திருவாலீசுவரம் என்றழைக்கப்படும் இக்கோயில் சோழர் கட்டிடக் கலைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். எண்ணாயிரத்தில் பெரிய பெருமாள் கோயில் உள்ளது. இங்கு சோழர்கள் காலத்தில் பெரிய கல்விச்சாலை இருந்தது. அதற்கு மன்னனின் நேர்ப்பார்வையில் அளிக்கப்பட்ட கொடைகளைப் பற்றிய செய்திகளை இங்குள்ள கல்வெட்டுகள் கூறுகின்றன. பிரம்மதேசத்தில் சோழர் காலத்திய பெரிய சிவாலயம் இருக்கிறது. இங்கு ராஜராஜன் பெயரால் தண்ணீர்ப் பந்தல் இருந்துள்ளது. இது பிரம்ம ஸ்தானத்து ஸ்ரீராஜராஜன் தண்ணீர்ப் பந்தல் என்று அழைக்கப்பட்டது. அதில் ஊர் மக்கள் கூடியிருந்து கிராம நிர்வாகப் பணிகளைப் பார்த்துக் கொண்டிருந்த போது ராஜராஜன் திருவாய் மொழிந்தருளினபடி இப்பகுதியில் இருக்கும் சப்தமாதர் கோயிலுக்கு நிலதானம் அளிக்கப்பட்டது. அதை இவ்வூர் பிராமணர்கள் ஏற்றுக் கொண்டனர். இந்தக் கொடையின் மூலம் சப்தமாதர் கோயிலுக்குத் தினமும் நந்தா விளக்கு எரிப்பதற்காக ஆடுகள் அளிக்கப்பட்டன.

சப்தமாதர் கோயில் நூற்றுக் கணக்கில் இருந்த போதிலும் அவற்றிற்கு அளிக்கப்பட்ட தானங்களைப் பற்றிக் கூறும் கல்வெட்டுகள் சிலவேயாகும். அவற்றில் ஒன்றாக இராஜராஜசோழனின் கொடையைப் பெற்ற கோயிலாக எண்ணாயிரம் எசாலம் சப்தமாதர் கோயில் திகழ்கிறது.

இக்கோயில் எசாலத்திலிருந்து ஏறத்தாழ 3 கி.மீ. தொலைவில் உள்ள பிடாரிப்பட்டு என்னும் ஊரில் அமைந்துள்ளது. கருவறையில் சப்தமாதர்களின் கல்திருமேனிகள் மிகப் பெரியதாக அமைக்கப்பட்டுள்ளன. இவை சோழர்காலக் கலைப் பாணியில் அமைந்தவையாகும். இக்கோயிலுக்கு எதிரில் உள்ள கல்லில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

ஆதியில் இக்கோயில் வயல்வெளிக்கு நடுவே அமைந்திருந்ததாகவும், காலப்போக்கில் அதைச் சுற்றி ஊர் உருவானதாகவும் கூறுகின்றனர். பிடாரி கோயிலைச் சுற்றி அமைந்த ஊர் பிடாரியின் பெயரால் பிடாரிப்பட்டி என்று பெயர் பெற்றதாகக் கூறுகின்றனர்.

எசாலத்திலும் செல்லியம்மன் என்னும் பெயரில் சிறிய சப்தமாதர் ஆலயம் உள்ளது.


மானமதி சோழியம்மன்

தொண்டை வளநாட்டில் காஞ்சி புரத்திற்குத் தெற்கே சேயாற்றங்கரையில் பெருநகர், மானாமதி என்னும் ஊர்கள் உள் ளன. இவை இரண்டும் சோழர்கள் காலத்தில் பெருஞ்சிறப்பைப் பெற்றிருந் தவையாகும். இதில் மானாமதி என்று இந் நாளில் அழைக்கப்படும் ஊர் சோழப் பேரரசியான **வானவன் மாதேவியின்** பெய ரால் புனரமைக்கப்பட்டதாகும். வானவன் மாதேவி என்ற பெயரே மானாமதி என்று மருவி வழங்குகிறது. இவ்வூரிலுள்ள சிவாலயம் வானவன் மாதேவீச்சரம் என்று அழைக்கப்பட்டு, இன்னாளில் வான சுந்தரேசுவரர் ஆலயம் என வழங்குகிறது.


வானவன் மாதேவி என்ற பெயரில் சம காலத்தில் இருவர் இருந்துள்ளனர். முதலாமவள் சுந்தரசோழனின் மனைவி யும், மலையமான் மகளும்ஆன வானவன் மாதேவியார். சுந்தரசோழன் தன் வாழ் நாளின் இறுதிப்பகுதியைக் காஞ்சியில் இருந்த பொன் மாளிகையில் கழித்து அங் கேயே மாண்டான். அவனை வரலாறு பொன்மாளிகைத் துஞ்சிய சுந்தரசோழன் என்று குறிப்பிடுகிறது. அவனுடன் அவன் மனைவி வானவன் மாதேவியும் உடன் கட்டை ஏறினாள். இவளை மக்கள் பத்தி னித் தெய்வமாகக் கொண்டாடினர். இவ ளது குமாரனே ராஜராஜ சோழன் ஆவான். மலையமான் மகளான இவள் இராஜராஜ னைப் பெற்றதைக் குறிக்கும் வகையில் கல்வெட்டொன்றில் புலியைப் பயந்த பொன்மான் என்று போற்றப்படுகிறாள். இவள் பெயரால் வானவன் மாதேவி என்று பெயர் பெற்ற ஊரே பின்னாளில் மானாமதி ஆனதென்பர்.

மற்றோர் வானவன் மாதேவி இராஜ ராஜ சோழனின் மனைவியாவாள். இவளை வானதி என்று அழைத்தனர். இவள் இராஜ ராஜசோழனின் அபிமானக் காதலியாக இருந்து கரம் பிடித்தவள். ராஜராஜனுக்குப் பின் பட்டமேற்ற இராஜேந்திரசோழனைப் பெற்றவள். இவள் பட்டம் ஏற்க விரும்பாத தால் இராஜராஜனின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தவள் தந்திசக்தி விடங்கியார் லோக மாதேவியாவாள். தன் தாயின் பெயரால் இராஜேந்திரசோழன் இவ்வூரை அமைத் தான் என்கின்றனர்.

செய்திகள் பலவாயினும் சோழப் பேரரசி வானவன் மாதேவியின் பெயரால் அமைந்த ஊர் மானாமதி என்பதில் மாற்ற மில்லை. இவ்வூரின் வடமேற்கில் விசா லமாக சப்தமாதர் ஆலயம் அமைந்துள்ளது. இதில் ஏறத்தாழ 2.5 அடி உயரம் கொண்ட சப்தமாதர் வடிவங்கள் ஒரே பாறையில் செதுக்கி அமைக்கப்பட்டு உள்ளன. இவர் களுடன் விநாயகரும் வீரபத்திரரும் உள்ள னர். சோழியம்மன் என்ற பெயரில் சப்த மாதர் ஆலயம் உள்ளது. இந்த ஆலயம் சோழர்களின் ஆட்சிக் காலத்தில் பெருஞ் சிறப்பைப் பெற்றிருந்ததால், அவர்கள் பெயரால் சோழியம்மன் என்று அழைக் கப்படுவதாகக் கூறுகின்றனர்.



ஏழு பிடாரியும் ஏழூர் பிடாரியும்



பிடாரம் என்ற சொல் அடக்கி ஆள்வதைக் குறிக்கிறது. பாம்பை அடக்கி ஆள்பவன் பாம்புப் பிடாரன் என்று அழைக்கப்படுகின்றான். இச்சொல்லுக்குப் பெருமை மிக்கவர்கள் பீடு உடையவர்கள் என்றும் பொருள் கூறுகின்றனர். இக்கருத்துகளைக் கொண்டு தேவாரத்தை ஆள்பவர்கள் பிடாரர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். போர்த் தெய்வங்களாகவும், அடுத்தவர்களை அடக்கி ஆள்வதில் பிரியமுள்ளவர்களாகவும், பெருமை மிக்கவர்களாகவும் இருக்கும் சப்த மாதர்களும் பிடாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர். சில கிராமங்களில் இவர்கள் ஏழு ஊர்களுக்குரிய பிடாரிகள் என்று பொருள்பட ஏழூர்ப் பிடாரிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

கோவையை அடுத்துள்ள பேரூர்ப் புராணங்களில் மேலைச் சிதம்பரம் என்று போற்றப்படுகிறது. இங்கு சிவபெருமான் பட்டீசுவரர் என்ற பெயரிலும் அன்னை பராசக்தி பச்சை நாயகி என்ற பெயரிலும் கோயில் கொண்டுள்ளனர். இத்தலத்தில் சப்தமாதர்களுக்கான திறந்தவெளிக் கோயில் தனியே உள்ளது. இதில் பிராம்மி முதலான ஏழு மங்கையரும் எழுந்தருளியுள்ளனர். மக்கள் இந்த ஆலயத்தை ஏழு பிடாரி அம்மன் கோயில் என்று அழைக்கின்றனர். இதுபோல் அனேக ஊர்களில் சப்தமாதர்கள் ஆலயம் ஏழு பிடாரி கோயில் என்று அழைக்கப்படுவதைக் காண்கிறோம்.

சென்னை ஆலப்பாக்கத்தில் தொன்மை மிக்க சப்தமாதர் ஆலயம் உள்ளது. இதனை நடைமுறையில் ஏழூர் பிடாரி கோயில் என்று அழைக்கின்றனர். இதுபோல் பல ஊர்களில் சப்தமாதர்கள் ஏழூர் பிடாரி யாக இருந்து அருள்பாலித்து வருகின்றனர்.

பீடை என்றால் துன்பம், வறுமை என்பது பொருள். அரி என்றால் அழித்தல். பீடைகளை அழித்து நல்லருள் புரிவதால் இவர்கள் பிடாரிகள் என்று அழைக்கப்படுவதாகவும் கூறுகின்றனர்.

சிவாலயங்களில் கொடியேற்றிச் செய்யப்படும் பெருந்திருவிழாவிற்கு முன்பாகப் பிடாரிக்குப் படையலிட்டு விழா எடுக்கின்றனர்.

திருவண்ணாமலை ஆலயத்தில் ஈசானத்தில் அமைந்துள்ள சப்தமாதர் கோயில் பிடாரி கோயில் என்று அழைக்கப்படுகிறது. பெருந்திருவிழாவிற்கு முன்பாக இங்கே சிறப்பு வழிபாடுகள் நடத்தப்படுகின்றன.



சப்தமாதர்களில் ஒருத்திக்கென அமைந்த கோயில்

சப்தமாதர் வழிபாடு என்பது ஏழு பெண் தெய்வங்களைக் கூட்டாக வைத்து வழிபடும் வழிபாடே ஆகும். பொதுவாக சப்தமாதர்கள் எழுவரையும் ஒன்றாக ஒரே வரிசையில் ஒரே பீடத்தில் அமைத்து வழிபடும் வழக்கமே பெரும்பாலான தலங்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. பிராமி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி வாராகி, இந்திராணி, சாமுண்டி என்னும் வரிசையிலேயே இவர்களை வைத்து வணங்குகின்றனர்.

சில இடங்களில் இம்முறை மாறியும் உள்ளது. பிராமணர்கள் சப்தமாதர்களை வழிபடும் வேளையில் பிராமியை முதன்மைத் தெய்வமாக நடுவில் வைத்து வழிபடுகின்றனர். இவ்விதமே வைசியர்கள் வைஷ்ணவியையும், ஆடல் மகளிரும், மருதநில மக்களும், இந்திராணியையும், க்ஷத்திரியர்கள் காளிதேவியையும் வேளாளர்கள் வாராகியையும் அரசர்கள் மகேசுவரியையும், வீரகைக்கோளர்கள் கௌமாரியையும் நடுவில் வைத்து வழிபடும் நிலை இருந்ததாகக் கூறுகின்றனர். திருவக்கரையில் காளிதேவி (சாமுண்டி) நடுவில் இருக்க, மற்றவர்கள் மும்மூவராக இருபுறமும் இருப்பது இங்கே சிந்திக்கத் தக்கதாகும்.

காலப் போக்கில் இந்த ஏழு பேர்களில் ஒருத்தியை முதன்மைத் தெய்வமாகக் கருவறையில் வைத்து அவளுக்கென ஆலயம் அமைத்து, மற்றவர்களை அவளுக்குப் பரிவாரமாக அமைத்து வழிபடும் வழக்கமும் வந்துள்ளது.

சிதம்பரத்தில் பிராமிக்கும், வீரபாண்டியில் கௌமாரிக்கும், கன்னட நாட்டிலுள்ள உடுப்பியில் இந்திராணிக்கும், இமய மலையில் வைஷ்ணவி தேவிக்கும், காசியில் வாராகிக்கும், மகேஸ்வரிக்கு சீமாபுரத்திலும் சாமுண்டிக்கு மைசூர் சாமுண்டி மலையிலும் தனி ஆலயங்கள் இருப்பது இங்கே குறிப்பிடத் தக்கதாகும். சிதம்பரத்தில் பிராமியை நடுவில் வைத்து, மற்றவர்களைப் பரிவாரமாக அமைத்துள்ள நிலையைக் காண்கிறோம்.

இன்னும் சில இடங்களில் சப்த மாதர்களில் ஏதாவது ஒருத்திக்கு மட்டும் தனிச்சிறப்பளித்து அவளுக்குக் கோயில் அமைத்து வழிபாடு செய்கின்றனர். அவற்றில் சிலவற்றைப் பற்றித் தொடர்ந்து வரும் பக்கங்களில் அறிந்து மகிழலாம்.

தில்லையில் சப்தமாதர் வழிபாடும் பிராமியான தில்லையம்மன் கோயிலும்

சைவ சமயத்தின் தலைநகராகவும் கோயில் என்று சிறப்பித்துப் போற்றப்படும் தலமாகவும் இருப்பது சிதம்பரமாகும். சிதம்பரத்தில் சப்தமாதர் வழிபாடு தனித் தன்மையுடன் காணப்படுகிறது. பொதுவாக சப்தமாதர்களைச் சிவபெருமானுக்குப் பரிவார தெய்வமாக அமைப்பதே வழக்கம். ஆனால் சிதம்பரத்தில் அவர்களை நடராசரின் பிராகாரத்தில் அமைக்காமல் அன்னை சிவகாம சுந்தரியின் ஆலயத்தில் அவளுக்குப் பரிவாரமாக அமைத்துள்ளனர். மேலும், இந்த வரிசை



பிராமியிலிருந்து தொடங்கி, சாமுண்டியில் முடிவதற்குப் பதிலாகச் சாமுண்டியில் தொடங்கி, பிராம்மியில் முடிகிறது. இந்த வரிசையில் விநாயகர், வீரபத்திரர் ஆகிய துணைத் தெய்வங்களும் அமைக்கப்படவில்லை என்பது கவனிக்கத் தக்கதாகும்.

மேலும், சப்தமாதர் வரிசையில் முதலில் இடம்பெறும் தேவியான பிராமிக்கு பிரம்மசாமுண்டி என்னும் பெயரில் தனி ஆலயத்தையும் அமைத்துள்ளனர்.

தில்லைவாழ் அந்தணர்களாகிய தீக்ஷிதர்கள் வேதத்தைப் பாதுகாத்து வளர்ப்பவர்கள். அதனால் வேத வடிவமாக விளங்கும் பிராமியை பிரம்மசாமுண்டி என்ற பெயரில் வழிபடுகின்றனர். சிறப்புக் கருதி பிரம்மசாமுண்டியை அவள் வீற்றிருக்கும் தில்லைவனத்தின் பெயரால் தில்லையம்மன் என்றும் அழைக்கின்றனர்.

பிராமி சூரிய மண்டலத்தில் வீற்றிருப்பதாகக் கூறுவர். அதையொட்டிச் சூரியனை மேற்கு நோக்கி அமைப்பது போல் இவளையும் மேற்கு நோக்கி அமைத் துள்ளனர். இவளது வடிவம் மேற்கரங் களில் ஜெபமாலை, சூலம் ஆகியவை தாங்கியிருக்க, முன் கரங்களில் தாமரையும், பானபாத்திரமும் உள்ளன. சுகாசனத்தில் வீற்றிருக்கும் இவளது காலடியில் ஓர் அசுரன் வீழ்ந்து கிடக்கிறான். கருவறையில் அமைந்துள்ள இந்த பிரம்ம சாமுண்டியின் வடிவம் மிகவும் அழகியதாகும்.

தில்லையம்மன் (எ) பிரம்மசாமுண்டி

மூலவரைப் போலவே இரண்டு உலாத் திருமேனிகள் உள்ளன.

கருவறை மீது ஒற்றைக் கலசம் கொண்ட ஏகதள விமானம் அமைந்துள் ளது. கருவறைக் கோட்டங்களில் பிராம்மி, வைஷ்ணவி, விநாயகர், மகேசுவரி, துர்க்கை ஆகியோர் எழுந்த ருளியுள்ளனர்.

கருவறைக் கோட்டங்களில் பிரம்மா இருக்க வேண்டிய இடத்தில் பிராமியும், கிழக்கில் விஷ்ணுவிற்குப் பதிலாக வைஷ் ணவியையும், தெற்கில் தட்சிணாமூர்த்திக் குப் பதிலாக மகேசுவரியும் அமைக்கப்பட் டுள்ளனர். மேலும், தெற்குக் கோட்டம் ஒன்றில் எட்டாவது மாதாவான கௌரிகை எனப்படும் தேவி வீணை மீட்டியவாறு நின்ற கோலத்தில் அமைக்கப்பட்டுள்ளாள். இவளை இங்கு சரஸ்வதி என்று குறித்துள் ளனர். இப்படி சப்தமாதர்களின் தனிப் பெரும் சிறப்புப் பெற்ற ஆலயமாக சிதம்பரம் தில்லையம்மன்கோயில் விளங் குகிறது.



சப்தமாதர் வரிசையில் ஏழாவதான சாமுண்டி இங்கு தில்லைக் காளியம்மனாக எழுந்தருளியுள்ளார். இவளே இறைவனை ஆடல் கண்டு அருளிய காளிதேவியாவாள். இவளது சந்நிதி கிழக்கு நோக்கி அமைந் துள்ளது.

இக்கோயில் தீக்ஷிதர்களால் சிறப் புடன் போற்றப்படுகிறது. வைகாசி மாதம் நடைபெறும் தேர்த்திருவிழாவில் தில்லை யம்மனான பிராமி ரத வீதிகளில் தேரில் பவனி வந்து அன்பர்களுக்கு அருள் பாலிக் கிறாள்.

பிரம சக்தியம்மன்

தென்மாவட்டங்களில் பிரம சக்தி அம்மன் என்னும் பெயரில் பல ஆலயங்கள் உள்ளன. இவற்றில் பெரும்பாலானவை ஆதியில் பிராமி தேவிக்கான ஆலயமாக இருந்த வைகளாகும். இப்போது தனிப்பட்ட குலங்களின் குல தெய்வமாக விளங்குகின்றன.

பிரம்ம சக்தியம்மன் பற்றிய பல நாட்டுப்புறப் பாடல்களில் பிரமசக்தியம்மனின் தோற்றம், வரலாறு முதலியவை குறிக்கப்பட்டுள்ளன. இவை ஆகமவழிகளில் விளக் கப்பட்ட செய்திகளிலிருந்து விலகி, வட்டார வழக்கிற்கேற்பப் புதிய வடிவங்களைப் பெற்றுள்ளன.

காசியில் வாராகி



காசியில் மீர்காட் என்னுமிடத்தில் வாராகி சந்நிதி சிறப்புடன் உள்ளது. இது பூமி மட்டத்திற்குக் கீழே இருப்பதால் மக்கள் இதனைப் பாதாள வாராகி ஆலயம் என்றும், வாராகியை பாதாள வாராகி என்றும் அழைக்கின்றனர். இங்கு மேலிருந்து பார்க்கும்போது அம்பிகையின் திருவடியையே பார்க்க முடிகிறது. இந்த ஆலயத்தில் அதிகாலையில் பூசைகள் தொடங்கப்பட்டு, சூரிய உதயத்திற்குள் முடிந்து விடுகிறது. இந்த வாராகியை அதிகாலையில் மட்டுமே தரிசிக்க முடியும்.

வாராகிக்கு அண்மைக் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பட்டு, சிறப்பான வழிபாடுகள் நடத்தப்படுகின்றன. சென்னையை அடுத்த முட்டுக்காட்டில் பிரதியங்கரா ஆலயத்தில் நெடிய வாராகியின் வடிவம் உள்ளது.

அன்பர்கள் வாராகியை வரம் தரும் வடிவழகியாகப் போற்றி வழிபடுகின்றனர்.

சீமாபுரம் மகேசுவரி (மயிலம்மன் கோயில்)

திருவள்ளூர் மாவட்டத்தில் மீஞ்சூரில் இருந்து 7 கி.மீ. தொலைவில் சுப்பா ரெட்டி பாளையம் என்னும் ஊர் உள்ளது. இதற்கு மேற்கே 2 கி.மீ. தொலைவில் சீமாவரம் என்னும் ஊர் இருக்கிறது.



இங்கு மகேஸ்வரிக்கென அமைந்த ஆலயம் உள்ளது. இவள் பெயரால் ஸ்ரீமகேஸ்வரிபுரம் என்று அழைக்கப்பட்டு, இப்போது சீமாவரம் என்றாகி விட்டதாகக் கூறுகின்றனர். இக்கோயிலில் பிற்காலப் பல்லவர்கள் கால சப்தமாதர் சிலையும் உள்ளது. சப்தமாதர்களுடன் விநாயகர், யோகசிவன் ஆகியோரும் உள் ளனர்.

இக்கோயிலை மக்கள் மயிலம்மன் கோயில் என்று அழைக்கின்றனர். மாகேசுவரி அம்மன் கோயில் என்பதே பேச்சு வழக்கில் மயிலம்மன் கோயிலானது என்கின்றனர். இங்குள்ள சப்தமாதர்கள் எழுவரும் தத்தம் வாகனங்களோடு இருக்கின்றனர். வாராகிக்கு சிங்கம் அல்லது எருமை வாகனத்தை அமைக்காமல் ஆட்டுவாகனத்தை அமைத்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

வீரபாண்டி கௌமாரி

தென்தமிழகத்திலுள்ள தேனியிலிருந்து அருகில் 6 கி.மீ. தொலைவில் வீரபாண்டி என்னும் ஊர் உள்ளது. இது முல்லையாற்றங்கரையில் அமைந்துள்ளது. இங்கு கண்ணீசுவரம் உடையார் கோயில் என்னும் சிவாலயம்உள்ளது. இத்தலத்தில் கௌமாரிஅம்மன் பெருஞ்சிறப்புடன் விளங்குகின்றாள். வீரபாண்டியன் என்னும் மன்னன் அம்பிகை தனக்கு அருள்புரிந்ததை ஒட்டி இந்த ஆலயத்தைக் கட்டினான் என்று வரலாறு கூறுகின்றது. அவன் பெயராலேயே இவ்வூர் வீரபாண்டி என்று அழைக்கப்படுகிறது. இது சிறந்த பிரார்த்தனைத் தலமாகும். சித்திரை மாதத்தில் ஏழு நாட்கள் பெருந்திருவிழா கொண்டாடப்படுகிறது. கௌமாரியின் அதிதேவதையான முருகன் சிவபெருமானின் திருக்கண்களில் இருந்து உதித்தான் என்பதை அறிவோம். இங்கு நெற்றிக் கண்ணை உடைய சிவபெருமான் கண்ணீசுவரராக எழுந்தருளியிருப்பது இங்கே சிந்திக்கத் தக்கதாகும். கௌமாரியம்மன் கோயிலில் சப்தமாதர்கள் சிறப்புடன் எழுந்தருளியுள்ளனர்.

சாமுண்டி தேவி (மைசூர்)

தமிழகத்தில் சாமுண்டிதேவியைத் தனியாகப் பல்வேறு பெயர்களில் அமைத்து வழிபடுகின்றனர். மகாகாளி அம்மன், பொன்னியம்மன், செல்லியம்மன் போன்ற பெயர்களில் சாமுண்டிதேவி கோயில் கொண்டு அன்பர்களுக்கு அருள் பாலித்துக்கொண்டிருக்கின்றாள். மைசூரில் சாமுண்டிதேவி தனிச் சிறப்புடன் மலை மீது கோயில் கொண்டுள்ளாள்.

கர்நாடக மாநிலத்தில் பெரிய புராதன சிறப்பு மிக்க நகரமாக இருப்பது மைசூர் ஆகும். இங்கே சாமுண்டி மலை என்னும் சிறிய குன்றும் அதன்மீது சாமுண்டீசுவரி ஆலயமும் உள்ளன. இது உலகப் புகழ் பெற்ற ஆலயமாகும். இதுபெருஞ் சிறப்புடன் திகழ்கிறது. இங்கு நடைபெறும் தசரா விழா அதியற்புதமானதாகும்.

இந்த விழாவை ஒட்டி நடைபெறும் வண்ண விளக்கு அலங்காரங்களும், ஆனை சேனை அணி வகுப்புகளும் அரசரின் ஆடம்பர பவனியும்,அம்பிகையின் வீதியுலாவும் உலகப் புகழ் பெற் றதாக விளங்குகின்றன.

மைசூர் சாமுண்டீசுவரி மாபெரும் சக்தி வாய்ந்த தெய்வமாகப் போற்றப் படுகிறாள்.

இந்திராணி (உடுப்பி)

கர்நாடக மாநிலத்தில் உள்ள புகழ் பெற்ற கிருஷ்ண க்ஷேத்திரம் உடுப்பி. இந்த நகரத்தின் கிழக்கே 2 கி.மீ தொலைவில் வேதாசலம் என்னும் மலைத்தொடர் உள்ளது. இதில் இந்திராணி துர்க்கா என்னும் பெயரில் இந்திராணிக்கு ஆலயம் உள்ளது. இவளைத் துர்க்கை என அழைக்கின்றனர். இப்பகுதியிலுள்ள நான்கு கோயில்களை இக்கோயிலுடன் சேர்த்து இப்பகுதியைப் பஞ்சதுர்க்கா க்ஷேத்திரம் என்று அழைக்கின்றனர். இது புகழ் பெற்ற சக்தித் தலமாகும்.

வைஷ்ணவி (இமயமலை)

இமய மலைச் சாரலில் உள்ள மாபெரும் சக்தித் தலம் வைஷ்ணவி ஆகும். இங்கு இயற்கையாக அமைந்த குகையில் சுயம்பு வடிவமாக வைஷ்ணவி தேவி தனது சேடியருடன் எழுந்தருளியுள்ளாள். ஆண்டுதோறும் லட்சக்கணக்கான மக்கள் வைஷ்ணவி தேவியைத் தரிசிக்க யாத்திரை மேற்கொள்ளுகின்றனர்.

எட்டுக் காலங்களின் அதிதேவதைகளான அஷ்டமாதர்கள்

ஒருநாள் என்பது ஒரு பகலும், ஒரு இரவும் சேர்ந்ததாகும். இந்த ஒரு நாளில் நான்கு சந்தியா காலங்கள் இருக்கின்றன.

இரவிலிருந்து பகல் தோன்றும் காலைச் சந்தி, முற்பகலும் பிற்பகலும் சேரும் நண்பகல், பகலில் இருந்து இரவு தோன்றும் சாயுங்கால சந்தி (அந்தி சந்தி) முன்னிரவும் பின்னிரவும் சந்திக்கும் நள்ளிரவு ஆகிய நான்கு சந்தியா காலங்கள் புராணங்களில் கூறப்பட்டுள்ளன.

சைவ அனுஷ்டான விதிகளில் , சந்தியாவந்தனம் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. மேற்குறித்த இந்த நான்கு சந்தியா காலங் (கூடும் வேளை) களுக்கும் நான்கு தேவதைகள் இருக்கின்றனர். இந்த நான்கு காலங்களிலும், அதற்குரிய சந்தியாகால தெய்வங்களைப் பிரார்த்தித்து வழிபாடு செய்தனர். காலைச் சந்தியில் பிராம்மியையும், உச்சி வேளையான நண்பகலில் வைஷ்ணவியும், சாயுங்காலத்தில் மகேசுவரியான ரௌத்திரியையும், நள்ளிரவு சந்தியில் காளியான சாமுண்டியையும் வணங்கித் துதிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இவர்களின் திருமேனி வர்ணனையையும் அந்நூல்கள் விரிவாகக் கூறுகின்றன.

மேலும், சந்தியா காலங்களுக்கு இடைப்பட்ட காலங்களான முற்பகலுக்கு கௌமாரியும், பிற்பகலுக்கு வாராகியும் முன்னிரவிற்கு இந்திராணியும் பின்னிரவுக்கு யோகினியும் தெய்வங்களாகக் கூறப்பட்டுள்ளனர். இவர்களை வழிபடுவதால், நாள் முழுவதும் தெம்புடனும், புத்துணர்ச்சியுடனும் பணியாற்றி, இரவில் நிம்மதியான உறக்கத்தைப் பெறலாம் என்கின்றனர்.

காலை சந்தியாதேவதையான பிராம்மி

இரவிலிருந்து பகல் தோன்றும் காலைச் சந்தியில் பிராம்மி துதிக்கப்படுகிறாள். எங்கும் ஒளிபரவவும், அறிவு மலர்ச்சி பெறவும், உணவு தடையின்றிக் கிடைக்கவும், மனதிலிருந்து அச்சம் அகலவும், பிராமியை வழிபடுகின்றனர். விடியலின்போது இவளைத் தியானித்து வழிபட வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. இவள் அறிவின் தெய்வமாகப் போற்றப்படுகிறாள். எனவே, இவளிடம் ஞானத்தை நல்கி, அறிவைப் பிரகாசமாக்கி, வாழ்வை வளப்படுத்த வேண்டுமென்று பிரார்த்திக்கப்படுகிறது. இவள் தூய வெண்ணிறம் கொண்ட அன்ன வாகனத்தில் பவனி வருகிறாள்.

உச்சிக்கால சந்தியாதேவதையான வைஷ்ணவி

முற்பகல் முதிர்ந்து பிற்பகல் தோன்றும் வேளையில் சூரியன் உச்சிவானில் ஒளி வீசுகின்றான். இதனை உச்சிப்போது, நண்பகல் என்று பலவாறு அழைக்கின்றனர்.

இந்த உச்சிவேளையின் தெய்வமாக இருப்பவள் வைஷ்ணவி தேவியாவாள். ஒளி வெள்ளம் எங்கும் பரவிப் பிரகாசமாக இருக்கும் வேளையின் அதிதெய்வமாக இருக்கும் இவள் சங்கு, சக்கரம், கதை ஆகியவற்றை ஏந்தி அபய முத்திரை தாங்கி கருடனின் மீது பவனி வருகிறாள். இவளிடம் செல்வத்தையும், அதிகார ஆற்றலையும் வேண்டிப் பிரார்த்திக்கின்றனர். இவள்

வெளிர்நீல நிறப் பாவையாகப் போற்றப்படுகிறாள். வைஜயந்தி என்னும் மாலையை அணிந்து ஜ்வலிக்கிறாள்.

அந்திவேளைச் சந்தியாகால தேவதையான ரௌத்திரி

பகல்பொழுது முடிந்து இரவு தொடங்கும் வேளையில் உள்ள சந்தியா காலம் சாயரட்சை எனவும், சாயுங் காலம் எனவும் அழைக்கப்படுகின்றது. சப்தமாதர்களில் உருத்திராம் சத்துடன் திகழும் மகேசுவரியே ருத்திராணி என்னும் பெயரில் இந்தக் காலத்தின் அதிதேவதையாகத் திகழ்கிறாள். இவளை ரௌத்திரி என்று அழைக்கின்றனர்.

அஸ்தமானகிரி மீது செவ்வொளி பரப்பி நிற்கும் சூரிய மண்டலத்தின் நடுவே இவள் பிரகாசிக்கின்றாள். ருத்திரத்தின் மீது பிரியமுள்ளவள். அட்சயவடம், மழுவாயுதம் ஏந்தி, இடப வாகனத்தில் பவனி வருபவள். மனத்தில் அமைதியும் சாந்தமும் நிலவ, இவள் பிரார்த்திக்கப் படுகின்றாள்.

நள்ளிரவு சந்தியாதேவதையான காளி

முன்னிரவும் பின்னிரவும் சந்திக்கும் இரவு வேளை நடுநிசி என்று அழைக்கப்படுகிறது. இதை நள்ளிரவு எனவும் அழைக்கின்றனர். இக்காலத்தில் அதிதேவதை சாமுண்டி அல்லது காளி எனப்படுகிறாள்.

வடமொழியில் அமைந்த பூஜா பத்ததிகள் கூறும் சுலோகங்களுக்கு ஏற்பத் தமிழிலும், பாடல்கள் உள்ளன. அவற்றைத் தொடர்ந்து காணலாம்.

பிராமியின் தியானம்

பண்ணுவது சந்தியாவந்தனம் பின் முன்னர் பாணிநியா
தனம் பண்ணிப் பேணுமனத்தினனாய்க்
கண்ணிவரு காலையினில் சிறந்த அயன்தேவி கரநான்கு
முக(ம்)நான்கு இருநான்கு கண்ணும்
எண்ணுசெபஞ் சிருக்கு வடம் கமண்டலமும் தண்டும்
இளஞ்சடையும் புரிநூலும் இளமையொடும் சிறந்த
வண்ண உருவுத் துகிலும் செய்ய அன்ன வாகனபத்
மாசனியை மருவிதய மலர்த்தே.

வைஷ்ணவித் தியானம்

மருவுதிரு முகம் ஒன்று கரங்கள் நான்கில் வலத்தபயம்
தண்டு இடத்து வலம்புரி சக்கரம் நல்
பொருவில் திரு மேனி சுக்கில வண்ணம் தருணம் பொருந்தும்
ஒளிதரும் புரிநூல் புகழ் துளப மாலை
பெருகுமௌலி தருமணிப்பூண் பிறங்கு மார்பில் பேரொளிவெண்
பட்டல்குல் சீர்க் கருடன் மீதே
வருகமல வாசனியைப் புருவத்தினிடையே மத்தியா
னந்தன்னில் வணங்கிடாயே.

ரௌத்திரித் தியானம்

வணங்குவது அந்தியில் பிரமரந்தரஞ்ஜோதி வளர்வதனம்
ஒன்று திருநயனங்கள் மூன்று
இணங்கு திருக்கரங்கள் நான்கில் செபஞ்சூலம் வலத்தால்
இடத்து அபயம் சத்தியுமாய் இளம்பிறையும் சூடிப்
பிணங்கு சடாமுடி நீல நிறத்தினளாய் அழகுபிதிரிடப
வாகன பத்மாசனியைப் பேணும்
அணங்கு இவர் மூவரும் கருணா கரருமாய்க் கன்ம(ம்)
அனைத்தினுக்கும் அருங்கரியார் இவரென்று அறியே

மூன்று சந்திகளில் சந்தியாவந்தனம் செய்வது எல்லோருக்கும் உரியதாகும். நாலாவதான சந்தியாவந்தனம் நிசிசந்தி எனப்படும். அந்த நிசி சந்தியாகாலத்துத் தேவதையாக காளராத்திரி விளங்குகிறாள். விரித்த சடையுடன் விழித்த அகன்ற கண்களுடன் கரிய நிறமுள்ளவளாக விளங்குகிறாள். நடுநிசியில் இந்த சந்தியாவந்தனத்தைச் செய்வதற்குப் பதிலாக அர்த்த சாமத்தில் செய்கின்றனர். சந்தியாவந்தனத்தால் உடலில் மெருகேறும். ஒளி உண்டாகும் அறிவு பிரகாசிக்கும்.

குழந்தைகளைக் காக்கும் சப்தமாதர்கள்

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒன்று என்பர். அவை தம்மைக் கொண்டாடும் இடத்தில் மகிழ்ச்சியுடன் இருக்கின்றன. "குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே" என்பது பழமொழியாகும்.

குழந்தைகளை வாரி அணைத்து முத்தமிட்டு, அதன் மழலைப் பேச்சிலே மகிழாதவர் எவருமில்லை.

சமயநெறியில் குழந்தையோடு காட்சி தரும் தெய்வங்கள் பலவற்றைக் காண்கிறோம். அன்னை பராசக்தி பால முருகனை மடியில் அமர்த்திக்கொண்டு குக கௌரியாகக் காட்சி தருகிறாள். குழந்தை வடிவான திருநந்தி தேவரை மடியில் அமர்த்திக் கொண்டு அவருக்கு ஞான உபதேசம் செய்யும் சிவபெருமானைத் திருமழபாடியில் காண்கிறோம்.



இப்படி, குழந்தையோடு காட்சி தரும் தெய்வங்களாகக் குககௌரி, கஜகௌரி, சந்தான லட்சுமி, ஸ்கந்தமாதா என்ற நீண்ட வரிசையில் சப்த மாதர்களும் இடம் பெற்றுள்ளனர்.

போர்த்தெய்வங்களாகவும், விவசாயத் தெய்வங்களாகவும் யோக சக்திகளாகவும் கொண்டாடப்படும் சப்த மாதர்கள் குழந்தைகளைக் காக்கும் தெய்வங்களாகவும் போற்றப்படுகின்றனர்.

சில தலங்களில் பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி, ஆகிய எழுவரும் தம் மடியில் குழந்தையை வைத்துக் கொண்டிருக்கும் கோலத்தில் காட்சிதருகின்றனர்.

பாரத தேச வழிபாட்டில் சப்த மாதர்கள் குழந்தைகளைக் காக்கும் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர். அவர்கள் ஏழு வயது வரை குழந்தைகளை உடனிருந்து பாதுகாத்து வளர்ப்பதாக நம்பப் படுகிறது.

தமிழில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட சிற்றிலக்கியங்களில் பிள்ளைத் தமிழ் என்பதும் பிரபந்த வகையில் ஒன்றாகும்.

இது தெய்வங்களையும் பெரியோர்களையும் குழந்தைகளாகக் கற்பனை செய்து பாடும் சிற்றிலக்கிய வகையாகும். இதில் முதலாவதாக இருப்பது காப்புப் பருவம் ஆகும். காப்புப் பருவத்தில் பல்வேறு தெய்வங்களிடம் குழந்தையைக் காக்குமாறு வேண்டிப் பாடுகின்றனர்.

இப்பகுதியில் இந்திரன், திருமால், முப்பத்து முக்கோடி தேவர்கள், அஷ்ட வசுக்கள், போன்றவர்களிடம் குழந்தையைக் காத்தருளுமாறு வேண்டும் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. பன்னிரு பாட்டியல் என்னும் இலக்கணநூல்

திருமால், அரனே, திசைமுகன், கரிமுகன்,
பொருவேல் முருகன், பருதி, வடுகன்,
எழுவகை மங்கையர், இந்திரன், சாத்தன்,
நிதியவள், நீலி, பதினொரு மூவர்,
திருமகள், நாமகள், திகழ்மதி என்ப
மருவிய காப்பினுள் வரும் கடவுளரே

என்று இத்தெய்வங்களைப் பட்டியல் இட்டுக் கூறுகிறது. இந்தத் தெய்வங்களின் வரிசையில் சப்தமாதர்களும் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறோம். சில நூல்களில் இவர்களைத் தனிச்சிறப்புடன் வர்ணித்துள்ளதையும் காண்கிறோம். எடுத்துக் காட்டாக, திருப்பெருந்துறை சிவயோக நாயகி பிள்ளைத் தமிழ்ழில் இடம் பெற்றுள்ள சப்தமாதர் குறித்த பாடலைக் காணலாம். இப்பாடலில் திருப்பெருந் துறைச் செல்வியான சிவயோக நாயகியை, ஏழு கடல் களையும்,ஏழுஉல கங்களையும் கருணையால் தோற்றுவிக்கும் பிராமியும், கயிலாயத்தில் சூலாயுதத்துடன் விளங் கும் மகேசுவரியும், நெடியசுடர்விடும் வேலை ஏந்தி மயில் மீது பவனி வந்து உலகைஆளும் கௌமாரியும், வஞ்சகர் மீதி னில் கோபம் கொண்டு அவர்களைக் கலகமிட்டு அழிப்பவளும், உலகத்தை மோகம் கொள்ளச் செய்யும் ஜகன் மோகினி யுமான வைஷ்ணவியும், கடலையே ஆடையாகக் கொண்ட இந்தப் பூமியை வேல் போன்று கூர்மையான தனது கொம்பினில் தாங்கிக் காப்பவளுமான வாராகியும், தேவர்கள் நாடான சுவர்க்கத் தில் வீற்றிருந்து அதிகாரம் செய்து, அதை ஆளும் அயிராணியான இந்திராணியும், பேயைக் கொடியில் கொண்ட நிகேத னியான சாமுண்டியும் ஆகிய அன்னையர் எழுவரும் சூழ்ந்துள்ளனர் என்று கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

வடநாட்டு ஓவியங்களில் சப்தமாதர்களைக் குழந்தைகளோடு தீட்டும் வழக்கம் உள்ளது. **எல்லோரா கைலாசநாதர் கோயிலில்** இடம் பெற்றுள்ள சப்தமாதர் தொகுதியில் சப்தமாதர்கள் ஒவ்வொருவரும் குழந்தைகளோடு காட்சி தருகின்றனர்.

சிவயோக நாயகி பிள்ளைத்தமிழ்
காப்புப் பருவம்

படநாகம் கடநாகம் படர்உடற் கமலமால்வரை
பதிகால் எண்றி லோகம் பணிவிடைப் படி சுமாடு கொள்
பரம்ஆறும் திறம்ஏறும் பதமிருத்தியும் மூளா ஆவிகொள்
பசிகூறும் சுசிதீரும் படிபுரக்கும் அருளாகரித்
திடரோடுங் கரையோருந் திரையுவட்டய வரால் பொருசினை
கருமேகம் செருமுலைப் பெருகுபால் கமழ் செழுங்குங்
கழிநீருஞ் செறி வயல்துறைசை நாயகி சிவயோ
கம் பிரியாள்தன் திருவடிச் சுவடு சூழ்பவர்
கடலேழும் புவிஏழும் கருணையிற் பேறு பிராமணி
கயிலாயம் பயில்ஆயங் கதிர்பெறத்தகு மகேசுவரி
கதிர்வேல் கொண்டு உலகாளும் களி மயில்கடிய வாகினி
கருதா வஞ்ச கடுராடுங் கலகமிட்ட சகமோகினி
அடல்ஆழும் திரைமேல் கொண்ட அயில் மருப்புள வராகினி
அதிகாரஞ் சுரா நாடென்று அதிகரிக்கும் அயிராய வணியாம்
கொடிமேல் நின்றலனது கொட்புறு நிகேதனி மேதினி
அன்னை மார் இங்குஎழு பேரென்று அவனியிற் புகழும் மாதே!





குழந்தைகளுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சப்தமாதர்கள்









குழந்தைகளுடன் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சப்தமாதர்கள்





ஸ்ரீமுஷ்ணம் என்னும் வைணவ திருப்பதியில் அமைந்துள்ள பூவராக சுவாமி ஆலயத்தில் சப்தமாதர்களுக்கென தனிச் சந்நிதி அமைந்துள்ளது. இதனை மக்கள் குழந்தையம்மன் கோயில் என்கின்றனர். குழந்தைச் செல்வம் அருளும் தெய்வமாகவும், குழந்தைகளைத் தீமைகளில் இருந்து காக்கும் தெய்வங்களாகவும், நம்பிப் போற்றப்படும் தெய்வங்களாகவும் இவர்கள் விளங்குவதால் இப்பெயர் பெற்றனர் என்று கூறுகின்றனர்.

ஆதிநாள் முதலே குழந்தைகளைக் காக்கும் தெய்வமாகச் சப்தமாதர்கள் போற்றப்பட்டதை இதன் மூலம் அறியமுடிகிறது.



ஸ்ரீமுஷ்ணத்து சப்தமாதர்கள்

(குழந்தையம்மன்)

சப்தமாதர்கள், சிவாலயத்தில் பரிவார தேவதைகளாகவும், காளி, பிடாரி முதலிய பெண் காவல் தெய்வங்களுக்குத் துணைத் தெய்வங்களாகவும் கிராமதேவதைகளாகவும் இருக்கின்றனர்.

இவர்களைத் திருமாலோடு சேர்த்து வழிபடும் வழக்கம் இல்லை என்றாலும் புகழ் பெற்ற வைணவத் தலமான ஸ்ரீமுஷ்ணத்தில் பெருமாள் கோயிலில் சப்தமாதர்கள் வீற்றிருக்கின்றனர். இங்குள்ள பூவராகப் பெருமாள் கோயிலில் சப்த மாதர்களுக்கான சந்நிதி உள்ளது. இதில் பெரிய வடிவங்களாக ஏழு தேவியரும் எழுந்தருளியுள்ளனர்.

இவர்கள் குழந்தை வரம் தந்து வம்சத்தை வாழ்விப்பவர்களாக இருக்கின்றனர். மக்கள் இக்கோயிலைக் குழந்தை வரம் தரும் கோயிலாகக் கொண்டாடுவதுடன், இதனைக் குழந்தையம்மன் கோயில் என்றே அழைக்கின்றனர். செங்குந்த மரபினர் இக்கோயிலில் பூசாரிகளாக இருந்து பூசைகளை நடத்துகின்றனர். இது சிறந்த பிரார்த்தனைத் தலமாக இருக்கிறது.

சப்தமாதர்களும் மரங்களும்



பாரததேசம் போற்றும் அனைத்துத் தெய்வங்களும், மரத்தோடு தொடர்பு கொண்டுள்ளன. ஒவ்வொரு தெய்வமும் தனக்கென உரிய மரத்தின் நிழலில் வீற்றிருந்து அன்பர்களுக்கு அருள்பாலிக்கின்றன. சிவபெருமான் தட்சிணாமூர்த்தியாக ஆலமரத்தின் கீழ் வீற்றிருந்து ஞானத்தைப் போதித்துக் கொண்டிருக்கின்றனர். இந்திரன் கற்பக மரத்தின் நிழலிலும், முருகனும் வள்ளியும் வேங்கை மர நிழலிலும், கண்ணன் புன்னைமர நிழலிலும் வீற்றிருக்கின்றனர். இப்படியே ஒவ்வொரு தெய்வமும் ஒரு மரத்தைத் தனக்கெனக் கொண்டுள்ளன.

இதுபோலவே, பெண் தெய்வங்கள் யாவும் தனக்கென உரியதான மரங்களைக் கொண்டுள்ளன. இவ்வகையில் சப்தமாதர்களும் தமக்கென மரங்களைக் கொண்டுள்ளனர்.

பிராமி பலாச மரத்தின் கீழும், மகேசுவரி மாமர நிழலிலும், கௌமாரி வேங்கை மரத்தின் கீழும், வைஷ்ணவி அரசமரத்தின் கீழும், வாராகி அத்தி மரத்தின் கீழும், இந்திராணி கற்பக மரத்தின் கீழும், சாமுண்டி பாலை மரத்தின் கீழும் வீற்றிருக்கின்றனர்.

ஏழுபேரும் ஒன்றாக இருக்கும் வேளையில், பெரும்பாலும் ஆல மரத்தின் கீழ் அமர்ந்து அருள்பாலிக்கின்றனர். சென்னையிலுள்ள ஆலப்பாக்கம், தஞ்சை மாவட்டம் ஆலம்பாக்கம், போன்ற ஊர்களில் சப்தமாதர்கள் ஆலமரத்தின் கீழ்ச் சிறப்புடன் இருப்பதைக் காண்கிறோம். சப்தமாதர்கள் பெருக்கோயில்களில் வீற்றிருப்பதைப் போலவே மரத்தடியில் திறந்தவெளிக் கோயில்களில் வீற்றிருந்து அருள்பாலிப்பதையும் காண்கிறோம்.



சப்தமாதர்களும் அஷ்டபைரவர்களும்

சப்தமாதர்கள் அதியுன்னத போர்த் தெய்வங்களாகப் போற்றப்படுகின்றனர். அவர்களுக்கு இணையான போர்த் தெய் வமாக இருப்பவர்கள் அஷ்ட பைரவர்கள். சாக்த தந்திர நூல்களில் சப்தமாதர்களுடன் யோகினி என்னும் எட்டாவது கௌரிகை என்ற பெண் தெய்வத்தையும் சேர்த்து, அந்தத் தொகுதியை அஷ்டமாதர் என்று அழைக்கின்றனர். இந்த எட்டுப் பெண் தெய்வங்களையும் அஷ்ட பைரவர்களின் தேவியாகப் போற்றும் வழக்கம் இருக் கிறது. இதன்படி, சப்தமாதர்களில்,

பிராமியை அஜிதாங்கரும் ;
மகேஸ்வரியை ருருவரும் ;
கௌமாரியை சண்டரும்;
வைஷ்ணவியை குரோதனரும்;
வாராஹியை உன்மத்தரும்;
இந்திராணியை கபாலரும்;
சாமுண்டியை பீஷ்ணரும்;

எட்டாவதான சண்டிகையை சம்ஹார பைரவரும் மணந்து கொண்டதாகக் கூறப் படுகிறது.

பைரவ சமயத்தினர் அஷ்டபைரவர்க ளுடன் அஷ்டமாதர்களையும் எழுந்தருளு வித்துத் தம்பதியராகப் பூசை செய்து மகிழ் கின்றனர்.

பெரும்பாலாவ பைரவருக்குரிய யந்தி ரங்களில் தேவியுடன் கூடியவர்களாகவே பைரவர்களைப் பூசிக்கின்றனர்.

பைரவருடன் விளங்குகையில் இந்த மாதர்கள் தமக்குரிய ஆயுதங்களோடு காணப்படுவதில்லை. அவர்களின் ஆயுதங் களை அவர்களது கணவன்மார்களான பைரவர்கள் ஏந்துகின்றனர். அதனால் இந்தத் தேவியர் இரண்டு கரங்களுடன் காட்சியளிக்கின்றனர்.

இத்தொகுப்பில் உள்ள பைரவர்கள் வழக்கம் போல் பாசம், டமருகம் ஏந்தாமல், மேலிரு கரங்களில் தமது தேவிக்குரிய படைக்கலங்களை ஏந்தி, முன்னிரு கரங் களில் சூலம், கபாலத்தைத் தாங்கியுள் ளனர். எடுத்துக்காட்டாக பிராமியின் பதி யான அஜிதாங்க பைரவர் மேலிரு கரங் களில் பிராமிக்குரிய கெண்டி, அட்ச மாலையை ஏந்தியும்,. முன்னிரு கரங்களில் சூலம், கபாலம் ஆகியவற்றைத் தாங்கியுள் ளனர். இருவரும் அன்னத்தில் இணைந்து பவனி வருகின்றனர். இப்படியே ஒவ்வொரு பைரவரும் தமது தேவிக்குரிய படைக்



பிராமி தேவியுடன் அஜிதாங்கர்
அன்ன வாகனத்தில்

கலங்களைத் தாங்கியவாறு அந்தந்தத் தேவிக்குரிய வாகனங்களிலேயே பவனி வருகின்றனர்.

ஸ்ரீ மகாபைரவரின் திவ்யாசனத்தின் எட்டுத் திக்கிலும் எட்டுபைரவர்களும் தத்தம் தேவியருடன் வாகனங்களில் அமர்ந்தவாறு காட்சியளிக்கின்றனர்.

சப்தமாதர்களும் பைரவர்களும் காவல் தெய்வங்களாகப் போற்றப்படு கின்றனர்.ஆகாசவாசியான பைரவர் மழைத் தெய்வமாகவும், சப்தமாதர்கள் பயிர்த் தொழிலுக்குரிய வேளாண்மைத் தெய்வ மாகவும் போற்றப்படுகின்றனர்.

வாருணபத்ததி என்னும் நூலில் அஷ்டபைவர்கள் பற்றியும் அவருக்கு (சப்தமாதர்களுடன் சண்டிகை சேர்ந்து) எட்டு மாதர்கள் தேவியர்களாக இருப்பது பற்றியும் குறிக்கப்பட்டுள்ளது. இந்நூலில் பைரவர்கள் எல்லோருமே சூலத்திற்குப் பதிலாகக் கத்தியைத் தாங்கியுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது சிந்திக்கத் தக்கதாகும்.

பைரவர்களையும் சப்தமாதர்களையும் தம்பதியராக அமைத்து வழிபடும் வழக்கம் இல்லை. சப்தமாதர்கள் தனியா கவே வழிபடப்படுகின்றனர். அவர் களுடன் விநாயகர், சாத்தன் ஆகியோரை மட்டுமே காண் கிறோம்.

பின்வரும் பக்கங்களில் அஷ்டமாதர் கள் உடனான அஷ்டபைரவர்களைக் குறிக்கும் இரண்டு வகையான படத் தொகுப்பைக் காண்கிறோம்.

இதில் முதல் தொகுதியில் பைரவ ருடன் எழுந்தருளியிருக்கும் அஷ்டமாதர் கள் இரண்டு கரங்களுடன் காணப்படுகின் றனர். அவர்கள் ஏந்தும் ஆயுதங்கள் பைர வரின் மேற்கரங்களிலும் காணப்படு கின்றன.



மகேஸ்வரியுடன் ருரு பைரவர்

இரண்டாவது தொகுப்பில், அஷ்ட மாதர்கள் நான்கு கரங்களுடன் தமக்கே உரிய ஆயுதங்களுடன் பைரவருடன் நின்ற கோலத்தில் காட்சி தருகின்றனர். அவர் களது கணவர்களான பைரவர்கள் மேற் கரங்களில் தனது தேவிக்குரிய ஆயுதங் களையும் முன்கரங்களில் கத்தி, பான பாத்திரம் ஆகியவற்றைத் தாங்கியுள்ளனர். இந்த இரண்டு தொகுப்பிலும் அன்னை யருக்குரிய வாகனங்களே பைரவரின் பின்ன ணியில் நிற்கின்றன. சாக்த தந்திரங்களில் மட்டுமே இத்தகைய வடிவங்களைக் காண முடிகிறது.

இவற்றை நோக்க, கௌரிகை உடனான அஷ்டமாதர்கள் பைரவர்களின் தேவிய ராகக் கூறப்பட்டாலும், பைரவர்கள் தமது தேவியர்களைச் சார்ந்து அவர்களது அம்சங்களைப் பெற்று அவர்களைச் சார்ந்த வர்களாகவே இருப்பதைக் காண முடி கிறது. இந்த வழிபாட்டில் சக்தியின் அம்சமே பெரிதாக இருக்கிறது. ❀



1.அஜிதாங்க பைரவர் - ப்பிராமி



2.ருரு பைரவர் - மகேசுவரி

அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம்



3 . சண்ட பைரவர் - கௌமாரி



4. குரோத பைரவர் - வைஷ்ணவி



5.உன்மத்த பைரவர்-வாராகி



6.கபால பைரவ தியானம் - இந்திராணீ


அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம்



7.பீஷண பைரவர்-சாமுண்டி



8.சம்காரபைரவர் -சண்டிகா :




1. அஜிதாங்க பைரவர் - ப்பிராமி



2. ருரு பைரவர் - மகேசுவரி


அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம்




3 . சண்ட பைரவர் - கௌமாரி



4. குரோத பைரவர் -வைஷ்ணவி



5. உன்மத்த பைரவர்-வாராகி



6. கபால பைரவ தியானம் - இந்திராணீ

அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம் அஷ்டபைரவ தரிசனம்



7. பீஷண பைரவர் - சாமுண்டி



8.சம்காரபைரவர் - சண்டிகா :

கன்னிமார்களும்-சப்தமாதர்களும்

தமிழகத்தில் ஏழு பெண்களை ஒன்றாக வைத்து வழிபடும் வழக்கம் பல நிலைகளில் உள்ளது. இவற்றில் இரண்டு தொகுப்புகள் முதலிடம் பெறுகின்றன. இந்த இரண்டில் முதலாவது தொகுப்பு கன்னிமார்கள் என்றும் மற்றது சப்தமாதர் என்றும் அழைக்கப்படுகின்றன.

கன்னிமார் வழிபாடு என்பது நாட்டுப் புற வழிபாட்டில் ஒன்று. மண் மீது தோன்றி பூப்பெய்தி, மணமாகாமல் மாண்டு தெய்வ நிலைபெற்ற கன்னிப்பெண்களைப் போற் றும் வகையில் எழுந்தது இவ்வழிபாடு.

ஆதிநாளில் இந்தக் கன்னிப்பெண் தெய்வங்களைக் குறிக்கும் வகையில் ஏழு கற்களை வரிசையாக நட்டு வழிபட்டனர். பிற்காலத்தில் இரண்டு கைகளை உடைய பெண் உருவங்களை நிலைப்படுத்தி வணங்கத் தொடங்கினர். ஆற்றங்கரைகள், மலை முகடுகள், சுனைகள், பெரிய குளங்களின் கரைகள் ஆகியவை கன்னிமார் கோயில் அமையும் இடங்களாக உள்ளன.

இந்த ஆலயங்களில் கன்னிமார்களுக்கு எதிரில் வம்புலி எனப்படும் புலி இருக்கும். அண்ணன்மார் என்னும் ஏழு ஆண் தெய்வங்கள் இவர்களுக்குக் காவலராக இருக்கின்றனர்.

சப்தமாதர்கள் என்பவர்கள் புராணம் போற்றும் தெய்வ மங்கையராவர். இவர்கள் நாற்கரங்களுடன், அன்னம், மயில், கருடன், யானை, பேய் முதலிய வாகனங் களில் வலம் வருபவர்கள். இவர்களுடன் துணைத் தெய்வங்களாக விநாயகரும், ஐயனாரும் இருப்பார்கள். இவர்களுக்கு எதிரே பலிபீடம் மட்டுமே அமைக்கப் படும்.

சிவாலயங்களில் அஷ்ட பரிவாரங்




கன்னிமார் எழுவர், முன்புறம் ஏழு சூலங்கள்

களில் ஒன்றாகச் சப்தமாதர் வடிவமும் இடம் பெற்றுள்ளது. இத்தகைய அடிப் படைச் செய்திகளை அறியாதவர்கள் பல கன்னிமார் கோயில்களில் அவர்களைச் சப்தமாதர்கள் என்றும், பல பெருங் கோயில்களில் சப்தமாதர்களைக் கன்னி மார் என்றும் பெயர்களை மாற்றி மாற்றி எழுதி வைத்துள்ளனர்.

அடிப்படையில், கன்னிமார்கள் என்பவர்களும் சப்தமாதர் என்பவர்களும் வேறு வேறானவர்கள். கன்னிமார்கள் எழுவரும் நின்ற நிலையில் இருப்பர். பின்னாளில் சுதையால் இவர்களைச் செய்யும் போது பெரியதாகவும், அமர்ந்த கோலத்திலும் அமைக்கத் தொடங்கினர். அப்படி அமர்ந்த நிலை யிலான கன்னிமார்களையே இங்கே படத்தில் காண்கிறோம். சப்த மாதர்கள் எழுவரும் அமர்ந்த கோலத்தில் இருப்பர். கன்னிமார்கள் உருவமற்ற நிலையிலும், (ஏழு செங்கல், அல்லது கல்லை நட்டு) போற்றப்படுகின்றனர். சப்த மாதர்களை அழகிய பெண் தெய்வங் களாக அமைத்து வழிபடுவதே வழக்க மாகும்.

மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத் தில் சப்தமாதர்களும், கன்னிமார்களும் ஒரே சந்நிதியில் எழுந்தருளியுள்ளனர். சப்த மாதர்கள் கல் திருமேனிகளாக அமைக்கப் பட்டுள்ளனர். அவர்களுக்குப் பின்னணி யில் மலைத்தொடர் போன்ற அமைப்பும் அதில் கன்னிமார் எழுவரும் குடங்களோடு வீற்றிருப்பதும் சுதை வடிவங்களாக அமைக் கப்பட்டுள்ளன. கன்னிமார் வடிவங்கள் வண் ணம் தீட்டப்பட்டு, பொலிவுடன் விளங்கு கின்றன. இவர்கள் ஏந்தியுள்ள குடங்களில் இருந்து நீர் விழுவது போல் அமைக்கப் பட்டுள்ளது. இக்காட்சி பக்தர்களைப் பரவசப்படுத்துகிறது.

கன்னிமார்கள் நாட்டார் தெய்வங் களாகவும், சப்தமாதர்கள் புராண தெய்வங்க ளாகவும் இருப்பவர்களாவர்.



சப்தமாதர்களும் தேர்த்திருவிழாவும்

ஆலயங்களில் பலவிதமான திரு விழாக்கள் நடைபெறுகின்றன. அதில் யானை, சிங்கம், குதிரை முதலிய பல்வேறு வாகனங்களில் தெய்வங்களை அமர்த்திப் பவனிவரச் செய்து வீதியுலா நடத்துகின் றனர்.

அரிய வகை வடிவு கொண்ட புருஷா மிருகம், சரபி போன்ற வாகனங்களிலும் வெள்ளித்தகடு, தங்கத்தகடு பதித்த விலை மதிப்பு மிக்க வாகனங்களிலும் தெய்வங் கள் பவனி வருவது சிறப்பாக இருக்கின் றது. எவ்வளவுதான் கலை அழகும், விலை மதிப்புமிக்க வாகனங்களில்



தெய்வங்கள் பவனி வந்த போதிலும், தெய்வங்கள் தேரேறி வருவதையே மக்கள் சிறப்புடன் கொண்டாடுகின்றனர். தேரோட் டம் முடிந்த பிறகு ஏறக்குறைய திருவிழா முடிந்து போய் விடுவதாகவே கருது கின்றனர்.

வீதிகளில் பெருந்தேர்கள் ஆடி அசைந்து செல்வது கண்ணுக்கு நிறைந்த காட்சியாக இருக்கிறது.

பெருந் தெய்வங்களைப் போல சிறு தெய்வங்களும் நாட்டுப் புறத் தெய்வங் களும் கூட தேரில் பவனி வந்து காட்சி தரு கின்றனர். குறிப்பாக பிடாரி, காளி, துர்க்கை முதலிய தெய்வங்கள் தேரில் பவனி வருகின்றனர். சில ஊர்களில் இராத் தேர், பகல்தேர் என்று இரு வேளை களிலும் தேரோட்டம் நடத்தப்படுகிறது.

சப்தமாதர்கள் தனித்தனித் தேர்களில் பவனி வருவதாக நாட்டுப்புறக் கதைகள் கூறுகின்றன. நடைமுறையில் ஏழு தேர்கள் இல்லாவிட்டாலும் தொண்டை நாட்டி லுள்ள அனேக சப்தமாதர்கள் கோயிலில் தேரோட்டம் நடந்து வந்துள்ளது. ஏழு பெண்களுக்கும் பொதுவாக பிடாரி என்னும் ஒரு அம்பிகையின் உலாத் திருமேனி அமைக்கப்பட்டு, அத்திருவுரு வமே தேரில் வைத்துப் பவனிவரச் செய்யப்படுகிறது.

சாக்த தந்திரங்களில் வாராகி தனித் தேரில் பவனி வருவதாகக் கூறப்பட்டுள் ளது. லலிதோபாக்யானம் என்னும் நூலில்

வாராகி பவனிவரும் தேரின் அழகு, அந்தத் தேர்த் தட்டில் வீற்றிருக்கும் தேவதைகளின் வடிவம் வனப்பு போன்றவை விரிவாகக் குறிக்கப்பட்டுள்ளன.

சில ஊர்களில் சாமுண்டி, தேரில் பவனி வருகிறாள். புராணம் மற்றும் நாட்டுப்புறச் செய்திகளின்படி,

பிராம்மி - வைதீக ரதத்திலும்
மகேஸ்வரி - மகாரதத்திலும்
கௌமாரி - மயூர ரதத்திலும்
வைஷ்ணவி - சிந்தாமணி ரதத்திலும்
வாராகி - கிரிசக்ர ரதத்திலும்
இந்திராணி - இந்திரஞாலத்தேரிலும்
சாமுண்டி - பேய்த் தேரிலும்(ஞானத்தேர்)

பவனி வருகின்றனர்.

பிராமியின் தேரை அன்னங்களும், மகேசுவரியின் மகா ரதத்தைக் காளைகளும், கௌமாரியின் மயூர ரதத்தை மயில்களும், வைஷ்ணவியின் சிந்தாமணி ரதத்தைத் கழுகுகளும், வாராகியின் கிரி சக்கர ரதத்தைக் காட்டுப் பன்றிகளும், இந்திராணியின் இந்திர ஞானத்தேரை யானைகளும், சாமுண்டியின் பேய்த் தேரை பேய்களும் பூதகணங்களும் இழுத்துச் செல்லுகின்றன.

அன்னை பராசக்தியின் தேரில் கிழக் கில் நாகேசுவரியும் சுற்றிலும் சப்தமாதர்களும் பூசிக்கப்படுகிறாள். இந்தத் தேருக்குச் சாரதியாக பிராம்மி இருக்கின்றாள்.

விதான சிற்ப ஓவியங்களில் சப்தமாதர்கள்



ஆலயங்களில் இறைவன் சந்நிதிக்கு முன்பாக மகாமண்டபம், முக மண்டபம் போன்றவை அமைகின்றன. இவற்றின் கூரையின் உட்பக்கத்திற்கு விதானம் என்பது பெயர். விதானத்தில் பெரிய வட்டமாகத் தாமரை மலர்கள் தேவ வடிவங்கள் போன்றவற்றை அமைக்கின்றனர்.

சில கோயில்களில் விதானத்தில் எட்டிதழ்த் தாமரையை அமைத்து அதன் நடுவில் ஸ்ரீ சக்கரத்தையும், இதழ்களில் கௌரிகை உடனான சப்தமாதர்களையும் அமைக்கின்றனர். நான்கு முனைகளிலும் விநாயகர், பால சாஸ்தா, வீரபத்திரர், யோக சிவன் ஆகியோரை அமைக்கின்றனர்.

திருவான்மியூர் மருந்தீசுவரர் ஆலயத்தில் சோடச சக்தியருடன் சப்த மாதர்களையும் காண்கிறோம். ஆற்காட்டில் உள்ள காமாட்சியம்மன் ஆலய விதான சிற்பத்திலும் சப்தமாதர்கள் இடம் பெற்றுள்ளனர். இதுபோன்று பல கோயில்களில் விதான சிற்பங்களாக சப்த மாதர்களைக் காண்கிறோம்.

குடைவரைக் கோயில்களில் சப்தமாதர்கள்

ஆதியில் மனிதன் குகைகளில் வாழ்ந்தான். நாகரிகம் வளரவளர அவன் பெரும் வீடுகளைக் கட்டிக் கொண்டு வாழத் தலைப்பட்டான். என்றாலும், தாங்கள் வாழ்ந்த குகைகளில் தெய்வங்கள் நீங்காமல் வசிப்பதாகவே நம்பினான். அதனால் மலைமுகடுகளிலும், மலைச் சாரல்களிலும் உள்ள தெய்வீகம் நிறைந்த தாகக் கூறப்படும் குகைகளைத் தேடிச் சென்று, அதற்குள் சுயம்புவாக எழுந்தருளி யிருக்கும் தெய்வங்களை வழிபடும் வழக்கத்தைத் தொடர்ந்து வருகிறான். இமயமலை முதல், தென்பொதிகை வரை யுள்ள அனேக மலை களில் உள்ள எண்ணற்ற குகைகளில் இப்போதும் சிறப்பான வழிபாடு நடைபெற்று வரு கிறது. இமயமலையில் உள்ள வைஷ்ணவி தேவி போன்ற கோயில்கள் மாபெரும் குகைக் கோயில்களாகவே இருக்கின்றன.

பின்னாளில் செங்கல், சுண்ணாம்பு, மரங்களைக் கொண்டு கோயில் கட்டினர் என்றாலும் கலைத் தாகம் கொண்ட மன்னர் கள் குகைகளை நினைவூட்டும் வகையில் பெரும்பாறைகளைக் குடைந்து, கோயில் களை உருவாக்கினர். இவை குடைவரைக் கோயில்கள் என்றும், குகைக் கோயில்கள் என்றும் அழைக்கப்பட்டன.

பல்லவர்களும், பாண்டியர்களும் தமிழ கத் தில் குடைவரைக் கோயில்களை உருவாக்கினர். இவை பெரும்பாலும், சிவன், திருமால், துர்க்கை ஆகியோருக்கு அமைக்கப்பட்டவைகளேயாகும். இவற்றில் சிலவற்றில் சப்தமாதர்கள் திருவுருவங்கள் செதுக்கி அமைக்கப்பட் டுள்ளன. திருப்பரங்குன்றம், மலையடிப் பட்டி, வரிச்சூர், போன்ற குடைவரைக் கோயில்களில் சப்தமாதர் இடம் பெற் றுள்ளனர். இவற்றில் சிலவற்றை இங்கே காணலாம்.

மலையடிப்பட்டி

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள கிரனூர் என்னும் ஊரிலிருந்து ஏறத்தாழ 16 கி.மீ. தொலைவில் மலையடிப்பட்டி என்னும் ஊர் உள்ளது. இங்கு சிவபெரு



மலையடிப்பட்டி குடைவரைக் கோயில் பாறையில் சப்தமாதர்

மானுக்கும் திருமாலுக்குமான குடை வரைக் கோயில்கள் உள்ளன. சிவனுக்கென அமைந்த குடைவரையின் முன்மண்டபத்தை ஒட்டி அமைந்த பாறையில் சப்தமாதர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. முற்காலத்தில் இதில் வண்ணம் தீட்டியிருக்க வேண்டும் என்று கருதுகின்றனர். இங்கு சப்தமாதர்களுடன் விநாயகரும் வீரபத்தி ரரும் உள்ளனர்.

வரிச்சூர்

மதுரையிலிருந்து சிவகங்கை செல்லும் சாலையில் உள்ள வரிச்சூரிலிருந்து 1 கி.மீ. தொலைவில் குன்னத்தூர் என்னும் ஊர் உள்ளது. இவ்வூரின் அருகில் குன்னத்தூர் மலை என்னும் சிறுகுன்று உள்ளது. இதன் இருபுறமும் குடைவரைக் கோயில்கள் உள்ளன. கிழக்கில் உள்ளதை உதயகிரி என்றும் மேற்குப் பகுதியை அஸ்தமான கிரி என்றும் அழைக்கின்றனர்.

இந்தக் குடைவரைக் கோயில்களுக்கு அருகில் அமைந்துள்ள மலையில் மேலும் இரண்டு குடைவரைக் கோயில்கள் உள்ளன. ஒன்றில் சிவலிங்கம் அமைந்துள்ளது. இந்த லிங்கத்தை நீலகண்டேசுவரர் என்று அழைக்கின்றனர். இதன் அருகில் உள்ள நான்காவதான குடைவரையில் சப்தமாதர்கள் செதுக்கி அமைக்கப்பட்டுள்ளனர். இவர்களுடன் வீரபத்திரரும் உள்ளனர். இங்கு வழக்கமாக இருக்க வேண்டிய விநாயகர் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும், பாறையின் மேற்புரத்தில் சப்தமாதர்களுடன் நரசிம்மியும் செதுக்கப்பட்டுள்ளாள். இந்த சப்தமாதர்கள் இரண்டு கரங்களுடன் காட்சி தருகின்றனர். நாரசிம்மி வாள் எந்தியவாறு உள்ளாள்.


திருக்கோகர்ணம்

புதுக்கோட்டையின் ஒரு பகுதியாக இருப்பது திருக்கோகர்ணம். இங்கு பெரும் பாறையை வெட்டி அமைக்கப்பட்ட சிவாலயம் உள்ளது. இந்தச் சிவாலயத்தில் பாறையிலேயே செதுக்கி அமைக்கப்பட்ட சப்தமாதர் திருவுருவங்கள் உள்ளன. இவை மிகுந்த கலைநயம் மிக்கவை.பல்லவர்கள் படைத்த அற்புதக்கலைவடிவங்களில் இதுவும் ஒன்றாகும்.



புதுக்கோட்டை திருக்கோகர்ணம் சப்தமாதர் திருவுருவங்கள்

பலிபீட வடிவில் சப்தமாதர்கள்



உக்ரமயமான அல்லது யோக நிலையில் வீற்றிருக்கும் தெய்வங்களை உருவமாக அமைக்காமல் அவர்களை அருவமாக பலிபீடங்களில் எழுந்தருளிவைத்து வழிபடும் வழக்கம் தொன்றுதொட்டு இருந்து வருகிறது. இந்தப் பலிபீடங்களைத் தமிழில் மலர்ப்பீடிகை என அழைக்கின்றனர்.

கேரளாவில் சப்தமாதர்கள் வழிபாடு பீடவடிவிலேயே உள்ளது. இங்குள்ள சைவ ஆலயங்களில் மட்டுமின்றி, வைணவ, சாக்த ஆலயங்களிலும் சப்த மாதர்கள் மந்திரப் பூர்வமாகப் பீடங்களில் வழிபடப்படுகின்றனர். இவர்களையும், பரிவாரங்களையும் உருவமாக அமைக்காமல் பலிபீட வடிவில் அமைத்து வழிபடுகின்றனர்.

கேரளத்து சக்தி ஆலயங்களிலும் சிவாலயங்களிலும் சப்தமாதர்களைத் திருமாளிகையில் மரச் சிற்பங்களாகவும், சுற்றாலையில் அஷ்ட பரிவாரங்களில் ஒன்றாகப் பலிபீட வடிவிலும் பூசிக்கின்றனர். கேரளாவில் இப்போதுள்ள பூசைமுறை பரசுராமரால் வகுத்தளிக்கப்பட்டதாகக் கூறுகின்றனர். இதில் அனைத்துத் தெய்வங்களைச் சுற்றிலும் அஷ்டதிக்குப் பாலகர்கள் அஷ்ட பரிவாரங்கள் ஆகியோர் பலிபீட வடிவில் அமைக்கப்பட்டுப் பூசிக்கப்படுகின்றனர்.

இந்த அமைப்பில் சப்தமாதர்களைக் குறிக்கும் வகையில் ஏழு பலிபீடங்கள் அமைத்துப் பூசிக்கப்படுகிறது. ஒரு நீண்ட செவ்வக வடிவிலான பீடத்தில் கிழக்கு மேற்காக இந்த ஏழு பலிபீடங்களும் அமைக்கப்பட்டுள்ளன. இவை ஏழும் சப்த மாதர்களைக் குறிப்பதாகும்.

கிழக்கில் உள்ள முதல் பலிபீடத் திற்கும். மேற்கில் உள்ள பலிபீடத்திற்கும் ஆக இரண்டு பீடத்திற்கும் வடக்கில் இரண்டு பலி பீடங்கள் அமைக்கப்பட் டுள்ளன. கிழக்குப் பக்கம் இருப்பது விநாய கருக்கும்,மேற்குப் பக்கம் இருப்பது பிரம்ம சாத்தனுக்கும் உரியதாகும். இந்த ஒன்பது பலிபீடங்களையும் ஒரே கல்லில் செதுக்கி வழிபடும் நிலையே பரவலாக இருக்கின் றது. இது சப்தமாதர் கோயில் வழிபாட்டில் பெற்றுள்ள பெருநிலையைக் குறிப்பதாக உள்ளது.

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தின் பிராகாரத்தில் திருவுருவங்களாகவும், தட்சிணாமூர்த்திக்கு முன்பாக ஒன்பது பலிபீடங்கள் வடிவிலும் ஆக இரண்டு நிலைகளிலும் சப்தமாதர்கள் வழிபடப்படுகின்றனர்.

அஷ்டசக்தி மண்டபம்

மதுரை மீனாட்சியம்மன் ஆலயத்தில் மீனாட்சி சந்நிதிக்கு நேராக நெடிய தூண் களைக் கொண்ட விசாலமான முக மண்டப மாக இருப்பது அஷ்டசக்தி மண்டபமாகும். இதிலுள்ள எட்டுத்தூண்களில் நெடிய வடிவில் எட்டுச்சக்திகளின் வடிவங்கள் அமைந் துள்ளன. இந்த எட்டுச் சக்திகளின் பெயரா லேயே இது அஷ்டசக்தி மண்டபம் என்று அழைக்கப்படுகிறது. இந்தச் சக்திகளின் வடிவம் ஒரு பெண்ணின் உயரத்திற்கும் அதிகமானது, கம்பீரமானது. இந்த அஷ்ட சக்திகள் முறையே பிராமி, மகேசுவரி, இந்திராணி, மகாலட்சுமி, மனோன்மணி, வைஷ்ணவி, கௌமாரி, ரௌத்திரி எனும் எண்மராவர். சப்த மாதர்களில் இதில் வாராகிக்குப் பதில் மனோன்மணி இடம் பெற்றுள்ளார். எட்டா வது சக்தியாக துர்க்கை, கௌரிகை, மகா லட்சுமி ஆகியோரில் ஒருவரை வைத்து வழி படுவது வழக்கம். அவ்வகையில் இங்கு எட்டாவது சக்தியாக மகாலட் சுமியைக் காண்கிறோம்.

இந்த எட்டுச் சக்திகளும் நின்ற நிலையில் உள்ளனர். எல்லோரும் முன் கரங்களில் அபய, வரத முத்திரைகளைத் தாங்கியுள்ளனர். பிராமி வழக்கம் போல் நான்கு முகங்களோடு இல்லாமல், ஒரே முகத்துடன் காணப்படுகிறாள். மேற்கரங்


பிராமி,


மகேசுவரி


கௌமாரி


வைஷ்ணவி



இந்திராணி,



மகாலட்சுமி,



ரௌத்திரி



மனோன்மணி, , ,

களில் வேள்வி செய்வதற்குரிய ச்ருக், சுருவம் ஆகிய ஹோம கரண்டிகளை ஏந்தி யுள்ளாள். மகாலட்சுமி மேற்கரங்கள் இரண்டிலும் தாமரைகளையும், இந்தி ராணி மேற்கரங்கள் இரண்டிலும் வஜ்ரா யுதங்களையும், கௌமாரி மேற்கரங்களில் சக்தி வஜ்ர ஆயுதங்களையும், மகேசுவரி மான் மழுவையும் ஏந்தியுள்ளனர்.

சப்தமாதர்கள் இங்கு மகாலட்சுமி யுடன் அஷ்டமாதர்களாக இருந்து அருள் பாலித்துக் கொண்டிருக்கின்றனர். இந்த மண்டபத்தில் மீனாட்சி பட்டாபிஷேகம் , காஞ்சனமாலை மடியில் அமைந்துள்ள மீனாட்சி, திக்விஜய மீனாட்சி போன்ற சுதைச் சிற்பங்கள் கண்ணையும் கருத்தை யும் கவர்வது ஆகும்.

சிவாகமங்கள் அஷ்டசக்திகளாக 1. வாமை 2. ஜேஷ்டை 3. ரௌத்ரியை 4. காள்யை5.கலவீகரணி6. பலவீ கரணி 7.பலப்பிரதமை 8.சர்வ பூததமணி 9. மனோ ன்மணி ஆகிய எட்டு சக்தி களைக் கூறு கின்றன. இங்கு சப்த மாதர் களுடன் வரிசை யில் வாராகியை நீக்கி விட்டு, மனோ மணி யையும் மகாலட்சுமி யையும் சேர்த்து அஷ்டசக்திகளாக அமைத் துள்ளனர்.

இங்கே சப்தமாதர்கள் நின்ற நிலையில் இருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

திருப்பரங்குன்றத்துச் சப்தமாதர்கள்


திருப்பரங்குன்றம் முருகன் ஆலயத்தில் சப்தமாதர்கள் தனிக்குடைவரையில் அமைக்கப்பட்டுள்ளனர். இந்த உருவங்கள் இப்போது சிதைந்துள்ளன. மேலும் இந்த குடவரையை நிர்வாகத்தினர் பொருள் வைப்பறையாகப் பயன்படுத்துகின்றனர். பாண்டியர் அமைத்த சப்தமாதர்களின் அரிய புடைப்புச் சிற்பம் சிதைந்தும் வழிபாடின்றியும் இருப்பது வருந்தத் தக்கதாக இருக்கிறது.

ஆலயங்களில் அலங்காரச் சுதைச் சிற்பங்களாக சப்தமாதர்கள்

சென்ற நூற்றாண்டிற்கு முன்பு வரை கிராமிய தெய்வங்கள், மாரியம்மன் போன்ற பெண் தெய்வ ஆலயங்கள் அளவால் சிறியதாக இருந்தன. அவற்றிற்குக் குறிப்பட்ட நாட்கள் மட்டுமே பூசைகளும் விழாக்களும் நடத்தப்படும் என்ற நிலை இருந்தது. பிறகு அந்நிலை மாறி நித்திய பூஜைகளும் ஆடி, தை மாதங்களில் பெரிய திருவிழாக்களும் நடைபெறும் வழக்கம் வந்து விட்டது. கோயில்களும் பெரியதாகக் கட்டப்பட்டன. கோபுரங்களும் மண்டபங்கள் மீது அலங்கார வளைவுகளும் அமைக்கப்பட்டு, அதில் பல்வேறு பெண் தெய்வங்களின் திருவுருவங்கள் அமைக்கப்பட்டன. சுதையால் செய்து வண்ணம் தீட்டப்பட்டுப் பொலிவுடன் காட்சி தருகின்றன. இவ்வரிசையில் சப்தமாதர்களின் திருவுருவங்கள் தனியிடம் பெறுகின்றன. அழகிய தனித்தனி வளைவுகள் அமைக்கப்பட்டு, அதில் பெரிய உருவங்களாக பிராமி முதலான எழுவரும் அமைக்கப்பட்டுள்ளனர். சென்னையில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்தெய்வ ஆலயங்களில் பெரிய சப்தமாதர் சிற்பங்களைக் காண்கிறோம்.

சென்னை அமைந்தகரை, திருவல்லிக்கேணி எல்லையம்மன், ஆழ்வார்பேட்டை என சிறப்பு மிக்க அம்மன் கோயில்களில் சப்தமாதர்கள் மதில்சுவர், கோபுரம், விமானம், மண்டபங்கள் மீதில் அமைக்கப்பட்டுள்ளனர்.

இத்திருவுருவங்கள் வண்ணம் தீட்டி வனப்புடன் காட்சி தருகின்றன



சப்தமாதர்கள் வழிபாட்டில் நரசிம்மரும் நரசிம்மியும்

திருமாலின் அவதாரங்களில் வராகம் என்னும் பன்றி அவதாரமும், மனித உடலும் சிங்கத்தலையும் கொண்ட நரசிம்ம அவதாரமும் அடுத்தடுத்து நிகழ்ந்த தவைகளாகும். இவை அண்ணனும் தம்பி மாய் இருந்த இரணியாட்சசன், இரணியக் கசிபு என்னும் அரக்க சகோதரர்களை அழிக்க எடுத்த அவதாரங்களாகும்.

பூமியைக் கடலுக்கு அடியில் ஒளித்து வைத்திருந்து துன்புறுத்திய இரணியாட்ச



சனைத் திருமால் பெரிய வெண்பன்றி வடிவுடன் சென்று, அவனைக் கொன்று, பூமியை மீண்டும் பழையபடி வைத்தார். அவன் மாண்டபின் அவனது தம்பி இரணியாட்சன் முடிசூடி அரசனானான். அவனைத் திருமால் நரசிம்ம வடிவுடன் சென்று அழித்தார். மக்கள் அவரது வராக அவதாரத்தையும், நரசிம்ம அவதாரத்தை யும் போற்றி வழிபடுகின்றனர். திருமால் தனது நரசிம்ம அவதாரத்தின் ஒரு அம்சத் தினை அப்படியே பாதாளத்தில் இருந்து அருள்பாலிக்கும்படிச் செய்தார். அந்த அம்ச நரசிம்மர் பாதாளலோகம் சென்று சிரஞ்சீவியாக வாழும் மகாபலிச் சக்கர வர்த்தியின் மாளிகைக்குக் காவல் தெய்வ மாக இருந்து வருகின்றார்.

அந்தகாசுர வதத்திற்குப் பின், அவனை வதம்செய்யத் தோற்றுவித்த அஷ்ட பைர வர்களைச் சிவபெருமான் பாதாள உலகில் சென்று வசிக்கும்படிக் கூறினார். அவர்கள் சப்தமாதர்களை அழைத்துக் கொண்டு பாதாளம் சென்றனர். சப்தமாதர்கள் அகங்காரத்தால் அங்கிருந்த நரசிம்மரை மதித்துத் தொழவில்லை. அதனால் கோபம் கொண்ட நரசிம்மர் அவர்களை இழுத்துத் தம் உடலில் ஒடுக்கிக் கொண்டார். அவர் கள் அவரது மேனியில் கலந்து மறைந்து விட்டனர்.

அஷ்டபைரவர்கள், நரசிம்மரிடம் அவர்களை மன்னித்து வெளிவிடுமாறு வேண்டினர். அவர், அவர்களது வேண்டு

கோளை ஏற்று, சப்தமாதர்களை வெளியே விட்டார். அவர்களுக்குப் பல வரங் களைத் தந்தார். அப்போது அவர் உடலில் இருந்து அவரைப் போலவே ஒரு சக்தி தோன்றி சப்தமாதர்களுடன் இணைந்தது அந்தச் சக்தியே நாரசிம்மி எனப்படுகிறது.

நரசிம்மருடன் இந்த எட்டுச் சக்தி களையும் சேர்த்து வழிபடும் வழக்கம் இருந்ததாகக் கூறுகின்றனர். நரசிம்மரைச் சுற்றி அஷ்டபரிவாரங்களாக இந்த அஷ்ட சக்திகளை எழுந்தருளுவித்து வழிபட் டால், பகைவர்கள் நாசம் அடைவர்; பாது காப்பு கிடைக்கும் என்று உறுதியாக நம்பு கின்றனர்.

சில சப்தமாதர்கள் வரிசையில் நார சிம்மியும் இடம் பெற்றுள்ளாள். இவள் சிங்கமுகம் கொண்டவள். மேற் கரங்களில் சங்கு, சக்கரம் ஏந்தி கீழ்க்கரங்களில் அபய, வரத முத்திரைகளைத் தாங்கியுள்ளாள். சில வடிவங்களில் வலது முன்கை, அபய முத்தி ரை காட்ட இடது கரத்தைக் தண்டு (தண் டத்தின்) மீது ஊன்றியவளாகவும் காட்சி தருகிறாள்.

மதுரை மாவட்டம் மதுரையை அடுத் துள்ள வரிச்சூரில் அமைந்துள்ள குடை வரைக் கோயிலில் சப்தமாதர் தொகுதியில் பிராம்மியையும் காண்கிறோம். அதிக அளவில் காணப்படாவிட்டாலும் நரசிம்ம வழிபாடு தனிச் சிறப்பு கொண்டதாக இருக்கிறது.



ஸ்ரீ சக்கரத்தில் துணைத் தெய்வங்களாக சப்தமாதர்கள்

சக்தி வழிபாட்டில் ஸ்ரீசக்கரம் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ளது. இதில் அனேக தேவ தைகளை நிலைப்படுத்திப் பூசிக்கின்றனர். ஸ்ரீசக்க ரத்தின் வெளியில் கோட்டை போன்று மூன்று கோடு கள் உள்ளன. இவற்றில் நடுக்கோட்டில் கிழக்கில் பிராம்மியும், தெற்கில் மகேசுவரியும், மேற்கில் கௌமாரியும், வடக்கில் வைஷ்ணவியும், தென் கிழக்கில் வாராகியும், தென்மேற்கில் இந்திராணியும் வடமேற்கில் சாமுண்டியும், வடகிழக்கில் துர்க்கை யும் வழிபடப்படுகின்றனர்.

சப்தமாதர் அஷ்டோத்திரம்

சப்தமாதர்களைப் பரிவார தெய்வங்களாகவே போற்றுகின்றனர். அவர்களுக்குத் தியான சுலோகங்கள், காயத்ரி மந்திரங்களை ஓதியே பூசை செய்கின்றனர். அவர்களுக்கென அர்ச்சனையாக அஷ்டதோத்திரம், திரிசதி, சகஸ்ரநாமம் போன்றவை வழிபாட்டில் அதிகம் இல்லை. **சிதம்பரம் பிரம்மஸ்ரீ வேதநிதி பரமேஸ்வர தீக்ஷிதர் அவர்கள்** அரிதின் முயன்று **சப்தமாதர்களுக்கான அஷ்டோத்திரத்தை** அச்சிட்டு வெளிப்படுத்தியுள்ளார்கள்.

கேரளாவில் சப்தமாதர் வழிபாடு

கேரளத்திலுள்ள பெரும்பாலான ஆலயங்களில் பரசுராமர் வகுத்தளித்த விதிப்படி, கருவறையைச் சுற்றிலும் அஷ்ட திக்குப் பாலகர்களும், அஷ்டபரிவாரங்களும், பலிபீட வடிவில் நிலைப் படுத்தப் பட்டுப் பூசிக்கப்படுகின்றனர். இந்த முறையானது சைவக் கோயில்களில் மட்டுமின்றி வைணவ, சாக்த ஆலயங்களிலும் காணப்படுகிறது. இந்தப் பலிபீடங்களில், வடகிழக்கின் திசைப் பாலனான ஈசானனை மட்டும் பலிபீடமாக அமைக்காமல் சிவலிங்கமாக அமைத்து வழிபடுகின்றனர். இந்த அஷ்ட பரிவாரங்களில் ஒன்றாகச் சப்தமாதர்களும் இடம் பெற்றுள்ளனர்.

தெற்குப் பிராகாரத்தில் ஏழு மாதர்களைக் குறிக்கும் வகையில் ஏழு பலிபீடங்கள், ஒரே வரிசையாக கிழக்கு மேற்காக அமைக்கப்பட்டுள்ளன. இந்த வரிசையின் முதலிலும் முடிவிலும் (கிழக்கிலும் மேற்கிலும்) உள்ள பலிபீடங்களை யொட்டி) அவற்றிற்கு வடக்கில் மேலும், இரண்டு பலிபீடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவை விநாயகரையும் பிரம்ம சாத்தனையும் குறிக்கும் வகையில் அமைக்கப் பட்டுள்ள பலிபீடங்களாகும். இந்தப் பலிபீடங்களில் மந்திர பூர்வமாக சப்த மாதர்கள் வழிபடப்படுகின்றனர்.

சில தலங்களில் மட்டும் வழக்கமாக அமைக்கப்படும் பலிபீடங்களோடு சப்த மாதர்களின் திருவுருவச் சிலைகளும் வைத்துப் பூசிக்கப்படுகின்றன. கொடுங்கல்லூர் பகவதி ஆலயம் என்று அழைக்கப்படும் மகாதேவர் ஆலயத்தில் தனிச் சந்நிதியில் சப்தமாதர்களை அமைத்திருக்கின்றனர்.

சுந்தரர் முக்தி பெற்ற தலமான திருவஞ்சைக்களம் அஞ்சைக் களத்தப்பர் ஆலயத்தில் ஒரு மீட்டர் உயரத்தினாலான சப்தமாதர்களின் மரச் சிற்பங்கள் தனிச் சந்நிதியில் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளன. இவை வண்ணம் தீட்டப்பட்டு அழகுடன் காட்சியளிக்கின்றன. இவற்றிற்குத் தினசரி வழிபாடுகள் செய்யப் படுகின்றன.

சில பகவதி ஆலயங்களின் நிலைப் படுத்தப்பட்டுள்ள கொடி மரங்களில், கண்டப்பகுதியின் எட்டுத் திக்கிலும் சப்தமாதர்களின் வடிவங்கள் விநாயகருடன் அமைக்கப்பட்டுள்ளன.

கேரளத்தில் பெரும்பாலான ஆலயங்களில் சப்தமாதர் வழிபாடு சிறப்புடன் மந்திரப்பூர்வமாக நடைபெற்று வருகிறது.



சென்னையில் சப்தமாதர் வழிபாடு

தமிழகத்தின் தலைநகரமாக விளங்கும் சென்னையில் சப்தமாதர் வழிபாடு முன்னாளில் சிறப்புடன் திகழ்ந்து வந்துள்ளதைப் பழைய வரலாறுகளும், செவி வழிச் செய்திகளும்

தென்சென்னைப் பகுதியில் உள்ள பழம்பெரும் சிவப்பதி வேளச்சேரியாகும். இது வேளிர்கள் வாழ்ந்த பகுதியானதால் வேளிர்சேரி என்று அழைக்கப்பட்டு, வேளச்சேரி ஆனதெனக் கூறுகின்றனர். புராணமொன்றில் இது வேள்விகள் நடைபெற்ற இடமென்றும், அதை யொட்டி வேள்விச்சேரி என்று அழைக்கப்பட்டு, வேளச்சேரி ஆனதென்று கூறப்பட்டுள்ளது. இங்கு யமதருமன் வழிபட்ட தண்டீசுவரர் ஆலயம் உள்ளது. இவ்வூரின் காவல்

சென்னை கொண்டித்தோப்பில் கிருஷ்ணாங்குளக்கரை காசி விசுவ நாதர் ஆலயத்து சப்த மாதர்கள்





தெய்வமாக சப்தமாதர்கள் எழுந்தருளி உள்ளனர். இந்த சப்தமாதர் கோயில் இந்நாளில் செல்லி அம்மன் கோயில் என்று அழைக்கப்படுகிறது.

இதிலுள்ள சப்தமாதர் திருவுருவங் கள், பல்லவர் காலத்தைச் சேர்ந்த தொன்மையானவை என்று தொல்லியல் துறையினர் கூறுகின்றனர்.


சென்னையில் வடபகுதியில் திரு வொற்றியூர் என்னும் தலம் இருக்கின்றது. இங்குள்ள தியாகராஜர் ஆலயம் சுந்தரரும், திருஞானசம்பந்தரும் பாடிய தேவாரப் பாடல்களைக் கொண்டதாகும். இந்த தியாகராஜர் கோயில் இராஜேந்திர சோழனால் கற்றளி ஆக்கப்பட்டதாகும். இங்கு சப்தமாதர்கள் எழுந்தருளி வைக்கப் பட்டுள்ளனர். (விரிவை பக்கம் 000ல் காண்க)

சென்னையின் மேற்குப் பகுதியில் இருப்பது (போரூரை அடுத்த) ஆலப் பாக்கம் ஆகும். இங்கு ஏழு பிடாரி அம்மன் கோயில் என்ற பெயரில் சப்த மாதர் ஆலயம் உள்ளது. இது பல்வேறு திருப்பணிகளைப் பெற்று புதிய பொலிவுடன் விளங்குகிறது. இக்கோயில் நவக்கிரகம், விநாயகர் முதலி யோர் எழுந்தருளி வைக்கப்பட்டுள்ளனர்.

சென்னையில் பல சப்தமாதர்கள் கோயில் காலஓட்டத்தில் வேறு கோயில் களாக மாறிவிட்டதையும் அறிய முடிகிறது.

சென்னை கொண்டித்தோப்பில் கிருஷ்ணாங்குளக்கரையில் காசி விசுவ நாதர் ஆலயம் உள்ளது. இங்கு சப்த மாதர்கள் எழுந்தருளியுள்ளர்.

மயிலாப்பூரின் காவல்தெய்வமான கோலவிழியம்மன் கோயில், முண்டகக் கண்ணியம்மன் கோயில் முதலானவற்றில் சப்தமாதர்கள் வழிபாடு சிறப்புடன் நடை பெற்று வருகின்றன.





சிவமயம்

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறைஆதீனம்

இருபத்துமூன்றாவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீசிவப்பிரகாச தேசிக மூர்த்திகள்

இரண்டாம் ஆண்டு குருபூஜை விழா பத்திரிகை

(கார்த்திகை-சதயம்)ஜய ஆண்டு, கார்த்திகை 13, (29-11-2014) சனிக்கிழமை

ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக மூர்த்திகள் துதி

பவப்பெருங் கடலைக் கடந்திடு தற்குப் பரமன் வகுத்த அருள்நெறியை
உவப்புடன் உயிர்கள் கடைப்பிடித் துய்ய உதவும் துறைசை ஆதினத்தில்
தவப்பிர காசம் தரணியில் ஓங்கத் தண்ணருட் செங்கோல் ஓச்சியஎம்
சிவப்பிர காசத் தேசிகன் மலர்த்தாள் சென்னியிற் கொண்டு போற்றுதுமே.

சிவநேயச் செல்வரீர்,

திருக்கயிலாய பரமபரைத் திருவாவடுதுறை ஆதீனத்துக் குருபீடத்தில் இருபத்து மூன்றாவது ஆசாரிய மூர்த்திகளாக விளங்கியவர்கள் ஸ்ரீ சிவப்பிரகாச தேசிகர் ஆவர்.

திருநெல்நெல்வேலி மாவட்டத்து விக்கிரமசிங்கபுரத்தில் பரம்பரைச் சைவ நன்மரபில் தோன்றியவர்கள். 07.04.1983 முதல் 22.11.2012 வரை ஆதீன ஞான பீடத்தில் எழுந்தருளி ஆருளாட்சி செய்தவர்கள். இவர்கள் தம் அருளாட்சிக் காலத்தில் சிவக்ஷேத்ர, குருக்ஷேத்ர பரிபாலனங்களுடன் சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையமும், சைவத் திருமுறை நேர்முகப் பயிற்சி மையமும் நிறுவித் தமிழகம், பிற மாநிலங்கள், இலங்கை, மலேசியா ஆகிய இடங்களில் சைவ வகுப்புகள் சிறப்பாக நடைபெறச் செய்தருளினார்கள். சைவ சித்தாந்த அறிஞர்கள், திருமுறை வாணர்கள, சிவாச்சாரியார்கள். தமிழறிஞர்கள் முதலான பல்துறையினர்க்கும் விருதுகளும் பொற்கிழிகளும் வழங்கி அருளினார்கள். இவர்கள் நந்தன ஆண்டு கார்த்திகை மாதத்து சதய நாளன்று (22.11.2012) சிவபரிபூரணமாகிய சுத்தாத்துவித முத்தியடைந்தார்கள்.

இக்குருபூஜை விழா திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனம் 24ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக பரமாசாரிய சுவாமிகள் அவர்களின் திருவுளப் பாங்கின் வண்ணம், நிகழும் ஜய ஆண்டு கார்த்தி மாதம் 13ஆம் நாள் (29.11.2014) சனிக்கிழமை ஸ்ரீ சிவப்பிரகாச தேசிக மூர்த்திகளின் குருமூர்த்தத்தில் சிறப்பு அபிஷேகம், பூஜை, மாகேஸ்வர பூஜை ஆகிய வழிபாட்டு நிகழ்வுகளுடன் விழா மலர் வெளியீடும் சிவநெறிச் சிந்தனைக் கருததரங்கமும், ஓதுவாமூர்த்திகள், அடியார் பெருமக்களுக்குச் சிறப்பு விருதுகள், வழங்கியருளலும் நடைபெற உள்ளன. அன்பர்கள் அனைவரும் வருகை தந்து குருவருள் பெற்றுய்யப் பெரிதும் விரும்புகிறோம்.

திருவாவடுதுறைஆதீனம்
09-11-2014

இங்ஙனம்,காறுபாறு வைத்தியநாதத்தம்பிரான்
திருவாவடுதுறைஆதீனம்

நிகழ்ச்சி நிரல்

காலை 8.30 திருமுறை விண்ணப்பம்

சைவத்திரு.சிங்கை. எஸ்.சௌந்தரராஜ ஓதுவாமூர்த்திகள் அவர்கள், விக்கிரமசிங்கபுரம்

காலை 9.00வரவேற்புரைஸ்ரீமத் சுப்பிரமணியத் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், திருவாவடுதுறை ஆதீனம்

காலை 9.12 சிறப்பு விருந்தினர் சிவத்திரு. ராஜா என். குமரன் சேதுபதி எம்.பிஏ. அவர்கள்,

தலைவர், மதுரைத் தமிழ்ச் சங்கம், தக்கார், ஸ்ரீ இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்

சிறப்புரை - மாண்பமை ஜி. இராஜகோபாலன் அவர்கள், Additional solicitor General of India

காலை 9.30 சொற்பொழிவு

சைவ உரைநெறிச் சீராளர், சைவத்திரு. முனைவர். மு அருணகிரிஅவர்கள்,

முதல்வர் (பணிநிறைவு) ஸ்ரீ தியாகராஜர் கல்லூரி, மதுரை பொருள் : திருவாசகத்தில் குருவருள்

காலை 10.25 – விழாமலர் அறிமுகம்

சிவஞான சுவாமிகள் அடிப்பொடி, சைவ சித்தாந்தப் பேரொளி, ஆதீனப் புலவர். சு. குஞ்சிதபாதம் அவர்கள், திருவாவடுதுறை

மலர் : குருபரம்பரை விளக்கம் (ஆதீன வரலாறு)

காலை 10.45 நூல் அறிமுகம்சிவமஞ்சரிச் செம்மல். சைவத்திரு. பூசை. ஆட்சிலிங்கள் அவர்கள், சென்னை

நூல் அருள்மிகு அன்னையர் எழுவர் (ஸ்ரீ சப்த மாதர்கள்)

காலை 11.00 மகிழ்வுரை சைவத்திரு மு. ஞானமூர்த்தி எம்.ஏ.பி.எட், அவர்கள்,

தலைமையாசிரியர், தி.ஆ.மேனிலைப் பள்ளி திருவிடைமருதூர்

காலை 11.15 குருமூர்த்தி சிறப்பு அபிஷேக வழிபாடுகள்
நண்பகல் 12.00 மகா தீபாராதனை

ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஓதுவாமூர்த்திகள் ஆகியோருக்கு ஸ்ரீ நமசிவாய மூர்த்திகள் ஆசிக்கவசமாகப் பொன்னடை போர்த்தி, உருத்திராக்க மாலை அணிவித்து பொற்கிழி ரு.5000/-மும் சிறப்பு விருதுகளும் வழங்கி வாழ்த்தியருளுகின்றார்கள்.

1.சைவத்திரு.சிங்கை எஸ். சௌந்தரராஜ ஓதுவாமூர்த்திகள் அவர்கள், விக்கிரமசிங்புரம்.

விருது. தெய்வத் தமிழிசைச் செல்வர்

அண்டவாணன் அருள்துறை சைவத்திரு இரா. செந்தில்குமார் அவர்கள், கோயம்புத்தூர்

விருது : குருகைங்கர்ய சிகாமணி

(ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், இவ்வாண்டு முதல் குருகைங்கர்யம் செய்யும் அடியார் ஒருவருக்கு குருகைங்கர்ய சிகாமணி எனும் விருதும், பொற்கிழியும் வழங்கியருளுகின்றார்கள்.)

3. சைவத்திரு மகேஷ்சர்மா என்கிற பி. சந்திரசேகர சர்மா அவர்கள், அறங்காவலர், செயலாளர், ஸ்ரீமகாலிங்கசுவாமி சேவா டிரஸ்ட், கோயம்புத்தூர்.விருது : திருப்பணித் திருத்தொண்டர்

(ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள், இவ்வாண்டு முதல் சிவாலயத் திருப்பணியில் திருத்தொண்டு செய்யும் அடியார் ஒருவருக்கு திருப்பணித் திருத்தொண்டர் எனும் விருதும், பொற்கிழியும் வழங்கி யருளுகின்றார்கள்.)

விழா மலர் வெளியீடு : குருபரம்பரை விளக்கம் (ஆதீன வரலாறு)முதல் பிரதி பெறுவோர்:

இராஜா. சிவத்திரு. என். குமரன் சேததுபதி எம்.பி.ஏ, அவர்கள், தலைவர், மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மாண்பமை ஜி. இராஜகோபாலன் அவர்கள்,

நூல் வெளியீடு : அருள்மிகு அன்னையர் எழுவர் (ஸ்ரீ சப்தமாதர்கள்) முதல் பிரதி பெறுவோர் :

சைவத்திரு. முனைவர் மா. பாலசுப்பிரமணியன் அவர்கள்,தலைவர், சைவ சித்தாந்த சபை, பேரூர், கோயம்புத்தூர்

தொடர்ந்து அன்பர்கள் அனைவருக்கும் அருட்பிரசாதம் வழங்கி அருளுகின்றார்கள்.

மதியம் 1.00 மாகேஸ்வர பூஜை (ஆதினத் தலைமை மடம்


கௌமாரி


வைஷ்ணவி


ஸ்ரீசாமுண்டி


ஸ்ரீகணநாதர்

குழந்தைகளோடு வீற்றிருக்கும் அன்னையர்

